பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 10 திங்கட்கிழமை (26.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 242

# யுத்தக் குற்றங்களை விசாரிக்கக் கோரி லண்டனிலிருந்து புறப்பட்டது பாதயாத்திரை

## ஜெனிவாவில் ஐ.நாவிடம் மகஜர் கையளிக்கப்படும்

லண்டன், ஜூலை 26

இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக சுதந்திர சர்வதேச விசாரணை வேண்டும் எனக் கோரி லண்டனில் இருந்து ஜெனிவாவில் உள்ள ஐ.நா. அலுவலகம் நோக்கி நீண்ட தூர பாதயாத்திரை ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

பிரிட்டிஷ் தமிழர் பேரவை ஏற்பாடு செய்துள்ள இந்தப் பாத யாத்திரையின் ஆரம்ப தினமான வெள்ளிக்கிழமை இரவு சுமார் இரண்டாயிரம் பேர் கலந்து கொண்டனர்.

* இலங்கை அரசு மீது போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும்.
* தடுப்பு முகாம்களில் உள்ள போராளிகள், பொதுமக்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். முகாம்களில் உள்ளவர்களைப் பார்வையிட அனுமதிக்கவேண்டும்.
* மனித உரிமைகளை மதித்து செயற்படும்வரை இலங்கையைப் புறக்கணிக்க வேண்டும்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் பஸ் வேலைநிறுத்த அச்சுறுத்தல்

கொழும்பு, ஜூலை 26

மேல் மாகாண பஸ் உரிமையாளர் சங்கம் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்துள்ளது.

இதேவேளை, வேலைநிறுத்தத்திற்கு இலங்கைப் (24ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியக் குழு இலங்கை வருமுன் டில்லிக்கு பஸில் தலைமையில் குழு

### மீள்குடியமர்வு, புனர்வாழ்வு குறித்து விளக்கம்

கொழும்பு, ஜூலை 26

இலங்கையில் யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது, அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பது போன்ற செயற்பாடுகளைப் பார்வையிட இந்தியக் குழு இலங்கை வரவுள்ள நிலையில், இந்த விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்க அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான குழுவொன்று இந்தியா செல்ல உள்ளது.

வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவிக்கின்றன.

(24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர் ஒருவர் லண்டன் விபத்தில் பலி!

கொழும்பு, ஜூலை 26

பிரிட்டனில் இடம்பெற்ற வீதி விபத்தில் இலங்கைத் தமிழர் ஒருவர் உயிரிழந்தார்.

லண்டனில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் சைக்கிளில் பத்திரிகை விநியோகம் செய்துகொண்டிருந்தபோது வாகனம் ஒன்று மோதியதாலேயே அவர் உயிரிழந்தார் எனத் (24ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகள் எனக் கூறிவரும் இலங்கையர்களை சர்வதேச நாடுகள் ஏற்றுக்கொள்ளக் கூடாது

### எச்சரிக்கிறது அரசு

கொழும்பு, ஜூலை 26

இலங்கையிலிருந்து அகதிகள் எனக் கூறிக்கொண்டு வருபவர்களின் புகலிடக் கோரிக்கையை ஏற்கின்றமை சட்டத்துக்கு புறம்பான ஆள்கடத்தல், சட்டவிரோதக் குடியேற்றம் ஆகியவற்றை ஊக்குவிப்பதாக அமையும் - என்று சர்வதேச சமுதாயத்தை அரசு எச்சரித்துள்ளது.

இதனால் எந்தவொரு நாடும் இலங்கையில் இருந்து வருபவர்களின் புகலிடக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவே கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளது.

வியட்நாமில் இடம்பெற்ற ஆசியான் பிராந்திய நாடுகளுக்கான 17 ஆவது மாநாட்டில் கலந்துகொண்ட வெளிவிவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் கிதாஞ்சன குணவர்த்தனவே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:

சிறு படகுகளில் ஆள்களையும் பொருள்களைக் கடத்தி வருபவர்களையும் , சட்டத்துக்குப் புறம்பாக கடல்வழியே ஊடுருவுபவர்களையும் (24ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளைவானில் கடத்தப்பட்ட வர்த்தகர் கப்பம் செலுத்திய பின்னர் விடுவிப்பு

### வவுனியா தோணிக்கல் வீதியில் பரபரப்புச் சம்பவம்

வவுனியா, ஜூலை 26

வெள்ளைவானில் வந்தோரால் கடத்தப்பட்ட வவுனியா வாடிவீட்டு உரிமையாளர் 6 லட்சம் ரூபா கப்பம் செலுத்திய பின் விடுவிக்கப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு வவுனியா தோணிக்கல் வீதிப்பகுதியில் (24ஆம் பக்கம் பார்க்க)

## 'உதயன்' பிரதம ஆசிரியருக்கு சாதனையாளர் விருது



அதிசிறந்த ஊடகவியலாளர்களுக்காக ஆண்டுதோறும் விருதுகளை வழங்கி வரும் இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கமும் இலங்கை பத்திரிகை நிறுவனமும் இணைந்து 2009ஆம் ஆண்டுக்கான விருதுகள் வழங்கும் வைபவத்தை நாளை செவ்வாய்க்கிழமை நடத்த உள்ளன.

இந்த விருதுகள் தொடர்பில் 14 பிரிவுகளுக்கு 225 விண்ணப்பங்களுக்கு மேல் கிடைத்திருந்தன.

வாழ்நாள் சாதனையாளர் விருது பெறுவோர்களாக ஐவர் தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் தங்கப்பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அவர்களில் யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டு வெளிவரும் 'உதயன்' நாளிதழில் ஆரம்ப காலத்திலிருந்து அதன் பிரதம ஆசிரியராகப் பணியாற்றும் ம.வ. கானமயில்நாதனும் ஒருவராவார்.

திரு. ம.வ. கானமயில்நாதன் ஊடகத்துறையில் 48 வருடகாலமாகத் தொடர்ந்து சேவை ஆற்றிவருபவர்.

கட்டுபெத்த தொழில்நுட்பக் கல்லூரியின் எந்திரவியல் பொறியியல் டிப்ளோமாதாரியான அவர் (02ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு- முஸ்லிம் காங்கிரஸ் நாளை மறுதினம் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, ஜூலை 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையிலான பேச்சுக்களை நாளை மறுதினம் புதன்கிழமை இடம்பெறவுள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹஸன் அலி 'உதயனுக்குத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அரசியல் தீர்வு தொடர்பான விடயங்கள் குறித்து இந்த இரண்டு கட்சிகளின் (24ஆம் பக்கம் பார்க்க)

## வெலிகந்தயில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் புலிப் போராளிகளை நேரில் சந்திக்க கூட்டமைப்பு முயற்சி

கொழும்பு, ஜூலை 26

வெலிகந்தயில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் புலிப் போராளிகளைப் பார்வையிட அனுமதி வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சரணடைந்த, (24ஆம் பக்கம் பார்க்க)

சிறி நதியா

வீடியோ.ஸ்ருடியோ & போட்டோ பிறிண்டிங்
அனைத்து தொழில்சார்
நண்பர்களின் வேண்டுகேளிற்கு இணங்க
எமது அதி சிறந்த சேவையினை
விரிவு படுத்தி உள்ளோம்

Kodak Express >>>>>> 3R தொடக்கம் 12X36 வரை

டிஜிட்டல் கலர் லாப்




108 A, லக்ஷன் பிளாஸா கட்டடம்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 2228412

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உதயன் பிரதம ஆசிரியருக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ''ஈழநாடு'' பத்திரிகையின் உதவி ஆசிரியராக ஊடகத்துறையில் தமது சேவையை ஆரம்பித்த இவர், பின்னர் கொழும்பிலிருந்து வெளிவரும் தினபதி பத்திரிகையின் செய்தி ஆசிரியராகவும் பணி புரிந்துள்ளார். அதன் பின்னர் வீரகேசரி பத்திரிகையில் இணைந்து யாழ். செய்திப் பிரிவுக்குப் தலைமைப் பொறுப்பாளராகச் சேவையாற்றியவர். கே.பி.ஹரன், இராஜ. அரியரத்தினம், எஸ்.டி.சிவநாயகம் ஆகிய புகழ்பூத்த தமிழ்ப்பத்திரிகை ஆசிரியர்களிடம் நேரடியாகவும், புகழ்பூத்த சிங்களப் பத்திரிகையாளர் டி.பி.தனபால அவர்களது அரவணைப்பிலும் தாம் பெற்ற அனுபவமே தம்மை இந்த அளவுக்கு பத்திரிகைத் துறையில் நிலைபெற பெருந்துணை புரிந்ததாக அவருடன் நான் பத்திரிகைத் துறை தொடர்பாக கலந்துரையாடிய வேளையில் அவர்களை நன்றியுடன் நினைவுகூர்ந்தமை குறிப்பிடத்தக்கது. 1959 ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையில் எழுதத் தொடங்கி பத்திரிகைத் துறையின்பால் ஈர்க்கப்பட்டவர்.

யாழ்ப்பாணத்திலிருந்து புதிதாக தமிழ் நாளிதழ் ஒன்றை வெளியிட வேண்டும் என்ற கருத்தை யும் விருப்பத்தையும் கொண்டிருந்தவர் பத்திரிகையாளரும் தமிழ் உணர்வாளருமான சி.க. திருச்சிற்றம்பலம் அவர்கள். இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன்னர் அவரது மனதில் எழுந்த விருப்பத்தின் விளைவாக 'உதயன்' நாளிதழை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

பத்திரிகை ஆரம்பிப்பதற்கான பொறுப்புக்களை ஏற்றுச் செயற்பட்ட நிர்வாகி அமரர் சி.க.திருச்சிற்றம்பலம் ஆவார். உதயன் நாளிதழுக்கான பிரதம ஆசிரியராகப் பணிப்பாளர் சபையிடம் முன்மொழியப்பட்டவர் திரு.கானமயில்நாதன். அவருக்குப் பக்கத் துணையாக இருந்தவர் முன்னாள் ஆசிரியர் திரு.ந.வித்தியாதரன் ஆவார்.

உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பொறுப்பை ஏற்று 1985ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதியன்று முதன் முதலாக யாழ். குடாநாட்டு மக்களுக்கு ''உதயன்'' பத்திரிகையை அறிமுகம் செய்த கானமயில்நாதன், அவர் மீதான கொலை முயற்சியில் இருந்து தப்பி, அதனால் ஏற்பட்ட உடல் ரீதியான பாதிப்புகளால் வைத்திய சிகிச்சைக்காக வெளிநாடு சென்றிருந்த வேளை தவிர - இற்றைவரை, உதயன் பத்திரிகை தனது 25ஆவது அகவையைப் பூர்த்தி செய்ய இன்னமும் ஐந்து மாதங்களே இருக்கும் நிலையில் அதன் பிரதம ஆசிரியராக விருந்து ஓயாது அதனை வழிநடத்திச் செல்கிறார். இத்தனைக்கும் 'உதயன்' பத்திரிகையுடன் மட்டும் தமது பணியை மட்டுப்படுத்திக் கொள்ளாது, 1986 ஆம் ஆண்டில் 'உதயனின்' வார இதழாக பல்சுவை அம்சங்களை உள்ளடக்கி 'சஞ்சீவி' என்ற பெயரிலும், 'அர்ச்சுனா' என்ற பெயரில் மாணவர்களுக்கான சஞ்சிகை, 'ஞானக்கதிர்' என்ற பெயரில் சமய சஞ்சிகை மற்றும் 'ஜோதிடஜோதி' என்ற பெயரில் சோதிட சஞ்சிகை என்பவற்றையும் பிரதம ஆசிரியராக இருந்து மாதாந்த சஞ்சிகைகளாக வெளியிட்டுள்ளார்.

அந்த வகையில் அவரது நீண்டகால, தொடர்ச்சியான, அயராத பணியை இனம் கண்டு இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கமும் இலங்கைப் பத்திரிகை நிறுவனமும் 2009ஆம் ஆண்டுக்கான ஊடகத்துறையின் வாழ்நாள் சாதனையாளர் விருதை அவருக்கு வழங்கிக் கௌரவித்துள்ளமை பாராட்டப்பட வேண்டியதாகும்.

'உதயன்' பத்திரிகை தனது 25 ஆண்டு காலப் பத்திரிகைப் பணியில் சாதித்த சாதனைகளைப் பட்டியலிட்டால் அது நீண்டு செல்லும். அந்த வகையில் 'உதயன்' பத்திரிகையின் அளப்பரிய சேவைக்கு விருதாக 1998 ஆம் ஆண்டுக்கான துணிச்சலான பத்திரிகைக்கான விருது, 2008 ஆம் ஆண்டுக்கான சிறந்த இதழியல் பெறுபேற்றுக்கான விருது மற்றும் மக்கள் சேவை ஊடகம் மற்றும் சகிப்புத் தன்மைக்கான ஊடக விருது என்பவற்றை 'உதயன்' ஈட்டிக்கொள்வதற்கு தம்மை முதன்மைப் படுத்தாது பிரதம ஆசிரியர் ஆற்றிவந்த அர்ப்பணிப்புமிக்க சேவையும் ஏனைய ஆசிரியர் பீட அலுவர்களின் கூட்டு முயற்சியும் முக்கியம் வாய்ந்தவை. 'உதயன்' பத்திரிகை தனது கடந்த 25 வருடகால பத்திரிகைப் பணியில் எதிர்கொண்ட சவால்கள், சந்தித்த சோதனைகள், அனுபவித்த வேதனைகள், அனுபவங்கள் ஏராளம்; உயிரிழப்புக்கள் சொத்திழப்புக்கள் எனப் பல பயங்கர அனுபவங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்த வரலாறு உதயனின் வாசக அபிமானிகள் அறியாதவையல்ல. அந்த வகையில் ஆசிரிய பீடத்தினரின் அர்ப்பணிப்புடனான பங்களிப்புடன், பத்திரிகை எதிர்கொண்ட வேதனையான, சோதனையான அனுபவங் களுக்கெல்லாம் முகம் கொடுத்து வாசகர் மத்தியில் அதற்குள்ள அபிமானம் குன்றி விடாமல் உலாவரச் செய்துவரும் பிரதம ஆசிரியர் கானமயில்நாதன் அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது பொருத்தமானதே.

பதவியிலிருந்த அரசுக்களின் முறையற்ற அரசியல் செயற்பாடுகளைத் துணிச்சலுடன் விமர்சித்து, கண்டித்துக் கருத்துக்களை வெளியிட்டதன் மூலம், தமிழ்ப் பொதுமக்களுக்கு அந்தந்த வேளைய ஆட்சியாளர்கள், அரச நிர்வாகத் தரப்புக்கள் இழைத்த தவறுகளை, ஏற்படுத்திய நட்டங்களை துணிச்சலாகத் செய்தியின் மூலமும் தமது எழுத்தின் மூலமும் விமர்சனக் கட்டுரைகளைப் பிரசுரித்ததன் மூலமும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு உறைக்கத்தக்க விதத்தில், அவர்களைச் சிந்திக்க வைக்கச் செய்யும் விதத்தில், பொதுமக்கள் அவை குறித்து அறிந்து தெரிந்துகொள்ள வைக்கும் விதத்தில், நடுநிலை நின்று விமர்சித்து, இவர் பத்திரிகைப்பணி செய்துள்ளார்; செய்துவருகிறார்.

✱ இந்திய அமைதி காக்கும் படை வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் நிலைகொண்டு சிவில் நிர்வாகத்தைத் தமது கையிலெடுத்துச் செயற்பட்ட காலகட்டத்தில், உதயன் பத்திரிகையில் இந்திய அமைதிகாக்கும் சீரணிக்க முடியாதவை எனக் கருதப்பட்டவற்றைச் சுட்டிக்காட்டி, புட்டுக்காட்டி, கண்டித்து விமர்சித்து செய்திகளை வெளியிட்டதன் மூலம் பல தடவைகள் யாழ்.பிராந்திய இந்திய அமைதிகாக்கும் படை உயரதிகாரியால் தமது அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டு, உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டவர்; கடும் கண்டனத்துக்கு உள்ளானவர்.

✱ இலங்கை இராணுவத் தரப்பினரால் யாழ். மாவட்ட இரா ணுவத் தலைமையகம் அமைந்துள்ள பலாலிக்குப் பல தடவைகள் அழைக்கப்பட்டு நேரிலும், தொலைபேசி உரையாடல் ஊடாக வும் உதயனில் இலங்கை அரசின் செயற்பாடுகள் தொடர்பான விமர்ச னக் கருத்துக்களை வெளியிட்டதாகக் குற்றம் சாட்டி கண்டிக்கப்பட்டவர். இவை யாவற்றுக்கும் மேலாக 2001ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதி காலையில் தமது பத்திரிகை அலுவலகத் துக்குச் சென்றுகொண்டிருந்த சமயம் திட்டமிட்ட முறையில் வாகனமொன்றினால் மோதிக் கொலை செய்யும் முயற்சியிலிருந்து தெய்வாதீனமாகத் தப்பித்துக் கொண்டவர். அவ்வேளை படுகாயமடைந்ததன் காரணமாக கால் நடக்க இயலாது யாழ்ப்பாணம், கொழும்பு, வெளிநாடு என்று இரண்டு ஆண்டு கள் காலம் பல்வேறு இடங்களிலும் சிகிச்சை பெறவேண்டிய துர்ப்பாக்கியத்துக்கு உட்பட்டவர். அவ்வித உயிராபத்திலிருந்து தப்பித்துக் கொண்டபோதும், மூப்பு நிலையிலும் உடற்தளர்வு இருந்த போதிலும் உள்ளத்தால் தளர்வின்றி இன்றும் தொடர்ந்து பத்திரிகைப் பணியை ஆற்றிவருகிறார்.

✱ இத்தகைய சோதனைகள் யாவற்றுக்கும் சிகரம் வைத்தமை போன்று 2006 ஆம் ஆண்டு மே மாதம் 02ஆம் திகதியன்று முன்னிரவு வேளையில் உதயன் நிறுவனத்துக்குள் அத்துமீறிப் பிரவேசித்த ஆயுததாரிகள் குழுவொன்று நிகழ்த்திய வெறி யாட்டத்தில் 'உதயன்' நிறுவன ஊழியர்கள் இருவர் உயிரிழந்தும் மற்றுமிருவர் படுகாயங்களுக்கு உள்ளாகிய பின்னர் -

உருவான பாதகமான சூழ்நிலையிலும் 'உதயன்' தொடர்ந்து வெளிவருவதில் பிரதம ஆசிரியர் கானமயில்நாதன் தளத்தில் நின்று அர்ப்பணிப்புடன் ஆற்றும் பணி அவரது பத்திரிகைத் துறைச் சேவையில் புதிய பரிமாணத்தைக் கொண்டுள்ளது. அவருக்குப் பக்கபலமாக நின்று உழைக்கும் பத்திரிகையாளர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

இன்றுவரை 'உதயனின்' இயக்கத்துக்கு - உதயன் பத்திரிகையூடாக தமிழ் மக்களுக்கு நடுநிலை நின்று, உள்ளதை உள்ளபடி வெளிப்படுத்திவரும் பிரதம ஆசிரியரின் பத்திரிகைப் பணி தங்கு தடையின்றி மென்மேலும் தொடர்ந்து தமிழ் மக்களுக்குக் கிட்ட வேண்டும் என்பது 'உதயன்' வாசக நேயர்களது பிரார்த்தனையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

அவர் தொடர்ந்தும் தமது அர்ப்பணிப்புடனான பத்திரிகைப் பணியில் நின்று நிலைத்து தமிழ்ச் சமுதாயத் துக்கும் இனத்துக்கும் [illegible] இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

- பொன்வேலன்




சிவகாளியம்மன் ஜோதிட நிலையம்

இந்தியாவின் பிரபல ஜோதிடர்

**கங்காதர ஆச்சாரி சுவாமிகள்**

திருப்பதியில் இருந்து வந்துள்ள சுவாமிகள்

*இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சுவாமிகள் அவர்கள் வம்சாவழியாக காளியம்மனின் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில் வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம், பிள்ளைகளின் படிப்பு, பிள்ளைகள் குடும்ப ஒற்றுமையாகப் பெற்றோர்களுடன் நிலைத்திருத்தல் போன்ற விடயங்களையும் கணவன் மனைவி ஒற்றுமையின்மை, கோட்டு வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்குப் பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடல், வெளியூர் பயணங்கள், நாம நட்சத்திரம், கல்வி, உத்தியோகம், இலட்சுமி வசிகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், வதிவிடப் பிரச்சினைகள், எதிரிகள் கண் திருஷ்டி இவற்றுடன் எதிர்காலப் பலாபலன்களைத் தெரிவிப்பார். ஒருமுறை சந்தியுங்கள்.*

தொ.பே.: 077 6337702 / 077 6335621

கைரேகை, ஜோதிடம் பார்க்கும் நேரம்:

காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை.

பீப்பிள்ஸ் இன்

இல.112/1, மானிப்பாய் வீதி,
(பிள்ளையார் சோடாக் கம்பனி முன்பாக)
யாழ்ப்பாணம்.

(100666)



**மணிவிழாக் கண்ட கோட்டக்கல்வி நாயகனை பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**உயர்திரு சின்னத்தம்பி சித்திரவடிவேல்**



அகவை அறுபதை நிறைவு செய்து (20.07.2010) அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றாலும் தொடர்ந்தும் கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளராக இருந்து கோட்டத்தின் கல்வி வளர்ச்சிக்காக அயராது சேவையாற்றிவரும்

உயர்திரு சின்னத்தம்பி சித்திரவடிவேல்

சேவையால் சிறந்து மேலும் சிறப்புப் பெறுவதோடு பல்லாண்டுகாலம் வாழ்ந்து தொடர்ந்து சமூகப்பணியும், கல்விப்பணியும் ஆற்றிட இறையருள் வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் கழகம், அச்சுவேலி மத்திய கல்லூரி.**



**JOB Guaranteed "Certified Medical Assistant"**

மருத்துவத்துறையில் பணிபுரியும் உங்கள் கனவை நனவாக்கத் தகுதியானவர்களிடமிருந்து ஒரு அரிய சந்தர்ப்பம். தனியார் வைத்திய சாலைகளில் உடனடி வேலைவாய்ப்புடன்கூடிய பயிற்சிநெறியை **லாவா வைத்தியசாலையில்** சர்வதேச கல்வித்திட்டத்திற்கு அமைவாகப் பெற்றிடுங்கள்.

**மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி**



கல்வித்தகமை: G.C.E O/L நாலு பாடங்களில் சித்தி
காலம் : 6 மாதங்கள்(உள்ளகப்பயிற்சியுடன்)
தெரிவு : நேர்முகத் தேர்வு மூலம் அனுமதி.

July 2010 Intake

KU Creating Ideals

M.B.B.S வைத்தியர்களால் விரிவுரைகளும் செயல்முறை பயிற்சிகளும் வழங்கப்படும்.

உள்ளகப்பயிற்சி வழங்குவோர்: Lava Hospitals

சான்றிதழை இணைந்து வழங்குவோர்: KNOWLEDGE UNIVERSE® Malaysian Soft Skills and ICT Development Centre

Tel: 0212224333 |# 75,Temple Road,Jaffna | www.Lavahospitals.com



**துயர்பகிர்கின்றோம்**

எமது முன்னாள் கிளை முகாமையாளரும்
தற்போதைய சுன்னாகம் கிளை முகாமையாளருமாகிய
திரு.கு.ஸ்கந்தபாபு (பாபு) அவர்களின் அன்புத் தாய்



**திருமதி கு.சூரியகுமாரி**

அவர்களின் மறைவைக் கேட்டு அதிர்ச்சியும் மனவருத்தமும் அடைந்ததுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

உங்கள் துயரில் பங்குகொள்ளும்

முகாமையாளரும், ஊழியர்களும்,

**ஹற்றன் நஷனல் வங்கி, நெல்லியடி.**



**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



அமரர்

**சின்னத்துரை லெட்சுமணராஜா**

தோற்றம்
22.12.1943

மறைவு
12.07.2010

அன்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய், எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய் திகழ்ந்து 12.07.2010இல் சிவபதமடைந்த எங்கள் பாசமிகு தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து பல வகைகளிலும் தோளோடு தோள் நின்று எங்கள் துயரத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அயலவர்களுக்கும் தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் அஞ்சலியுரையாற்றிய அறிஞர் பெருமக்களுக்கும், பிரசுரங்கள், பத்திரிகை மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எம் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (27.07.2010) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால், அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

இல. 1014, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(100899)

**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஒற்றுமை வேண்டும் வேளை இது!

நாட்டின் அரசமைப்பைத் திருத்தும் விவகாரத்தில் இனநெருக்கடிக்குத் தீர்வு காண்பது குறித்து உரிய முக்கியத்துவம் கொடுக்கப் படுவதாக இல்லை. ஆட்சிமுறையில் மாற்றம், அதாவது நிறைவேற்று ஜனாதிபதி முறைக்குப் பதிலாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் பதவியைக் கொண்டுவருதல் மற்றும் அரசமைப்புச் சட்டத்தின் 17ஆவது திருத் தத்தை மாற்றி அமைத்தல், தேர்தல் சட்டத் தைத் திருத்துதல், உள்ளூராட்சி மன்றங்களின் உருவாக்கத்தில் மாற்றம் கொண்டு வருதல் போன்ற இரண்டாந்தர விடயங்கள் குறித்துப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சு நடத்தி இணக்கம் காண்பதிலேயே அரசு ஆர்வமாக விரைந்து செயற்பட்டு வருகிறது.

நாட்டின் முக்கிய பிரச்சினைகளில் உடனடியாக முதன்மைத்துவம் வழங்கி ஆராயப்பட வேண்டிய முதலாம் தர விவகாரமான இனப்பிரச்சினையை ஓரங்கட்டும் போக்கில், அரசு நடந்து கொள்கிறது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதில் பிரதான எதிர்க் கட்சியும் அக்கறை காட்டுவதாக இல்லை!

மொத்தத்தில் தமிழ், முஸ்லிம் மக்களின் நலன்களைப் பேணுவதில், இரண்டு பிரதான பெரும்பான்மைக் கட்சிகளும் கூட்டுச்சேர்ந்து அதனைப் பின்தள்ளி விடுமோ என்ற சந்தேகம் வலுத்து வருகிறது. ஆகையால், தமிழ், முஸ்லிம் மக்களின் முதன்மையான அரசியல் கட்சிகளாக விளங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் இது தொடர்பில் ஒன்று கூடி ஆராய வேண்டியது கட்டாயமாகிறது.

இது விடயத்தில், தாமதத்தைத் தவிர்த்து இரண்டு கட்சிகளும் மிக விரைவில் கூடி ஆராய வேண்டும்.

அரசமைப்புச் சட்டத்தில் மாற்றம், திருத்தம் என்று இரண்டு பிரதான கட்சிகளின் தலைவர்களும் பல விடயங்களில் தாம் மட்டும் கூடி ஆராய்ந்து முற்றுமுழுதாகச் சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகளை ஓரங்கட்டியது போன்று -

இனப்பிரச்சினை விவகாரத்திலும் பெரும்பான்மை இனத்துக்கு மட்டுமே சார்பான ஒரு தீர்வுக்கு இணங்கி, இரு தரப்பினருக்கும் உள்ள நாடாளுமன்ற வலுக்களை ஒன்று சேர்த்து அதீத பலமாக்கி அதனை நிறைவேற் றிவிடும் ஆபத்து நிறையவே உண்டு.

ஆகையால், தமிழ், முஸ்லிம் மக்கள் தமக்கிடையே உள்ள சிறுசிறு பேதங்களை ஒதுக்கி விட்டு, இப்போது ஓரணியில் செயற்பட வேண்டியது அவசரமும், அவசியமும், கட்டாயமும் ஆகிறது.

இரண்டு இனங்களினதும் எதிர்காலம், அரசியல் சுபீட்சம் என்பன பாதிப்புறாமல் இருக்க அவை ஒன்றுபட்டாக வேண்டிய கட்டாயம் எப்போதும் இல்லாததைவிட இப்போது மிகமிக அவசியமாகி உள்ளது. மொழியால் ஒன்றுபட்ட இருசாராரும் தமக்கிடையே உள்ள சிறுசிறு பேதங்கள் வேற்றுமைகளைப் புரிந்துணர்வுடன் நீக்கி ஓர் அணி திரள வேண்டிய வேளை இது.

தந்தை செல்வா காலத்தில் இரண்டு இனங்களுக்கும் இடையே நிலவிய ஒற்றுமை யையும் புரிந்துணர்வையும் இப்போதுள்ள தலைவர்கள் மீள்விக்க வேண்டும். இரு சாராரிடமும் உள்ள கருத்து வேறுபாடுகள், நீக்கப் பட்டு இணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகி உள்ளது. பெரும் பான்மை இனத்தலைவர்கள் இரண்டு சிறு பான்மை சமூகங்கள் மீதும் சவாரி செய்யாது தடுப்பதற்காக, சகோதரத்துவ உணர்வுடன் கருமம் ஆற்றவேண்டிய வேளை இது.

இதனை ஊன்றி உணர்ந்து, உய்த்தறிந்து தமிழ், முஸ்லிம் தலைவர்கள் செயற்பட வேண்டும். எமக்கிடையே உள்ள பிணக்கு களை மேலெழுத்தி எமக்குரிய அரசியல் உரிமைகளைப் பெரும்பான்மையினர் நசுக்கவோ, கசக்கவோ இடம் தராமல் இருப்பதிலேயே எங்கள் வருங்காலச் சந்ததியினரின் வாழ்வும் நலமும் தங்கியிருக்கின்றன. இதனை இரு சிறுபான்மை இனங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் தலைவர்கள் உணர வேண்டுகிறோம்.

# 17 ஆவது திருத்தம்: ஐ.தே.க.கருத்தை ஏற்பதில் அரசு தரப்பில் தொடர்ந்து தயக்கம்

நேற்று 25.07.2010 அன்று சண்டே ரைம்ஸ் வெளியிட்டிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி

கடந்த வியாழக்கிழமை ஐ.தே.க. தூதுக்குழுவொன்று வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸை அவரது அமைச்சில் சந்தித்து 17 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக ஆலோசனைகள் நடத்தியது. அக் கட்சியின் பதில் தலைவர் கருஜயசூரிய குழுவுக்குத் தலைமை வகித்தார். ஜோசப்மைக்கல் பெரேரா, விஜயதாச ராஜபக்ஷ ஆகியவர்களும் குழுவில் அடங்கியிருந்தனர். அமைச்சர் பீரிஸுடன் வெளியுறவுச் செயலாளர் ரொமெஷ் ஜயசிங்கவும் கலந்து கொண்டார். இவரது அதிகாரப் பூர்வ கடமைகளுக்கும் அரசமைப்பு மாற்றங்களுக்கும் அதிக தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை.

50 நிமிட நேரம் நடந்த பேச்சு வார்த்தைகளின் பின்னர் ஐ.தே.க. தூதுக் குழுவினரின் மத்தியில் பேச்சு வாக்கில் பின்வரும் விடயம் பெரிதாக ஆராயப்பட்டது. பேச்சுக்களின்போது பிரசன்னமாய் இருந்த ஆஜானுபாகுவான பாதுகாப்பு அதிகாரி பற்றியதாகும் அது. அமைச்சரின் மாநாட்டு அறையில் இடம்பெற்ற பேச்சுக்களின் போது ஐ.தே.க. குழுவினருக்குச் சற்றுத் தூரத்தில் நின்றிருந்த அந்த அதிகாரி பேச்சுவார்த்தைகளை மிகக் கவனமாகக் கவனித்துக் கொண்டிருந்துள்ளார். 17 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பான நுணுக்கங்கள் பற்றி அவர் அறிந்திருந்தாரா அல்லது அரசமைப்புப் பிரிவுகளுக்கான திருத்தங்கள் தேவைதானா என்பவைகள் பற்றி அவர் ஏதும் அறிந்திருந்தாரா என்பது வேறு விடயம்.

ஐ.தே.கவினர் தாங்கள் சந்தேகக் கண்களோடு பார்க்கப்படுகின்றார்கள் அல்லது தாங்கள் வெளியுறவு அமைச்சருக்கு அச்சுறுத்தலாக இருக் கிறார்கள் என்ற வகையில் உணர்கி றார்கள். இந்த நபர் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர் என்று சிலர் கருதுகிறார்கள். மற்றவர்கள் அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர் என்று கருதுகிறார்கள். எந்தப் பிரிவைச் சேர்ந்தவராக அவர் இருந்த போதிலும் இது ஒரு புதிய திருப்பமாக இருக்கலாம் என்று ஐ.தே.கவினர் கருதுகின்றனர். என்றாலும் இவர் யார் சம்மதத்துடன் வருகை தந்திருந்தார் என்பது பற்றி ஒருவர் அமைச்சரிடம் கேட்கத்தவறவில்லை. ஜயசூரிய அமைச்சர் பீரிசை சந்திப்பதற்கு முன்னதாக தொழில்சார் பிரமுகர் களின் நிறுவனப் பிரதிநிதிகளுடன் நீண்ட பேச்சுக்களை நடத்தியிருந்தார். கல்விமான்கள், சட்டவல்லுநர்களோடும் அவர் ஆலோசனைகள் நடத்தியிருந்தார்.

தற்போதைய 17 ஆவது திருத்தம் அமுல்செய்யப்படுவதை ஐ.தே.க பல மாக ஆதரிப்பதாக ஜயசூரிய பேச்சுக் களின் போது வலியுறுத்தினார்.பீரிஸ் ஐ.தே.க வின் அமைச்சரவையில் முன்பு இருந்தவர் என்பதும் அவரது அப்போதைய பங்களிப்புகளும் அவருக்கு நினைவுறுத்தப்பட்டன. 2000 ஆம் ஆண்டில் 17 ஆவது திருத்தச் சட்டம் அறிமுகப் படுத் தப்பட்ட போது ''நல்லாட்சி'' தொடர்பாக அமைச்சர் குறிப்பிட்டிருந்தமை நினைவுறுத்தப்பட்டது. 2005 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்போடு ஐ.தே.க. பேச்சுவார்த்தை நடத்திய போது ஐ.தே.கவுக்கான ஆவணங்கள் அனைத்தையும் பீரிஸ்தான் ஆயத்தம் செய்திருந்தார். எனவே ஐ.தே.கவின் நிலைப்பாட்டினை விளங்கிக் கொள்ளக் கூடிய ஒரு நிலைமையில் இருக்கிறார் என்று ஜயசூரிய சுட்டிக் காட்டினார்.

அரசமைப்புச் சபை, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, ஊழல் மற்றும் லஞ்சம் தொடர்பான நிரந்தர விசாரணைக்குழு ஆகிய விடயங்களில் ஆலோசனை கலக்கப்பட்டது. பொலிஸ் ஆணைக் குழு இல்லாத நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அமைப்பாளர்கள் பல்வேறு பொலிஸ் பிரிவுகளிலும் பொலிஸ் நிலையங்களுக்கான பொலிஸ் பொறுப்பதிகாரிகளாகத் தமது விருப்புக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று அவர் அங்கு சுட்டிக் காட்டினார். இது சட்ட மற்றும் ஒழுங்கு பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது என்றார் அவர். கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான புகார்கள் ஏற்றுக் கொள்ளப் படாமல் இருக்கின்றன. விசாரணை ஆணைக்குழு செயற்படாமல் இருக்கிறது என்றார்.

17 ஆவது அரசமைப்பு திருத்தத்தில் காணப்படும் குறைபாடுகளை அமைச்சர் டி.ஈ.டபிள்யு குணசேகரவின் தலைமையிலான நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கையில் காணப்படும் ஷரத்துக்களைக் கொண்டு சரி செய்து கொள்ளலாம் என்று ஜயசூரிய தெரிவித்தார். அறிக்கை முற்றுப் பெற்று விட்ட போதிலும் குணசேகர இன்னமும் அதில் கையெழுத்திடவில்லை. இவை தொடர்பான சுருக்கக் குறிப்புக்களையும் ஜயசூரிய அங்கு வழங்கினார்.

தாம் முக்கியம் என்று கருதிய மூன்று விடயங்களை பீரிஸ் அங்கு வலியுறுத்தினார்.

முதலாவதாக - அபிவிருத்தி ஏற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு 'பலம் வாய்ந்த நிறைவேற்று' அதிகாரமுள்ள ஜனாதிபதி இருக்க வேண்டியது அவசியம் என்றார் பீரிஸ். இதை வலியுறுத்துவதற்கு முன்னாள் சிங்கப்பூர் பிரதம மந்திரி லீ குவான் யீவ் சுயசரிதையிலிருந்து சிலவற்றை வாசித்துக் காட்டினார் அமைச்சர். பலமான நிறைவேற்று அதிகாரம் இருந்தமையால்தான் புலிப் போராளிகளை ராணுவரீதியில் தோற்கடிக்க முடிந்தது என்று அவர் சுட்டிக் காட்டினார். அரசமைப்பு மாற்றங்களை அறிமுகப்படுத்தும் போது மாலைதீவு எதிர்கொள்வது போன்ற அரசியல் நெருக்கடியொன்றை எதிர்கொள்ள அரசு

## நாம் கூறுவதை ஏற்காவிடில் அரசு சொந்தத் திட்டத்தை வெளியிடட்டும் - ஐ.தே.க

விரும்பவில்லையென்று அமைச் சர் சுட்டிக்காட்டினார். ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு பதில் கூறுபவராக இருக்க வேண்டும் என்று எதிர்க் கட்சியினரின் கருத்தை அமைச்சர் ஏற் றுக் கொண்டார். அமைச்சர் குறிப்பிட்ட இரண்டாவது அம்சம்யாதெனில், நாட்டின் அபிவிருத்தியானது துரிதப்படுத் தப்பட வேண்டும் என்பதாகும்.

மூன்றாவதாக அவர் குறிப்பிட்ட விடயமாவது, 17 ஆவது திருத்தம் தேவையற்றது. நிலைமையை பலமான நிறைவேற்று அதிகார ஜனாதிபதியால் கையாளமுடியும் என்பதாகும்.

ஜனாதிபதியுடனான பேச்சுக்களின் போது ரணில் விக்கிரமசிங்காவும் கூட இதற்கு ஒப்புக் கொண்டிக்கிறார் என்றார் அமைச்சர். இந்தக் கருத்துக்கு ஜோசப் மைக்கல் பெரேரா கடும் எதிர்ப்பு வெளியிட்டார்.

'நாங்களும் அங்கிருந்தோம். அப்படி எதுவும் அவரால் கூறப்படவில்லை' என்று அவர் குறிப்பிட்டார்.

ராஜபக்ஷவும் ரணில் விக்கிரம சிங்கவும் தனிப்பட்ட முறையில் நடத்திய பேச்சுக்களின் போது இந்த விடயம் தலைதூக்கியதா என்பது பற்றி தெளிவாகத் தெரியவில்லை.

மங்கள சமரவீர கூறுகையில், 'பலமான நிறைவேற்று அதிகாரம்' அமைச்சரவையிடம் இருக்கலாம் அல்லது நாடாளுமன்றத்திடமும் இருக்கலாம். ஏன் ஒரே மனிதரிடம் அவை குவிக்கப் பட வேண்டும் என்று கேட்டார்.

**தமிழாக்கம் - கோகுலன்**

ரவூப் ஹக்கீம் நீதித்துறை பலப்படுத் தப்பட வேண்டும், அரசின் செயற்பாடுகளில் வெளிப்படைத் தன்மை வேண்டும் என் பவை பற்றி நீண்ட உரை நிகழ்த்தினார்.

சுயேச்சையான ஆணைக்குழுக்கள் நியமித்தல் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான ஜனாதிபதிக்குள்ள முதன்மை அதிகாரம் போன்றவையும் ஆலோசிக்கப்பட்டன.

ஏற்கனவே சம்மதிக்கப்பட்டுள்ளது போல் சுயேச்சை ஆணைக் குழுக்களுக்கு நியமனங்களைச் செய்வதற்கு அரச - எதிர்க்கட்சித் தரப்புகள் அனுமதிக்கப்பட வேண்டும் என்று ஜயசூரிய குறிப்பிட்டார்.

இவ்வாறு செய்யப்படும் நியமனங்களை ஜனாதிபதியானவர் இரண்டு வாரங்களுக்குள் அங்கீகரிக்க வேண்டும் இல்லையெனில் அந்த நியமனங்கள் நிலையானவை என கருதப்பட வேண்டும் என்றார் அவர்.

ஜயசூரிய தொடர்ந்து கூறுகையில் ஐ.தே.க. தெரிவித்துள்ள முன் மொழிவுகளை அரசு ஏற்றுக் கொள்ளாத நிலையில் அரசு தன் சொந்த ஆலோசனைகளை ஆராய்வதற்கு முன் வைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பேச்சுக்கள் பயன்தரும் வகையில் முடிவுறவில்லையென்று ஐ.தே.க. வட்டாரங்கள் கருதுகின்றன.

யப்பானுக்குப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் புறப்பட்டுச் சென்றுள்ள அமைச்சர் பீரிஸ் தாம் நாடு திரும்பியதன் பின்னர் ஐ.தே.கவுடன் தொடர்பு கொள்ளவிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

17 ஆவது திருத்தச் சட்ட மூலம் தொடர்பாக நடைபெற்றுள்ள முதலாவது சுற்றுப் பேச்சுக்களில் ஐ.தே.க. திருப்திகரமான பலனைப் பெற்றுக் கொள்ளாத நிலையில் இது பற்றிய பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன.

**அமெரிக்காவின் அக்கறை**

இந்த விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதில் ஐ.தே.க மட்டுமல்ல சர்வதேச சமூகமும் அதிக அக்கறை கொண்டுள்ளது. கடந்த புதன் கிழமை ஜனாதிபதியுடன் ஆலோசனை நடத்திய அமெரிக்க உதவி ராஜாங்க செயலாளர் இந்த விடயம் தொடர்பாக ஆலோசனையில் கணிசமான அளவு நேரத்தை பயன் படுத்தியதாகக் கூறப் படுகின்றது.

மாகாணங்களுக்கு அதிக அதிகாரங்களைப் பகிர்வதும் சுயேச்சை ஆணைக் குழுக்களுக்கு அதிகாரங்களை வழங்க 17 வது திருத்தச் சட்டத்தை செயற்படுத்துவதும் மிக முக்கியமான நடவடிக்கைகளாகும்; மனித உரிமைகள் பொலிஸ் மற்றும் லஞ்ச ஊழல் அணைக்குழு மற்றும் ஊடக சுதந்திரத்தை பாதுகாப்பது போன்றவை இதில் அடங்கும். இந்த நாட்டில் வாழும் எல்லா மக்களும் செழிப் போடும் அமைதியோடும் எதிர்கால நம்பிக்கையோடும் வாழ்வதற்கான நடவடிக்கைகளாக இவை அமையும் என்று ஜனாதிபதியோடு உரையாடியதன் பின்னர் அமெரிக்க செயலாளர் பிளேக் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து வெளியிட்டிருந்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் நல்லிணக்கத்துக்கான கடைசித்தூண் என்னவென்றால் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் முன்னேற்றுவதாகும் என்றார்.

அமைச்சர் பீரிஸ் அண்மையில் வாஷிங்டன் சென்றிருந்தபோது, ஜனநாயக அமைப்புக்களை இலங்கை அரசு மீள அமைத்து பலப்படுத்தவிருக்கிறது என்று தெரிவித்திருந்ததாகவும் பிளேக் கூறினார்.

இந்த விடயங்களை நிறைவேற்றுவதும் கூட ஐரோப்பிய யூனியனின் கோரிக்கையாக இருந்துவருகின்றது. இந்த யூனியன் இலங்கைக்கு அளித்து வந்த ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகைகளை ஓகஸ்ட் 15 ஆம் திகதியுடன் வாபஸ் பெறவிருக்கின்றது. ஐரோப்பிய யூனியன் முன் வைத்துள்ள 15 நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்ள முடியாதென்று பீரிஸ் முதலில் நிராகரித்திருந்தாலும், பேச்சுவார்த்தைதான் முன்னேறுவதற்கான ஒரே வழி என்று பின்னர் கூறியிருந்தார். ஆனால் ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதி பேர்னார்ட் சாவேக் கருத்துத் தெரிவித்த போது தங்கள் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்க உதவி அமைச்சர் வெளியிட்டுள்ள கருத்து தொடர்பாக இலங்கை அரசு சீற்றம் கொண்டுள்ளது. அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தில் திருத்தங்கள் செய்ய அது தீர்மானித்திருப்பதை அதன் பிரதிபலிப்புகள் வெளிப்படுத்தியுள்ளன. ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல அமைச்சரவைக் கூட்டத்தின் பின் னர் ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசிய போது; ''இலங்கைக்கு உத்தரவுகள் பிறப்பிப்பதற்கு பிளேக்கிற்கு உரிமை கிடையாது. எப்படி ஜனநாய கத்தை பாதுகாப்பது என்பது பற்றி அல் லது 17 ஆவது திருத்தம் தொடர்பாக அபிப்பிராயம் கூற அவருக்கு உரிமையில்லை. இது முற்று முழுதாக எமது நாட்டின் உள் விவகாரம்'' என்றார். அவர் மேலும் இலங்கையில் சிறப்பான ஜனநாயகம் நிலவுகின்றது. வெளியார் எமக்கு அறிவுரை கூறத்தேவையில்லை என்றார்.ஆனால் தனிப்பட்ட முறையில் ரம்புக் வெலவின் கூட்டாளிகள் எவரும் அலட்டி கொண்டதாகத் தெரியவில்லை.

அவ்வாறானால் எமது வெளியுறவு அமைச்சர் இப்படியான விவகாரங்கள் பற்றி அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிங்டனுடன் அமெரிக்காவுக்கு சென்றபோது எவ்வாறு ஆலோசனைகள் நடத்தியிருக்கமுடியும் என்று அவர்களில் ஒருவர் கேட்டார்.

## நாளை

| | |
|---|---|
| ஆடி 11 | 27.07.2010 செவ்வாய்க்கிழமை |
| திதி: | : பிரதமை மு.ப. 09.07 வரை |
| நட்சத்திரம் | : திருவோணம் பி.ப. 12.21 வரை |
| சுபநேரம் | : 10.32 - 12.02 வரை |
| இராகுகாலம் | : 03.02 - 04.32 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகாசனப் பயிற்சி வகுப்பு

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''

புலோலி உபய கதிர்காமம் பெரிய தேவனத்தாய் ஆலய மண்டபத்தில் நாளை (27.07.2010) யோகாசனப் பயிற்சி வகுப்பு ஆரம்பமாகவுள்ளது. பயனடையச் சித்தம் கொண்டோர் 0777781440 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யவும்.

பயிற்றுநர்.
நாகர்கோயில் தேவன்.

## மரண அறிவித்தல்

### பேரம்பலம் நாகராஜா

(முன்னாள் உத்தியோகத்தர், துறைமுக அதிகார சபை - கொழும்பு)



நல்லூர் வடக்கு, சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தையை வதிவிடமாகக் கொண்டவருமான பேரம்பலம் நாகராஜா நேற்று (25.07.2010) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பேரம்பலம் - தங்கச்சியம்மா தம்பதியரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்ற நாகலிங்கம் - கனகம்மா தம்பதியரின் மருமகனும் மகாலட்சுமியின் (பட்டு) அன்புக் கணவரும், இராஜமனோகரி, இராஜமனோகரன் (சமூக சேவை உத்தியோகத்தர், சமூக சேவைகள் திணைக்களம் - வடமாகாணம்), இராஜகுலேந்திரன், இராஜகௌரி, இராஜரூபினி (ஆசிரியை, கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜசிங்கம், சித்ரா (ஆசிரியை, கொழும்பு இரத்மலானை இந்துக் கல்லூரி), மணிமேகலை, ரவிச்சந்திரா, நிரஞ்சன் (முகாமையாளர்) ஆகியோரின் அன்பு மாமனும் அக்ஷயா, ஆதித்யா, விகஷா, கணான், பூமிகா, மிகுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (26.07.2010) திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் ஒரு மணிக்குக் கிரியைகள் நடைபெற்று பி.ப. 3 மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/568997)

## பங்கு விநியோகக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 26

'பி.சி. ஹவுஸ்' நிறுவனத்தின் பங்கு விநியோகம் தொடர்பான கருத்தரங்கு இன்று நடைபெறவுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள கொழும்பு பங்குச் சந்தையின் யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தில் இன்று பி.ப. 3 மணிக்கு இந்த நிகழ்வு ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## நவக்கிரியில் இன்று சுற்றாடல் முகாம்

நவக்கிரி அ.மி.த.க. பாடசாலை, தோப்பு அருள்நந்தி வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளும் இணைந்து நடத்தும் சுற்றாடல் முகாம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

நவக்கிரி அ.மி.த.க.பாடசாலையில் இடம்பெறும் இந்த முகாமிற்கு யாழ்.கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் எஸ்.குகதாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (1-14)

## தேவை

நல்ல நிலையில் உள்ள 125 CC இற்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் Computer Monitor உடன் தேவை.

தொடர்பு: 077 2222564

## காணி விற்பனைக்கு

அரியாலை, நெடுங்குளம் சந்தியிலிருந்து சிறிது தூரத்தில், ஆட்காட்டி வீதியில் (குகன் வீதிக்கு அண்மையில்) கிணற்றுடன் கூடிய 1 1/4 பரப்புச் சதுரக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 222 1884

மீண்டும் -

## கண்டி அக்கூறியம்
## KANDY AQUARIUM

சகல விதமான வளர்ப்பு மீன்களையும் எம்மிடம் மிக மிக மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட விலைக் கழிவு!

கண்டி அக்கூறியம்,
கண்டி வீதி,
(பழைய பூங்கா வீதி நேர் முன்)
யாழ்ப்பாணம்.
0777033729

கண்டி அக்கூறியம்,
பிலிமத்தலாவ,
கண்டி.
0776569845

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பரும்,
எரிக்கணேஷ் பல், மூக்குக்
கண்ணாடியக உரிமையாளருமான
அமரர்

### வல்லிபுரம் கணேசலிங்கம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் மறைவுக்காக எமது கண்ணீர் அஞ்சலிகளையும் காணிக்கையாக்குகின்றோம்.

1039, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (100898)

ஸ்ரீ அம்பாள் வெல்டிங் வேக்ஸ் சொப்
உரிமையாளரும், ஊழியர்களும்.

## வேலை ஆள் தேவை

பிரபல்யமான தொலைத் தொடர்பு நிலையத்திற்கு MS Office, Computer Typing (Tamil / English), Coral Draw, PageMaking, Photo Designing போன்றவற்றில் முன்னனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை.

ஆங்கில அறிவும், வேலை முன்னனுபவமும் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

27, 28.07.2010 (செவ்வாய், புதன்) மு.ப. 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நேரில் வரவும்.

243, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 3302
077 3671545

(சி/569165)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை
மடியில்
12.06.1934

இறைவன்
அடியில்
06.08.2009



திதி: 26.07.2010

### அமரர் பரமு-பசுபதி

பண்பிற்கு வரைவிலக்கணமாய் வாழ்ந்தவரே எங்கள் ஐயாவே!
ஊரெல்லாம் உனைக் கேட்குது பண்பாளன் எங்கேயென்று
துடி துடித்து நிற்கின்றோம் உனைஎண்ணி என்றும் உங்கள் நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

கைதடி தெற்கு,
கைதடி. T.P: 0779116446

நீங்கா நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

## முக்கிய அறிவித்தல்

### முல்லைத்தீவு மேற்கு பனை, தென்னை வள அ.கூ.சங்கம் 31.05.2010இல் நிதிக் கூற்று தயாரித்தல்

மேற்படி எமது சங்கம் மீளக்குடியமர்ந்த பின் 31.05.2010 இல் கணக்குகளை ஒழுங்குபடுத்தி நிதிக் கூற்று தயாரிக்க வேண்டியுள்ளது. இதற்கமைய கீழ்வரும் விடயங்களை மேற்படி திகதியில் உறுதிப்பத்திரங்களை 31.07.2010 இற்கு முன் *தலைவர்/ பொதுமுகாமையாளர், முல்லை மேற்கு ப.தெ.வள. அ.கூ.சங்கம், பிரதான வீதி, முள்ளியவளை* எனும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கலாம். அல்லது நேரடியாகக் கையளிக்க முடியும்.

1. சங்கத்திற்கு வருமதியானது
   1. வியாபாரக் கடன் பெற்றோர்.
   2. முற்பணம் பெற்றோர்.
   3. மற்றும் ஏனைய வருமதிகள்

2. சங்கத்திடமிருந்து செலுத்த வேண்டியவை
   1. வியாபார சென்மதிகள்
   2. முற்பணம்
   3. ஏனைய சென்மதிகள்

3. மேற்படி எமது சங்கத்தின் அங்கத்தவர்களின் சேமிப்புப் புத்தகங்கள், சங்கத்தின் வங்கி தொடர்பான வைப்பு ஆவணங்கள் இருப்பின் பரிசீலனைக்காகச் சங்கத்திற்குச் சமர்ப்பித்து 31.07.2010இல் மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
4. இடம்பெயர்வு தொடர்பில் சங்கம் தொடர்பான தகவல் ஏதும் இருப்பின் அதனையும் சங்கத்திற்குச் சமர்ப்பிக்கவும்.

தலைவர்,
முல்லைத்தீவு மேற்கு பனை, தென்னை வள அ.கூ.சங்கம்,
பிரதான வீதி, முள்ளியவளை.

மு.புஸ்பலக்சுமி,
கணக்காய்வாளர்.

# கண்ணீர் அஞ்சலி



எனது உயர்வுக்கு வழிகாட்டிய
எரிக் கணேஸ் பல், மூக்குக் கண்ணாடியக உரிமையாளர்

## அமரர் வல்லிபுரம்-கணேசலிங்கம்

அவர்கள் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியும் துயரும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ந.சிவகுமார்
516, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(100593)

சொலெக்ஸ் பல்,
மூக்குக் கண்ணாடியகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள் குடியமர்ந்த நியமங்களுக்கு அமைய மெலிஞ்சிமுனை குடியிருப்பை அமைக்கவும்

## யாழ்.அரச அதிபரிடம் தமிழரசுக் கட்சி வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூலை 26
ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனைக் கிராமத்தில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கான குடியிருப்புகளை நிர்ணயிக்கப்பட்ட நியமங்களுக்கமைய அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கையினை விடுத்துள்ளது.

இது தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளர் சி.வி.கே. சிவஞானம் அரச அதிபரிடம் கையளித்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:

ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனைக் கிராமத்தில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்காக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள குடியிருப்புக்கள் பற்றிய சில குறைபாடுகள் சம்பந்தமாக தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய அவசியம் எற்பட்டுள்ளது. மெலிஞ்சிமுனைப் பிரதேசம் மிகவும் வறண்ட பின்தங்கிய பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு மீள் குடியமர்த்தப்பட்டுள்ள இடம் பெயர் மக்களுக்கான குடிசையமைப்பு வேலைகளை ஐ.ஓ.எம் நிறுவனம் பொறுப்பேற்றுள்ளது. பொது நியமங்களுக்கமைய வேண்டிய அடிப்படை வசதிகளுடன் இடம் பெயர்ந் தோருக்கான குடியிருப்பு, மலசல கூட வசதிகள், நீர் விநியோக வசதிகள் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுத்துவரும் இந்த நிறுவனம் மெலிஞ்சிமுனைக் கிராமத்துக்கு மட்டும் ஏன் இவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நியமங்களுக்கு அமையாது குடியிருப்புக்களை அமைக்க ஏற்பாடு செய்து வருகிறது என்று எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அரச அதிபரால் நிர்ணயிக்கப்பட்ட 240 சதுர அடிக்குப் பதிலாக 204 சதுர அடியாகவும் நான்கு அடுக்கு பக்க சுவருக்குப் பதிலாக இரண்டு அடுக்காவும் (Zinc) முலாம் பூசிய அலுமினியம் தகட்டுக்குப் பதிலாக சாதாரண தகரமும் பாவித்து இந்தக் குடிசைகளை அமைக்க உத்தேசிக்கப்படுவதாக அறியப்படுகிறது.

ஒரு லட்சத்து இரண்டாயிரம் ரூபா வரையான செலவு மதிப்பீட்டுக்குப் பதிலாக அறுபதினாயிரத்துக்குச் செலவு குறைக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. அன்றாட வாழ்க்கைக்கே அல்லாடும் இந்த மக்களிடம் பயனாளிப் பங்களிப்பு என்றும் சில விடயங்கள் நிர்ணயிக்கப்படுவதாகவும் தெரிகிறது. இது சாத்தியமற்ற ஒன்றாகும். இத்துடன் பயனாளிகளுக்கு ஏற்கனவே வழங்கிய பழுதடைந்த ஓட்டைகளுடன் காணப்படும் தகடுகளை கூரைக்கு பாவிக்கவும் எஞ்சிய கூரைக்கு தறப்பாள் சீற்றை பாவிக்கவும் உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

இவையெல்லாம் மாவட்ட செயலகமும் UNHCR இன் குடியியருப்புக் குழுவும் (Shelter Cluster) நிர்ணயித்த நியமங்களுக்கு அமைவாக இல்லையென்பது தெளிவு. இந்த குடியிருப்புக்கள் எதோ இரண்டு வாரம் ஒரு மாதத்துக்கான தேவை அல்ல. இவர்களுக்கான நிரந்தர வீட்டு வசதி எப்போது எப்படிக் கிடைக்கும் என்பது எவருக்கும் தெரியாது. ஆகக்குறைந்தது மூன்று வருடங்களாவது இக்குடியிருப்புக்களில் அந்த மக்கள் வாழ்ந்தாக வேண்டும். எனவே நிர்ணயிக்கப்பட்ட நியமங்களுக்கமைய இக்குடியிருப்புக்கள் அமைக்கப்படுவதை உறுதி செய்யுமாறு வேண்டுகி றோம் - என்றுள்ளது. (1-9)

## பாடசாலைகளுக்கு பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 26
யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட தரம் 13 மாணவர்களுக்கான முன்னோடித் தேர்வுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சபையின் பரீட்சைச் செயலாளர் இரா.செல்வ வடிவேல் அறிவித்துள்ளார். (ஓ-14)

## நீதிபதி, சட்டத்தரணிகள், பொலிஸார் இணைந்து வலி.வடக்கில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

வலி.வடக்கு, ஜூலை 26
யாழ்.குடாநாட்டில் பரவிவரும் டெங்கு நோயை ஒழிக்கும் நடவடிக்கைகளை தெல்லிப்பழைப் பொலிஸார் மல்லாகம் பகுதியில் உள்ள மல்லாகம் நீதிமன்றத்தின் அருகில் இருந்து முன்னெடுத்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 9 மணி முதல் மேற்கொள்ளப்பட்ட இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி சட்டத்தரணிகள் மற்றும் பொலிஸார் ஆகியோர் உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

பொலிஸார் இப்பணியைத் தொடர்ந்து மேற்கொண்டு தெல்லிப்பழைப் பிரதேசத்தில் டெங்கு பரவுவதை முழுமையாக கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடுவதுடன் விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-86)




'B.First' பாடசாலைக் காலணி கொள்வனவு செய்தோரில் தெரிவு செய்யப்பட்ட மாணவனொருவனுக்கு 'Bata' நிறுவனம் கணனியொன்றை நேற்று முன்தினம் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். இதில் தெரிவு செய்யப்பட்ட யாழ்.இந்துக் கல்லூரி மாணவனான கே. விதுரனுக்கு 'Bata' நிறுவன யாழ்.மாவட்ட முகாமையாளர் எஸ்.ஜெயகாந்தன் கணனியை வழங்குவதைப் படத்தில் காணலாம். (படங்கள்: சுகந்தன்)

## மத்தியஸ்தர் சபைகள் இனிமேல் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட பிணக்குகளையும் ஏற்கலாம்

### புதிய நடைமுறை ஓகஸ்ட் முதல்

நாவற்குழி, ஜூலை 26
நீதி அமைச்சினால் பிரதேச செயலகப் பிரிவுகள் தோறும் உருவாக்கப்பட்டுள்ள மத்தியஸ்த சபைகள் ரூபா ஒரு இலட்சத்துக்கு உட்பட்ட தொகைக் கொடுக்கல் வாங்கல் பிணக்குகளை எதிர்வரும் ஆகஸ்ட் 1ஆம் திகதி முதல் ஏற்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ரூபா 25இற்கு உட்பட்டதொகைப் பிணக்குகளை மட்டும் மத்தியஸ்த சபைகள் ஏற்றும் இணக்கம் காணும் முயற்சிகளில் ஈடுபட்டன.

அதற்கு மேற்பட்டதொகைப் பிணக்குகள் யாவும் நீதிமன்றத்தில் வழக்குகள் மூலமே தீர்க்கப்பட்டன.

பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று இத்தொகை ரூபா ஒரு இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளதாக நீதி அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்து ள்ளார்.

இதனால் பொதுமக்கள் வழக்குகளில் கால, பண விரயமின்றி தமது பிணக்குகளை மத்தியஸ்த சபைகள் மூலம் விரைவாகத் தீர்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. (1-121)




## நலன்புரி நிலையங்களின் தேவைகளை கண்டறிந்து பூர்த்தி செய்ய விசேட திட்டம்

மூளாய், ஜூலை 26
வலிகாமம் மேற்கில் உள்ள நலன்புரி நிலையங்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்படி அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு 'சேவாலங்கா' நிறுவனத்தின் நிதியுதவி பயன்படுத்தப்படவுள்ளது.

சுழிபுரம் ,தொல்புரம் ,சங்கானை ஆகிய பகுதிகளில் இடம் பெயர்ந்தோருக்கான பல நலன்புரி நிலையங்கள் இயங்கி வருகின்றன . இந்த நிலையங்களில் குடிதண்ணீர் வசதி மற்றும் மலசலகூட வசதிகளை தேவையான அளவில் ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடனேயே மேற்படி நிறுவனத்தின் நிதியுதவி பயன்படுத்தப்படவுள்ளது.

ஏற்கனவே சில நலன்புரி நிலையங்களில் இவ்வாறான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. (1-99)

## வளலாயில் மீள்குடியமர்ந்தவர்களுக்கு அறிமுகம் செய்த 'பணத்துக்கு வேலை' என்ற திட்டம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம் ஜூலை 23
வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் பணத்துக்காக வேலை செய்தல் பொது வேலைத்திட்டம் மூலம் இதுவரை வழங்கப்பட்டு வந்த உதவித்தொகையை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இடைநிறுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது .

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உயர் பாதுகாப்பு வலய பிரதேசமாக இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட வளளாய் பிரதேசத்தில் வடக்கின் தூரித மீட்சி திட்டத்தின் கீழ் பணத்திற்கான வேலை செய்தல் பொது வேலைத் திட்டம் மூலம் இதுவரை நாளொன்றுக்கு 500ரூபா வீதம் 40 நாட்கள் வேலை செய்த 236 பயனாளிகளுக்கு 20 ஆயிரம் ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

இதன் இரண்டாம் கட்டமாக நாளொன்றுக்கு ரூ.500வீதம் 50நாள்கள் பொது வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 8 நாள்கள் நிறைவடைந்த நிலையில் 4 ஆயிரம் ரூபா மட்டும் வழங்கப்பட்டு அத்திட்டம் இடை நடுவில் நிறுத்தப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலக வட்டாரங்கள் இது தொடர்பில் தெரிவிக்கையில்

தமக்கு யாழ் மாவட்ட வடக்கின் திட்ட அலுவலகம் பொருளாதர்ர அபிவிருத்தி அமைச்சு இத்திட்டத்தை இடைநிறுத்துமாறு அறிவித்ததாக தெரிவித்தன. (1-319)



வேலணைப் பிரதேச கடற்படையினரால் வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கெனக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் கையளிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

கட்டிக் கொடுக்கப்பட்ட வீடொன்றுடன் பயனாளிகள் குடும்பத்தையும் வழங்கப்பட்ட வீடொன்றை வடபிராந்திய கடற்படைக் கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் எஸ்.எம்.பி.விஜ[illegible] வடபிராந்திய பிரதிக் கடற்படைத் தளபதி சி.என்.பொன்னையா வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபா[illegible] அதிகாரிகளையும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## அமரர் வல்லிபுரம் கணேசலிங்கம்

**( உரிமையாளர், எரிக்கணேஸ் பல், மூக்குக்கண்ணாடியகம், யாழ்ப்பாணம்)**

பொன்னையா லேன், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கணேசலிங்கம் கடந்த 21.07.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம்-கனகம்மா தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்ற அரியகுட்டி-விஜயலட்சுமி தம்பதியரின் மருமகனும், சித்திராங்கதேவியின் அன்புக்கணவரும் பிரியங்கா, யுரேக்கா (மாணவிகள், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), துவாரகன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் சந்தானலட்சுமி, யோகேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும், திருச்சிற்றம்பலம் ரட்ணகுமார் (ஜேர்மனி), பகவதி, சுப்பிரமணியம், கனகரத்தினம் காலஞ்சென்ற தணிகாசலம், சாரதாதேவி (கனடா), குகனேசமலர், பரந்தாமன், காலஞ்சென்ற நிர்மலாதேவி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், நல்லநாதன் (கனடா), அருமத்துரை துரைரட்ணம் (கனடா), குமரேஸ்வரி, இமாவதி (பனை அபிவிருத்திச்சபை) ஆகியோரின் உடன்பிறவாத சகோதரனும், திருசாந்தினி, காலஞ்சென்ற சபேசன், காலஞ்சென்ற ரஜனி (கனடா) மற்றும் கேதீசன் (அயர்லாந்து), ரமேஷன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் சுதாகரன் (கனடா), சுதாமதன் (பிரான்ஸ்) சுதர்சன் (கனடா), சுஜீவன் (கனடா), யதுர்சன் (கன்டா), அனுராஜ், அயந்தா, கஜன் (கனடா), துசாந் (கனடா), தாரணி (கனடா) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரது இறுத்திக்கிரியைகள் இன்று (26.07.2010) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.
021 222 2486

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(சி/569163)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். பிராந்தியப் பொலிஸாரின் ஏற்பாட்டில் குடாநாடு முழுவதும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் யாழ். பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவ டெங்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பேரணியை ஆரம்பித்துவைப்பதை முதற்படத்திலும், மாணவர்கள், பொதுமக்கள் ஊர்வலமாகச் செல்வதை அடுத்த இரண்டு படங்களிலும் பொலிஸார் சிரமதானம் செய்வதை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள் : சுகந்தன், தட்சி, கர்ணி)

# இணக்கசபை உறுப்பினர்கள் சேவை மனப்பான்மையுடன் ஆன்மீகத்தை விசுவாசமாகப் பின்பற்றவும் வேண்டும்

## மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி அறிவுரை



யாழ்ப்பாணம், ஜூலை 26

இணக்கசபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்படுபவர்கள் அறிவு, அனுபவம், சேவை மனப்பாங்குடன் ஆன்மீகத்தை விசுவாசமாகப் பின்பற்றுபவர்களாகவும் இருக்க வேண்டும். அதன் மூலமே சமாதானமான அமைதியான சமூகத்தை உருவாக்க முடியும். இந்த விடயத்தில் பிரதேச செயலர், கிராம அலுவலர்களுக்கு முக்கிய பங்குள்ளது.

இவ்வாறு யாழ்.மேல்நீதிமன்ற முன்னாள் நீதிபதி இ.த.விக்கினராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாண மத்தியஸ்தர் சபையின் ஏற்பாட்டில் யாழ் வைத்தீஸ்வரா கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மத்தியஸ்தர் தின விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மத்தியஸ்தர் சபை என்ற சொற்ப தத்தைவிட இணக்க சபை என்ற சொற்பதமே பொருத்தமானதாகும். இணக்க சபையின் பத்தாவது சரத்து இதற்குச் சான்றாக உள்ளது.

அத்துடன் இணக்க சபை உறுப்பினர்களது கடமையும் 10 ஆவது பிரிவில் தெளிவாக்கப்பட்டுள்ளது.

பிணக்கு அல்லது தவறு தொடர்பாக இணக்க சபைக்கு வரும்போது அது தொடர்பான இரண்டு தரப்பினருக்கும் இடையில் எவ்வாறு பிணக்கு அல்லது தவறு ஏற்பட்டது என்பதனை கண்டறியவேண்டும்.

அது மட்டுமன்றி இரு தரப்பினரையும் இணக்கப்பாட்டுக்குக் கொண்டுவரவும் வேண்டும்.

பிணக்கு, தவறு குறித்து விசாரணை செய்யும் இணக்க சபை குழாம் மீது அந்த இரண்டு தரப்பினரும் நம்பிக்கை கொள்ளுமாறு நடந்து கொள்ளவேண்டும்.

புதிய இணக்க சபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும்போது பிரதேச செயலாளருக்கு முக்கிய பங்குள்ளது. இணக்கசபை உறுப்பினராக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் நபர் தொடர்பாக அவருடைய கிராம சேவையாளரிடம் விசாரித்து அறியவேண்டும். அவ்வாறு கிராம சேவையாளரின் ஆலோசனை பெறுவது வரவேற்கத்தக்கதாகும்.

இணக்க சபை தீர்வு வழங்குவதில்லை. அது இரண்டு தரப்பினரையும் இணங்க வைக்கும் செயற்பாட்டையே மேற்கொள்கிறது. பிணக்கு அல்லது தவறு தொடர்பாக வரும் இரு சாராரது கருத்துக்களை கவனமாக செவிமடுத்து, அவர்களிடம் என்ன பிணக்கு, தவறு உள்ளது என அறிந்து அது ஏற்பட்டதற்கான காரணம் அறிந்து கொள்ளப்படவேண்டும்.

எதிர்காலத்தில் மீளவும் அது இடம் பெறாத வகையில் இரண்டு தரப்பினரிடையேயும் மனமாற்றத்தை ஏற்படுத்தி புரிந்துணர்வு ஏற்பட வழிசெய்வது இணக்க சபையின் பிரதான பணியாகும்.

நீதிமன்ற நடைமுறையிலிருந்து வேறுபட்டதாக இணக்க சபையின் செயற்பாடு அமைந்திருக்கும்.

இணக்க சபையின் 88ஆம் ஆண்டு சட்டத்துக்கும் 97ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்துக்குமிடையில் வேறுபாடு உள்ளது.

97ஆம் ஆண்டு சட்டத்தில் பிணக்குக்கு இணக்கம் காணப்படவில்லையாயின் அதற்கான காரணமும் கண்டறிந்து கொள்வதுடன் பிணக்கு ஏற்பட்டதற்கான காரணமும் குறிப்பிட்டு சான்றிதழ் சமர்ப்பிக்கப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

### புரிந்துணர்வு ஏற்பட வேண்டும்

அது மட்டுமன்றி 97ஆம் திருத்தச் சட்டத்தில் பிணக்குகளுக்கு இணக்கம் காணவென 60 நாள் அவகாசம் வழங் கப்பட்டுள்ளது. இந்த கால அவகாசம் இரு தரப்பினருக்குமிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும் என நான் நினைக் கிறேன்.

இணக்க சபை உறுப்பினர்கள் அர்ப்பணிப்புடன் அன்பு, சகிப்புத் தன்மையுடன் சேவையாற்ற வேண்டும். இவ்வாறு சேவை செய்வதன் மூலம் சமாதானமான, அமைதியான சமூகத்தை படைக்கமுடியும் என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி.ஜோய் மகாதேவா, மத்தியஸ்தர் சபையின் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் ப.சனாதனன், யாழ். பொலிஸ் பிரதம அத்தியட்சகர் ஆகியோர் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர். (1-14)



தேசிய கல்வி நிறுவனத்தில் இருந்து வருகை தந்த வளவாளர்களினால் வலிகாமம் கல்வி வலய சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கற்பித்தல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

தேசிய கல்வி நிறுவன திட்டப் பணிப்பாளர் திருமதி மலிங்க வீரசிங்கா மகாஜனக் கல்லூரி ஆசிரியருக்கு உபகரணத்தை கையளிப்பதையும் ஏனைய அதிகாரிகள் கூட நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்-நேசன்)

# பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுக்காக சண்டிலிப்பாயில் நடமாடும் சேவை


மூளாய் ,ஜூலை 26

காலம் கடந்த பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப்பதிவுகளை பொதுமக்கள் பதிந்து கொள்வதற்காக நடமாடும் சேவை ஒன்று வலிகாமம் மேற்குப் பகுதியில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

டானிஸ் அகதிகள் நிறுவனத்தின் அனுசணையுடன் நடமாடும் சேவை ஒன்றை நடத்துவதற்கு தற்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மேற்படி பகுதிகளில் இவ்வாறன பதிவுகள் மேற்கொள்ளப்படாமலும் இவை தொடர்பான ஆவணங்கள் எதுவும் இல்லாத நிலையிலும் பலர் உள்ளனர்.

எனவே இப்படியான பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வுகளைக் காண்பதற்காகவே மேற்படி நடமாடும் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (1-99)




# சிறுவர்களுக்கு வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க தொல்புரம் மேற்கில் விசேட நூலகம் அமைப்பு

மூளாய், ஜூலை 26

வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் சிறுவர்களுக்கான விசேட நூலகம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது.

சிறுவர்களுக்கு மத்தியில் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் இந்த நூலகம் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கின்றது.

சர்வவோதயம் நிறுவத்தின் நிதி உதவியுடன் தொல்புரம் மேற்குப் பகுதியில் இந்த நூலகம் இயங்க ஆரம்பித்துள்ளது. சிறுவர்களுக்கான நூல்கள் மட்டுமல்லாது உயர்வகுப்பு மாணவர்களுக்கான கல்விசார் நூல்களும் இந்த நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. (99)

# நலன்புரி நிலையங்களிலிருந்து தோற்றி கணிதபாட முடிவு கிடைக்காத மாணவர் விவரம் வலயக் கல்விப் பணிமனையால் திரட்டப்படுகின்றது

யாழ்ப்பாணம் ,ஜூலை 26

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை 2008 இல் தோற்றி இதுவரை கணித பாட பெறுபேறு கிடைக்காத நலன்புரி நிலைய மாணவர்கள் பற்றிய விவரம் வலயக் கல்வி அலுவலகத்தினால் திரட்டப்படுகின்றது.

அத்துடன் கணிதபாட பெறுபேறுகளில் தீர்மானிக்கப்படவில்லை அல்லது தோற்றவில்லை அல்லது பொருத்தமற்றது எனும் சொற்பதங்கள் பாவிக்கப்பட்டு பெறுபேறு கிடைத்த மாணவர்களின் விவரங்களும் திரட்டப்படுகின்றன.

தென்மராட்சி பிரதேச நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த இப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் உடனடியாக தமது பெயர் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை, சுட்டெண்,தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகிய விவரங்களை வலயக் கல்வி அலுவலக நிர்வாகப் பிரிவுடன் தொடர்பு கொண்டு கையளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-227)

# வலி.மேற்கு இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் பயிற்சித் திட்டம் அறிமுகம்

மூளாய் ,ஜூலை 26

வலிகாமம் மேற்கில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கான விசேட சுயதொழில் பயிற்சித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் தொழில் வாய்ப்பு எதுவும் கிடைக்காமல் உள்ள இளைஞர் யுவதிகளுக்காகவே இச் சுயதொழில் பயிற்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையும் போரூட் நிறுவனமும் இணைந்து இத்தொழில் பயிற்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

வீட்டு மின்னிணைப்பு, மின்ஒட்டு வேலை, மோட்டார் தொழில்நுட்பம் ,மின் உபகரணங்கள் திருத்துதல் போன்ற பல்வேறு சுயதொழில்களை மேற்கொள்ளக் கூடிய வகையிலான பயிற்சிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

பயிற்சியாளர்களுக்கு ஊக்குவிப்புப் படியும் போக்குவரத்துச் செலவும் வழங்கப்பட இருப்பதாவும் தெரிவிக்கப்பட்டது. (1-99)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழரின் நடவடிக்கையின் பின்னணியில் இந்தியப் புலனாய்வுப் பிரிவு

**நிராஜ் டேவிட்**

ஈழத் தமிழர் விடயத்தில் இந்தியப் புலனாய்வுப் பிரிவு சில இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடும் சாத்தியம் உள்ளது என்று தமிழ் நாட்டு ஊடகவியலாளர் ஒருவர் கூறிய விடயம் பற்றி சில தினங்களுக்கு முன்னர் பார்த்திருந்தோம். அந்த இரகசியப் புலனாய்வு நடவடிக்கைகள் எப்படிப்பட்டவையாக இருக்கும் என்பது வெறும் ஊகமாகவே இருக்கின்றது.

ஆனால், ஈழத் தமிழர் விடயத்தில், குறிப்பாக புலம் பெயர்ந்த தேசங்களில் செயற்படுகின்ற தேசிய விடுதலை ஆதரவுத் தளம் மற்றும் வன்னியில் இருந்து வெளியேறியுள்ள விடுதலைப்புலிகள் விடயத்தில் இந்தியா நிச்சயம் ஏதாவது நடவடிக்கை எடுத்தேயாகும் என்கின்ற கூற்று ஆகியவற்றை நாம் இலகுவில் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.



நாம் மிகவும் அவதானமான இருக்கவேண்டிய தருணம் இது. கீழே விழுந்த நாம் மீண்டும் எழுந்து நிற்காமல் இருக்கும்படியான முயற்சிகளை யாரும் செய்துவிடாமல் எம்மை நாமே பாதுகாத்துக்கொள்ளும் அவசியம் எமக்கு இருக்கின்றது.

எனவே ஊகங்கள், கணிப்புக்கள் என்று கூறப்படுகின்ற விடயங்களைக் கூடச் சாதாரணமாக ஒதுக்கி வைத்துவிடாமல், அவை பற்றியும் பேசிக்கொள்வது அவசியம் என்றே நான் நினைக்கின்றேன்.

தமிழ் நாட்டில் உள்ள ஊடகவியலாளர் கூறுவதுபோன்று புலம் பெயர் ஈழத் தமிழரைக் குறிவைத்து இந்தியப் புலனாய்வுப் பிரிவு சில இரகசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவது உண்மையானால் அதனைத் தடுப்பதற்கு ஈழத் தமிழர் என்ன செய்யவேண்டும்?

இவை பற்றி நாம் விரிவாகப் பார்ப்பதற்கு முன்னதாக, இதுவரை ஈழத் தமிழர் விடயத்தில் இந்தியா செய்ததாக வெளிவந்த மேலும் சில இரகசிய நடவடிக்கைகள் பற்றிப் பார்ப்பது நல்லது என்று நினைக்கின்றேன். இது, இனிமேல் இந்தியா ஈழத் தமிழர் விடயத்தில் செய்வதற்குச் சாத்தியமாக உள்ள இரகசிய நடவடிக்கைகளை ஈழத் தமிழர் ஊகிப்பதற்கும், அவற்றில் இருந்து தன்னைக் காத்துக்கொள்வதற்கும் உதவியாக இருக்கும்.

1985ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய தலைவர்களும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுமான தர்மலிங்கம் மற்றும் ஆலாலசுந்தரம் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டார்கள்.

ஈழத் தமிழர்கள் மத்தியில் மாத்திரமல்ல இந்தியா மற்றும் சர்வதேசம் முழுவதிலும் பெரும் அதிர்ச்சியை இச்சம்பவம் ஏற்படுத்தியிருந்தது. இலங்கையிலும் இந்தியாவிலும் இருந்த அரசியல் கட்சிகள், தலைவர்கள் இந்தப் படுகொலையை மிகக் கடுமையாகக் கண்டித்தார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளே இந்தப் படுகொலைகளைச் செய்தனர் என அனைவருமே நம்பினார்கள்.

விடுதலைப் புலிகளே இந்தப் படுகொலைகளைச் செய்தனர் எனத் த.வி.கூட்டணித் தலைவர்களும் குற்றம் சுமத்தினார்கள்.

1986ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் விடுதலைப் புலிகளுக்கும் ரெலோ அமைப்பிற்கும் இடையில் ஈழத்தில் மோதல் உருவாகி, அதனைத் தொடர்ந்து ரெலோ அமைப்பு விடுதலைப் புலிகளால் தடைசெய்யப்பட்டது. ரெலோ அமைப்பின் தலைவர் சிறிசபாரெத்தினமும் நூற்றுக்கணக்கான டெலோ உறுப்பினர்களும் விடுதலைப் புலிகளால் கொலை செய்யப்பட்டார்கள்.

நூற்றுக்கணக்காணவர்கள் புலிகளால் கைதுசெய்யப்பட்டார்கள். அவ்வாறு புலிகளால் கைதுசெய்யப்பட்ட ரெலோ உறுப்பினர்களுள் கோப்பாய் தெற்குப் பகுதியைச் சேர்ந்த பழனிவேல் ராஜன் என்ற உறுப்பினர், ஓர் அதிர்ச்சியான தகவலைப் புலிகளிடம் வெளியிட்டார்.

அதாவது த.வி.கூட்டணித் தலைவர்களான தர்மலிங்கம் மற்றும் ஆலாலசுந்தரம் போன்றோரின் படுகொலையில் தானும் பங்கேற்றார் என அந்த ரெலோ உறுப்பினர் கூறியிருந்தார்.

விடுதலைப் புலிகளால் அவர் தீவிரமாக விசாரிக்கப்பட, ஒரு பெரிய இரகசியச் சதி அம்பலமானது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் படுகொலை செய்யும்படியான உத்தரவு ரெலோ அமைப்பின் தலைவர்களுள் ஒருவரான பொபி என்பவரால் தமக்கு வழங்கப்பட்டது எனவும், தாம் காரணம் கேட்டபொழுது, இது தலைமைப் பீடத்தின் முடிவு. இது ஓர் அரசியல் தந்திரம். விளக்கம் தேவையில்லை என்று அவர் தம்மிடம் தெரிவித்தார் எனவும் அந்த ரெலோ உறுப்பினர் வாக்குமூலம் கொடுத்திருந்தார்.

தங்கராசா என்ற அந்த ரெலோ உறுப்பினர் வழங்கியிருந்த வாக்குமூலத்தில் பின்வருமாறு கூறியிருந்தார்.

''இக்கொலைகளுக்கு வலன்டைன் தலைமை தாங்கினார். நானும், சிட்டிபாபுவும், ரஞ்சித்தும் நடவடிக்கையில் பங்குபற்றினோம். சம்பவம் நடைபெற்ற அன்றையதினம் வல்வெட்டித்துறையில் இருந்த எங்களது முகாமில் பழுப்பு நிற மொறிஸ் ஒகஸ்பேர்ட் கார் எங்களிடம் தரப்பட்டது. இந்தக் கார் சம்பவத்திற்கு முன்னய நாள் கிருபா என்பவரால் எங்கிருந்தோ கடத்திக் கொண்டுவரப்பட்டிருந்தது. அந்தக் காரில் நாம் நால்வரும் மாலை 7.30 மணிக்கு ஆலாலசுந்தரத்தின் வீட்டுக்குச் சென்றோம். பாஸ்போர்ட் விடயமாக அவருடன் பேசவேண்டும் என்று கூறினோம். வெளியே வந்த அவரைப் பலவந்தமாக காரில் ஏற்றிக்கொண்டு தர்மலிங்கம் வீட்டிற்குச் சென்றோம். ஆலாலசுந்தரம் உங்களுடன் கதைப்பதற்கு வந்துள்ளார் என்று கூறி அவரையும் காரில் ஏற்றினோம். அவர்களை அழைத்துக்கொண்டு 8 அல்லது 8.30 மணியளவில் கோண்டாவிலை வந்தடைந்தோம். தர்மலிங்கத்தை சிட்டிபாபுவுடன் அங்கு இறக்கிவிட்டு ஆலாலசுந்தரத்தை நல்லூர் இராஜ வீதிச் சந்திக்குக் கொண்டு சென்றோம். சனநடமாட்டம் அற்ற ஒதுக்குப் புறத்தில் ஆலாலசுந்தரத்தின் கண்களைக்கட்டி [illegible] கொன்றோம். பின்னர் திரும்பிவந்து தர்மலிங்கத்தை ஏற்றிக்கொண்டு தாவடி றோட்டில் உள்ள தோட்டவெளிக்குக் கொண்டு சென்றோம். அவரையும் சிட்டிபாபு சுட்டுக்கொன்றார். பின்னர் அவர்களது உடல்களை அவர்களது தொகுதிகளுக்குக் கொண்டு சென்று போட்டோம்.

பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினர் துரைரத்தினம் தொலைவில் இருந்ததால் அன்றிரவு அவரைக் கொல்லமுடியாமல் போய்விட்டது. நீலன் திருச்செல்வத்தையும் கொல்வதற்கு ஆயத்தங்கள் நடைபெற்றன என அறிந்தேன். இக் கொலைகளுக்கு ஓர் உப இயந்திரத் துப்பாக்கி, இரண்டு ஏ.கே-47 ரகத் துப்பாக்கிகள் எம்மால் உபயோகப்படுத்தப்பட்டன.

இப்படி அந்த ரெலோ உறுப்பினர் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

இந்த நடவடிக்கையை மேற்கொள்ளும்படியான உத்தரவு டெலோவை இயக்கிய இந்திய ஆய்வு பகுப்பாய்வுப் பிரிவு (Raw - Research and Analysis wing) அதிகாரியாலேயே வழங்கப்பட்டதாகப் பின்னர் தெரியவந்தது.

பல்வேறு அரசியல் காரணங்களுக்காக ஈழத் தமிழ்த் தலைமையை மிதவாத தலைமைகளிடம் இருந்து பிடுங்கி தமது கட்டுப்பாட்டின்கீழ் செயற்பட்ட ஆயுத அமைப்புகளிடம் கொடுக்க விரும்பிய இந்தியப் புலனாய்வுப் பிரிவு, அந்த நேரத்தில் தனது பூரணகட்டுப்பாட்டின் கீழ் செயற்படாத விடுதலைப் புலிகளையும் இந்தக் கொலைகளினூடாக மக்கள் மத்தியில் இருந்து அன்னியப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது. அதனை நோக்காகக் கொண்டே இது போன்ற இரகசிய நடவடிக்கைகள் அந்தக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டன.



அந்தக் காலகட்டத்தில், இந்தியாவில் தங்கியிருந்த ஈழ விடுதலை இயக்கங்களைப் படிப்படியாகப் பலவீனப்படுத்தவும், தமிழ்நாட்டு மக்களிடம் இந்த இயக்கங்களுக்கு இருந்துவந்த ஆதரவைக் குறைக்கவும் இந்தியாவின் உளவுப் பிரிவான ஆய்வு-பகுப்பாய்வு பிரிவு பல சதித் திட்டங்களைச் செயற்படுத்த ஆரம்பித்தது.

இயக்கங்களுக்கு இடையே முரண்பாடுகளை ஏற்படுத்தியது முதல், இயக்கங்களுக்கு உள்ளேயே பிளவுகளை ஏற்படுத்தியதன் பின்னணியில் இந்திய உளவு அழைப்பினது கைகள் இருக்கவே செய்தன.

இந்திய அமைப்பின் பூரண கண்காணிப்பின் கீழும், கட்டுப்பாட்டின் கீழும் செயற்பட்டு வந்த தமிழ் இயக்கங்களின் உள்ளே அந்தக் காலகட்டத்தில் திடீர் திடீர் என்று உட்பூசல்கள் ஏற்பட ஆரம்பித்தன. இயக்கங்களின் இரண்டாம் மட்டத் தலைவர்களுக்கு திடீரென்று பதவி ஆசை ஏற்படத் தொடங்கியது. மாற்று இயக்கங்களுடன் முரண்பாடுகள் வளர்ந்தன.

தமது இயக்க நடவடிக்கைகளை மாற்று இயக்கங்கள் கண்காணிக்கின்றன, தமது இயக்க நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை இலங்கை இராணுவத்திற்கு மற்றய இயக்கங்கள் வழங்குகின்றன என்பது போன்ற சந்தேகங்கள் எல்லா இயங்கங்களுக்கும் ஏற்பட்டன. சந்தேகங்கள் ஏற்பட்டன என்று கூறுவதைவிட சந்தேகங்கள் ஏற்படுத்தப்பட்டன என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

இயக்கங்களுக்கு இடையில் ஏற்பட்ட பிளவுகள், அவற்றைத் தொடர்ந்து ஏற்பட்ட இயக்க மோதல்கள் போன்றனவற்றிற்கு இந்தியப் புலனாய்வுப் பிரிவான 'றோ' அமைப்பினரது சதிவேலைகளே காரணமாக இருந்தன. ஒவ்வொரு இயக்கத்திற்கும் மாற்று இயக்கங்கள் பற்றிப் பிழையான எண்ணங்களை ஏற்படுத்தக்கூடிய தகவல்களை இந்திய 'றோ' அமைப்பினரே வழங்கியிருந்தனர்.

உதாரணமாக, தமிழ் நாட்டு பொலிஸ் உளவுத்துறையின் டீ.ஐ.ஜீ ஆக இருந்த கே.மோகனதாஸ், இந்தியாவில் தங்கியிருந்த விடுதலை இயக்கங்கள் பற்றிய விவரங்களை இலங்கை அரசுக்கு வழங்கினார் என்ற விடயம் பின்னாளிலேயே குறித்த இயக்கங்களுக்குத் தெரியவந்தது. இயக்கத் தலைமைகள் பற்றியும், உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றியும், அவர்களது நடவடிக்கைகள், அவர்களிடமுள்ள ஆயுதங்கள் ஆகியவை பற்றியும் இலங்கை அரசிற்கு இவர் வழங்கியிருந்தார் என்ற தகவல் நீண்ட காலத்தின் பின்னரே வெளிவந்தது. தமது இயக்க நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் மாற்று இயக்கங்கள் மூலமாகவே இலங்கை இராணுவத்தைச் சென்றடைகின்றன என்றே அதுவரை எல்லா இயக்கங்களும் நம்பியிருந்தன.

இதேபோன்று இயக்கங்களுடன் நெருங்கிப் பழகி பின்னர் இயக்கங்கள் பற்றிய தகவல்ளை இலங்கை அரசிற்கும் இயக்கங்களின் மீது தனது கழுகுப் பார்வையைச் செலுத்த ஆரம்பித்திருந்த அமெரிக்க உளவுத் தாபனமான சி.ஐ.ஏ. அமைப்பிற்கும் வழங்கிவந்த ஓர் அதிகாரியின் குட்டு நீண்ட நாட்களின் பின்னரே உடைந்தது.

தமிழ் நாட்டில் தமிழ் இயக்கங்களுக்கு ஆயுதப்பயிற்சி வழங்கிவந்த இந்திய ஆய்வு-பகுப்பாய்வு பிரிவான 'றோ' தமிழ் இயக்கங்களுடனான தனது தொடர்புகளுக்கு உன்னிக்கிருஷ்ணன் என்ற மலையாள அதிகாரியை நியமித்திருந்தது. உன்னிக்கிருஷ்ணன் தமிழ் இயக்கங்களுடன் மிகவும் நெருக்கமாகச் செயற்பட்டு இயக்க நடவடிக்கைகளுக்கு பலவிதமான ஆலோசனைகளை வழங்கி வந்தார். இயக்கங்களுக்குப் பிழையான தகவல்களை வழங்கி, இயக்கங்களுக்கு இடையில் பிளவை ஏற்படுத்திய சதியில் இந்த அதிகாரியே பிரதானமாகச் செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இயக்கங்களுக்கு இடையிலான பகையை ஏற்படுத்திய கைங்காரியத்தில் 'றோ' அமைப்பின் திட்டமிட்ட செயற்பாடுகள் இருந்துவந்தமை நீண்ட காலத்தின் பின்னரே இயக்கங்களுக்கு தெரியவந்தது. ஆனால் இயக்கங்கள், 'றோ' வின் சித்து வேலைகள் பற்றி அறிந்து கொண்டபோது காலம் கடந்துவிட்டது.

பிரதான இயக்கங்களுக்கு இடையில் பிளவை ஏற்படுத்தி அவற்றைப் பலவீனப்படுத்தும் பல நடவடிக்கைகள் இந்தியப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுவந்த அதேவேளை, தமிழ் நாட்டில் ஈழ விடுதலை இக்கங்கள் மீது தமிழ் நாட்டு மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தும் பல முயற்சிகளும் திட்டமிட்டு

(18 ஆம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. கல்வியியல் கல்லூரி மூடப்படும் அபாய நிலை!

மட்டக்களப்பு, ஜூலை 26

மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரி மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது எனக் கல்விச் சமூகம் சுட்டிக்காட்டுகிறது.

இதுவரைகாலமும் இருந்துவந்த 13 பாடத்துறைகளில் தற்போது ஆக 5 பாடத்துறைகள் மட்டுமே உள்ளன.

ஏனைய 8 பாடத்துறைகளும் கடந்த 2 வருட காலத்துள் திட்டமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது விசனத்தையும் ஆட்சேபத்தையும் கல்வியமைச்சரிடம் தெரிவித்துள்ளது.

தமிழ் அரசியல்வாதிகள் இதுவிடயத்தில் கவனமெடுப்பார்களா என்று கிழக்குக் கல்விச் சமூகம் எதிர்பார்க்கிறது.

எவரும் அக்கறை செலுத்தாவிடின் விரைவில் 5 பாடத்துறைகள் 2 ஆகி இறுதியில் கல்லூரி மூடப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றும் சமூகம் அச்சம் தெரிவிக்கின்றது.

இலங்கையில் 17 கல்வியியல் கல்லூரிகள் உள்ளன. கடந்தவருடம் 2010ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை உள்வாங்குவதற்கான விவரங்களும், விண்ணப்பப்படிவமும் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தன.

அவற்றின்படி, மட்டு. கல்வியியல் கல்லூரியில் மட்டுமே பாடக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விவசாயத்துக்குப் பெயர்பெற்ற கிழக்கிலுள்ள கல்வியியல் கல்லூரியின் விவசாயபீடம் மூடப்பட்டமை அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

2008இல் ஆரம்பநெறி மற்றும் தமிழ்ப் பாட நெறி ஆகியன மூடப்பட்டன. 2009 இல் தகவல் தொழில்நுட்பம், நடனம், சங்கீதம் ஆகியன மூடப்பட்டன. 2010 இவ்வாண்டில் நாடகமும் அரங்கியலும், விவசாயம், ஆங்கிலமொழிமூல கணிதம் ஆகிய பாடநெறிகள் மூடப்பட்டன.

இவ்விதம் 8 பாடநெறித்துறைகள் கடந்த 2 வருடகாலப் பகுதியில் மூடப்பட்டுள்ளன. இதனால் கிழக்குப் பகுதி மாணவர்கள் மட்டுமல்ல அங்கிருந்த விரிவுரையாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கில் நடனம், சங்கீதம், சித்திரம், விவசாயம் போன்ற பாடங்களுக்கு பெருமளவில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இந்நிலையில் அங்குள்ள பாடத்துறைகளை மூடுவதென்பது திட்டமிட்ட புறக்கணிப்பா என எண்ணத் தோன்றுகிறது.

தற்போது மட்டு. கல்வியியல் கல்லூரியில் கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பக் கல்வி, சமூக விஞ்ஞானம், சித்திரம் ஆகிய பாடநெறிகள் மட்டுமே உள்ளன.

143 முதல் வருட மாணவர்களும், 141 இரண்டாம் வருட மாணவர்களும், 108 கட்டுறுப் பயில்வு மாணவர்களும் உள்ளனர். நடனம் பயிலும் 42 மாணவர்களும் உள்ளனர்.

விவசாயம், நாடகம், அரங்கியல் ஆகிய பாடங்களுக்கு நிரந்தர விரிவுரையாளர்கள் மூவர் உள்ளனர். இப்பாடத்துறை மூடப்பட்டால் அவர்களையும் இழக்க வேண்டிவரும்.

தகவல் தொழில்நுட்பம் நவீன யுகத்துக்கு அத்தியாவசியமானதாகும். இதனை மூடியதும் பாகுபாடான செயலாகும். வணிகக் கல்விப் பாட நெறியை யாழ்ப்பாணத்திற்கும், வவுனியாவிற்கும் ஒதுக்கியுள்ளனர். ஆனால், மட்டக்களப்பிற்கு நிறுத்தியுள்ளனர். இதுவும் பாகுபாடா? எனவே, கல்விச் சமூகம் இக்கல்லூரியையிட்டு மிகுந்த வேதனையைக் காட்டியுள்ளது. (ளி)

# கிழக்குச் சிறைச்சாலையில் முதலாவது பள்ளி வாசல்

காத்தான்குடி, ஜூலை 26

கிழக்கு மாகாணத்தின் முதலாவது சிறைச்சாலைப் பள்ளிவாசல், கடந்த வெள்ளிக்கிழமை காலை மட்டக்களப்பு சிறைச்சாலையில் திறந்துவைக்கப்பட்டது.

கொழும்பிலுள்ள தனியார் வர்த்தகர் ஒருவர் வழங்கிய 6 இலட்சம் ரூபாய் நிதி கொண்டு இப்பள்ளிவாசல் நிர்மாணிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.செல்வராசா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பள்ளிவாசலைத் திறந்துவைத்தார்.

சிறைச்சாலை அத்தியட்சர் கித்சிறி பண்டார தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழாவில் சிறைச்சாலை நலன்புரிச் சங்கப் பிரதிநிதி கே.எம்.எம்.கலீல், சிறைச்சாலை அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிறைச்சாலையொன்றில் திறக்கப்படும் முதலாவது பள்ளிவாசல் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)




# பாரம்பரிய பொருள்களின் விவரம்: ஆவணப்படுத்தும் வேலைத் திட்டம்

மட்டக்களப்பு, ஜூலை 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலங்களில் பொதுமக்களால் உபயோகிக்கப்பட்டு வந்த பாரம்பரிய பொருட்கள் தொடர்பான விவரங்களை ஆவணப்படுத்தும் வேலைத்திட்டமொன்றை மாவட்ட செயலகக் கலாச்சாரப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

பிரதேச செயலக ரீதியாக அந்தந்தப் பிரதேசங்களில் பயன்படுத்தப்பட்டுவந்த பழைமைவாய்ந்த அரிதான பாரம்பரிய பொருட்கள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. பிரதேச செயலகக் கலாச்சார உத்தியோகத்தர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆபரணங்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள், உணவுப்பொருட்கள், மீன்பிடி, விவசாயம், மாட்டு வண்டியுடன் சம்பந்தப்பட்ட பொருட்கள், சடங்குப் பொருட்கள், மதவழிப்பாட்டுடன் தொடர்புடைய பொருட்கள், இசைக்கருவிகள் ஆகிய பாரம்பரிய பொருட்கள் தொடர்பான வரலாற்றுத் தரவுகளே சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படவுள்ளன. (ளி)

# காலாவதியான பொருள்கள் விற்பனை 20 வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு, ஜூலை 26

மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேசத்தில் காலாவதியான பொருட்களை விற்பனை செய்துவந்த வர்த்தக நிலையங்கள் கடந்த வியாழக்கிழமை காலை சுகாதார அதிகாரிகளால் சுற்றிவளைக்கப்பட்டன.

இதன் போது சுமார் 20 வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டன.

அவற்றிலிருந்து காலாவதியான இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்களை அதிகாரிகள் கைப்பற்றினர்.

கைப்பற்றிய இக் காலாவதியான பொருட்கள் பிரதேச சபை வளவில் குவிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் அழிக்கப்பட்டன.

மருந்துகள், பிஸ்கட்டுகள், குடிபானங்கள் உள்ளிட்ட பலபொருட்கள் இச்சுற்றிவளைப்பின்போது கைப்பற்றப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

# நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கத் தீர்மானம்

கண்டி, ஜூலை 26

மத்திய மாகாணத்தில் வாழும் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய மாகாண முதலமைச்சர் அறகட்டளை நிதியம் மூலமும், மாகாண கலாச்சார அமைச்சின் மூலமும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

இதற்காக 200 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுள் முதல் 20 பேருக்கு இந்தவருட இறுதிக்குள் தலா 3,000 ரூபா வீதம் மாதாந்தம் ஓய்வூதியமாக வழங்கப்படும் என மாகாண கலாசார அமைச்சின் பணிப்பாளர் ஐ.எம். சேனநாயக்க தெரிவித்தார். (ளி)




# புதிதுபுதிதாக முளைக்கும் சங்கங்களால் மலையகம் சின்னாபின்னமாவது உறுதி

## பிரதியமைச்சர் முத்துசிவலிங்கம் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 26

மலையகத்தில் பத்துப்பேருக்கு ஒரு சங்கம் உருவாகின்றது. லயத்திற்கு ஒரு தலைவரும் உருவெடுக்கின்றார். இந்நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் தேயிலைத் தோட்டங்களும், காணிகளும் சின்னாபின்னமாவதைத் தடுக்க முடியாது

அரசியல், தொழிற்சாங்கம் போன்றவை மலையகத்தை ஆட்டிப்படைத்து வருகின்றன. சமூகநலனைக் கருத்தில் கொள்ளாத சிலர் தமது சுயநலத்துக்காக மக்களுக்கு பொய் வாக்குறுதிகளை வழங்குகின்றனர். அத்துடன் நடைமுறைக்கு மாறான கருத்துக்களையும் திணிக்கின்றனர் - என இ.தொ.கா. தலைவரும், பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சருமான முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

மத்திய மாகாணத்தில் மின்சார வசதியற்ற தோட்டங்களுக்கு அதனைப் பெற்றுகொடுக்கும் நோக்குடன் அமைச்சர் அப்பகுதிகளுக்கு நேரடி விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அப்போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் இ.தொ.கா. தனித்துவத்துடன் செயற்படும். மலையகச் சமூகத்தின் வளர்ச்சிக்கான பல கோரிக்கைகளை முன்வைத்தே அரசுடன் இணைந்தது.

மின்சாரம், தண்ணீர் , கல்வி, சுகாதாரம், வீடு, பாதை போன்ற பல்வேறுபட்ட அபிவிருத்திகள் மலையகத்தில் இடம்பெற்றுள்ளன.

இவை அனைத்தையும் இ.தொ.காவினால் மட்டுமே செய்ய முடிந்தது. நேற்று பெய்த மழைக்கு இன்று முளைத்த காளான்கள் போலத் தோன்றியவர்கள், "இ.தொ.கா. எதுவுமே செய்யவில்லை'' எனப் பொய்ப் பிரசாரம் செய்து பிழைப்பு நடத்துகிறார்கள்.

இவர்கள் மற்றவரைக் குறைகூறுவதை விடுத்து தம்மால் இயன்றவற்றைச் செய்ய வேண்டும். முடிந்தால் பத்திரிகைகளில் பெயர் வராமல் செய்யுங்கள்.

மலையகத்தின் தந்தை அமரர் தொண்டமான் உருவாக்கிய இ.தொ.கா. என்ற சக்தியை எவராலும் அழிக்க முடியாது. இ.தொ.கா. பருவ காலங்களில் வரும் பனியல்ல.

அற்ப அரசியல் சுக போகங்களுக்காக இ.தொ.கா. தனது சமூகத்தை விலைபேசி விற்கவில்லை. பேரம் பேசும் அரசியலையே நடத் துகின்றது. இதன் விளைவாகவே வடக்கு, கிழக்குக்கும் சேவைசெய்யக் கூடிய இரு அமைச்சுகள் எமக்கு கிடைத்துள்ளன.

இதன் மூலம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கான பல அபிவிருத்தி திட்டங்களையும் மேற்கொள்ளவுள்ளோம்.

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், தனது அரசியல் சாணக்கியத்தால் அரசிடமும், வெளிநாட்டுத் தலைவர்களிடமும் இருந்து உதவிகளைப் பெற்று அபிவிருத்திப் பணிகளைச் செய்து வருகின்றார்.

ஆனால், சிலரோ பதவிக்கு பேராசைப்பட்டு, எமது உரிமைகளைத் தாரைவார்க்கும் நட வடிக்கையில் ஈடுபடுகின்றனர். இப்படிக் காட்டிக்கொடுக்கும் வேலைகளில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

இறுதிக்கட்ட யுத்தத்தில் சிக்கிய வடக்கு, கிழக்கு மக்கள் உயிர் வாழ்ந்தால் போதும் என்ற நிலையில் உள்ளனர். இந்த நிலையில் அவர்களுக்கு நாம் ஏதாவது செய்யவேண்டும்.

இ.தொ.காவுக்கு மலையகம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவுக்கு வடக்கு, கிழக்கும் முக்கியம் - இப்படி முத்துசிவலிங்கம் தெரிவித்தார். (ளி)

# ரூ.8,000 கடனை திருப்பிச் செலுத்த முடியாத தெனியாய தோட்டத் தொழிலாளி கடத்தல்!

கொழும்பு, ஜூலை 26

எட்டாயிரம் ரூபா கடனை மீளச் செலுத்தத் தவறிய தோட்டத் தொழிலாளி ஒருவர் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் ஒன்று தெனியாயவில் இடம்பெற்றுள்ளது.

தகவல் ஒன்றினடிப்படையில் பொலிஸார் மேற்கொண்ட துரித நடவடிக்கையால் அவர் மீட்கப்பட்டார் எனத் தெரிய வருகின்றது.

அத்துடன் தொழிலாளியைக் கடத்தினர் எனச் சந்தேகிக்கப்படும் இருவர் கடந்த திங்கட்கிழமை இரவு தெனியாய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்துக் கூறப்பட்டவை வருமாறு:-

தொழிலாளி கடத்தப்பட்டு டிரக் ஒன்றில் ஏற்றப்பட்டு தெனியாய வழியாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

டிரக்கின் பின்புறத்தில் இருந்த தொழிலாளி கூக்குரல் எழுப்பியுள்ளார். அதையடுத்து பாதையில் இருந்த சிலர் பொலிஸ் அவசர அழைப்பு பிரிவுக்கு தகவல் கொடுத்தனர்.

இதன் பலனாகத் தெனியாய பொலிஸார் கடத்தலை முறியடித்து தொழிலாளியை மீட்டனர். கடத்தப்பட்ட தொழிலாளி தெனியாய, இத்தகந்த தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்துள்ளார். அப்போது அவர் சந்தேக நபர்களிடம் எட்டாயிரம் ரூபாவைக் கடனாகப் பெற்றுள்ளார். எனினும், தான் வாங்கிய கடனை அவரால் திருப்பிச் செலுத்த முடியவில்லை. இதனால் அவர் கடத்தப்பட்டார்.

சந்தேகநபர்கள் தன்னைத் தாக்கினர். தான் 12 ஆயிரம் ரூபாவைக் கடனாக வாங்கினார் என கடன் புத்தகத்தில் பலவந்தமாக கையொப்பம் பெற்றுக்கொண்டனர் - என்று தொழிலாளி பொலிஸாரிடம் கூறியுள்ளார். (ளி)



பதுளை [illegible] தோட்டத்தில் அமைக்கப்பட்ட கலாச்சார மண்டபத்தை [illegible] அமைச்சர் செந்தில் தொண்டமான் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**
நீண்ட நாள்களாக சந்திக்காத நண்பர் ஒருவரைச் சந்திக்கலாம். உங்களுக்கு பிடிக்காத காரியம் ஒன்றை குடும்ப உறுப்பினர்கள் செய்தாலும், அதை பொறுத்துக் கொள்வீர்கள். தாயார் தொடர்பான விசயங்களில் பட்டும் படாமல் நடந்துகொள்ள வேண்டும். உறவினர் ஒருவர் கேட்ட உதவியை செய்ய மனமில்லாமல் கையை விரிப்பீர்கள்.

**இடபம்**
நீங்கள் பிறரிடம் கடன் வாங்கலாம். பெண்கள் மற்றவர்களிடம் பிறந்த வீட்டு பெருமை பேசுவர். நொடிப் பொழுதில் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்றுக்கு பல மணி நேரமாகலாம். தண்டச் செலவுகளைச் செய்யலாம். சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வீர்கள்.

**மிதுனம்**
முன்வைத்த காலை பின்வைக்காமல் எதிலும் துணிச்சலாகச் செயல்படுவீர்கள். மனைவி, குழந்தைகளுடன் சந்தோஷமாக பொழுதைக் கழிப்பதில் நாட்டம் செல்லும். தூரத்து உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம். கடந்த கால சம்பவம் ஒன்றை அசைபோட்டுப் பார்ப்பீர்கள். சுகமான அனுபவம் உண்டு.

**கடகம்**
தந்திரமாக செயற்படுவதன் மூலம் சில விஷயங்களில் ஆதாயம் பெறுவீர்கள். விவசாயிகள் விளை பொருள்கள் விற்பனை மூலம் கணிசமான வருவாய் பெறலாம். நாளைய சில காரியங்களுக்காக இன்றே முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். வேற்று மொழி பேசும் நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். கடன் விசூலாகும்.

**சிங்கம்**
குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கி தெளிவு பெறுவீர்கள். மரியாதை, கௌரவத்திற்கு பாதிப்பு வரும் சம்பவம் நடக்கும். உங்களின் பிரச்சினை ஒன்றை நண்பர்களிடம் சொல்லி யோசனை கேட்பீர்கள். வெளியூர் பயணங்கள் சென்றவர்கள் வீடு திரும்பலாம். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரிய அளவில் பயப்படுவீர்கள்.

**கன்னி**
உறவினர் அல்லது நண்பர் ஒருவர் மீது கோபம், வெறுப்பை காட்டுவீர்கள். பெரிய மனிதர்கள் சிலரின் கண்டிப்பற்கு ஆளாகலாம். ஒரு விசயங்களில் உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். சில காரியங்கள் எதிர்பார்த்த வேகத்திற்கு நடக்காமல், தடைகளைச் சந்திக்கலாம்

**துலாம்**
எந்த வேலையையும் சுலபமாக செய்து முடிப்பீர்கள். புதியவர்கள் சிலர் உங்களுக்கு உதவ முன்வரலாம். விரும்பிய உணவு வகைகளை வெளியிடங்களுக்குச் சென்று சாப்பிடுவீர்கள். பொழுது போக்கு உல்லாச விசயங்களில் நாட்டம் செல்லும். வீடு, மனை தொடர்பான விசயங்களில் அவசரம் வேண்டாம். நல்ல செய்தி கேட்கலாம்.

**விருச்சிகம்**
நண்பர் ஒருவர் மூலம் மற்றொரு நண்பரின் அறிமுகம் கிடைக்கும். சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைத்து விட்டு தப்பித்துக் கொள்ள லாம். தடைபட்ட காரியம் ஒன்றை நினைத்து பெரிய அளவில் கலக்கம் அடைவீர்கள். பிள்ளைகளின் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். மறதியால் அவதியுண்டு.

**தனுசு**
உங்களின் பெருமைகளைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவீர்கள். உங்களிடம் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம். பெண்களுக்கு வேலை நெருக்கடிகள் அதிகரிக்கும். தேக ஆரோக்கிய விசயங்களில் அக்கறை காட்டுவீர்கள். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவருக்கு பதில் உதவி செய்வீர்கள்.

**மகரம்**
சொந்தபந்தங்கள் தொடர்பான விசயங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. அரசியல்வாதிகள் நீண்ட தூரப் பயணம் செல்லலாம். மற்றவர்களுக்கு பிடித்த விசயம் ஒன்று உங்களுக்குப் பிடிக்காமல் போகலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். அலைச்சல், திரிச்சல் உண்டு.

**கும்பம்**
நினைத்தது நடக்க வேண்டும் என செய்த பிரார்த்தனை பலிக்கும். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு, சந்தோஷம் கூடும். பெண்கள் அல்லது ஆண்கள் வழியில் முக்கியமான உதவிகளைப் பெறலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்கும் வகையில் எதிலும் நடந்து கொள்வீர்கள். சுறுசுறுப்பாக செயல்படும் நாள்.

**மீனம்**
சிலரின் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம். எதிர்பாராத தடை, தாமதங்களால் எரிச்சல் அடையலாம். முக்கியமான வேலை ஒன்றுக்காக காத்திருக்கலாம். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் உங்களைத் தேடி வரலாம். உங்களை உற்சாகப்படுத்தும் வகையில் சிலர் பேசலாம். கடன்கள் தீரும்.

---

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன உரிமையாளர்

அமரர்

**வல்லிபுரம் கணேசலிங்கம்**

(எரிக்கணேஸ்)

21.07.2010 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். எரிக்கணேஸ் ஊழியர்கள்.

## கண்ணீர்க் காணிக்கை



எரிக்கணேஸ் பல், மூக்குக் கண்ணாடியக உரிமையாளர்

அமரர்

**வல்லிபுரம் கணேசலிங்கம்**

அவர்கள் காலமான செய்திகேட்டு அதிர்ச்சியும், துயரும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஞானக்குழந்தை இல்லம்,
பாலர் கல்விக் கழகம்,
49/5, யாழ்.வீதி, யாழ்ப்பாணம். நிர்வாகம்.

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் தவராசா புவனேஸ்வரன்**

மண்ணில் 17.02.1974 — விண்ணில் 14.07.2003

திதி: பிரதமை

உன்னோடு வாழ்ந்த நாம் இன்று உன் நினைவுகளோடு....

பழைய பொலிஸ்நிலைய வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (100493) குடும்பத்தினர்.

## மாநகர சபை முன்பள்ளிக்கு புதிய கட்டடம்

யாழ்.மாநகர சபையால் நடத்தப்பட்டு வரும் முன்பள்ளிக்கான புதிய கட்டடமொன்று மாநகர சபைக்குப் பின்புறமாக சங்கிலியன் வீதியில் அமைக்கப்பட்டு வருகின்றது.

'கேமாஸ்' நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் கீழ் கட்டுமானப் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றது.

செயலாளர் இ.இரத்தினசிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழாவின்போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது யாழ்.மாநகர சபை உறுப்பினர் எஸ்.மேரியம்மா முன்பள்ளி சிறார்களுக்கான 'பாண்ட்' வாத்தியக் கருவிகளை அன்பளிப்பு செய்வதாக உறுதியளித்தார்.

## நவாலியில் இன்று ஆடிவேல் ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

நவாலி கதிர்காம முருகன் ஆலயத்தின் ஆடிவேல் உற்சவ கிராமிய ஊர்வலம் இன்று திங்கட்கிழமை பி.ப. 3மணிக்கு இடம்பெறும்.

ஆலய பிரதம குரு சிவத்திரு மா.பத்மநாதன் தலைமையில் இந்த கிராமிய ஊர்வலம் இடம்பெறும்.

அன்று மாலை 7மணிக்கு திருக்காவடி நடனங்களும், தெய்வநாயகி அம்பாள் திருத்தரிசனமும் இடம்பெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 7மணிக்கு விசேட பூசையும், தீர்த்த உற்சவமும் அன்று மாலை 6.30 மணிக்கு கொடி இறக்கமும் நடைபெறும். (1-302)

**கற்பக விநாயகர் வர்த்தக நிலையம்**

புதிய, பழைய உரைப்பை வகைகள், சாக்குப் படங்கு வகைகள், பித்தளை, அலுமினியம், இரும்பு மற்றும் சகல போத்தல் வகைகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனையும், கொள்முதலும் செய்யப்படும். வியாபாரிகளுக்கு விசேட கழிவும் உண்டு. தொடர்பு: 3/6, கண்டி வீதி, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.
தொ.பே: 0773877075

கண்ணாடிக் குவளைகள் குறைந்த செலவில்



டயிடஸ் ஸ்டோஸ்
2439422

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 27.06.2010 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

**அமரர் சந்திரசேகரம் குமாரசாமி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (27.07. 2010) செவ்வாய்க்கிழமை காலை 6.30மணிக்கு திருநாவலூர் தெணிஅம்மன் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து வீட்டுச் சபிண்டீகரணக் கிரியைகள் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பூதராயர் ஒழுங்கை,
பருத்தித்துறை. (சி/569161)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஜாதிக சம்பத — Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 41
திகதி - 24.07.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: C — அதிர்ஷ்ட இலக்கம்: 06 — வெற்றி இலக்கம்: 9 4 9 8 4

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | C | 06 | 9 | 4 | 9 | 8 | 4 | ரூ. 14,077,966.00 | பரிசு - |
| 1 பரிசு | | 06 | 9 | 4 | 9 | 8 | 4 | ரூ. 2,000,000.00 | பரிசு - |
| 2 பரிசு | | | 9 | 4 | 9 | 8 | 4 | ரூ. 100,000.00 | பரிசு 02 |
| 3 பரிசு | | | | 4 | 9 | 8 | 4 | ரூ. 10,000.00 | பரிசு 23 |
| 4 பரிசு | | | | | 9 | 8 | 4 | ரூ. 1,000.00 | பரிசு 247 |
| 5 பரிசு | | | | | | 8 | 4 | ரூ. 50.00 | பரிசு 2475 |
| 6 பரிசு | | | | | | | 4 | ரூ. 20.00 | பரிசு 23613 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 9 | 4 | 9 | 8 | | ரூ. 1,000.00 | பரிசு 24 |
| 8 பரிசு | | | 9 | 4 | 9 | | | ரூ. 100.00 | பரிசு 245 |
| 9 பரிசு | | | 9 | 4 | | | | ரூ. 50.00 | பரிசு 2472 |
| 10 பரிசு | C | | | | | | | ரூ. 20.00 | பரிசு 9700 |
| 11 பரிசு | C | 06 | | | | | | ரூ. 100.00 | பரிசு 1106 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,749,710.00

வெற்றிபெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு ரூ. 14,502,379.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை ஒரு தவம்

சேதம் அடையக் கூடிய ஐந்து உறுப்புக்களையும் பாதுகாப்பான வலிய ஓட்டுக்குள் ஆமை இழுத்துக் கொள்வது போல உள்ளச் சமநிலை என்ற பாதுகாப்பில் ஐம்புலன்களும் ஒடுங்க வேண்டும் என்று சொல்கிறது கீதை. பின்னாளில் மகாகவி பாரதி பக்தி உடையார் காரியத்தில் பதறார். என்று சமூகத்தின் செவிகளில் தேன் பாய்ச்சிய கருத்தும் இதுவே.

'பதறாத காரியம் சிதறாது' என்று காலம் எழுதிய கவிதை - அதுதான் பழமொழி - படித்தது உண்டே. உணர்ச்சி மேலோங்கிய படபடப்பு, பரபரப்பு, காரியத்தின் மேன்மையைக் கெடுத்து விடுகிறது. பெரும்பாலும் உணர்ச்சி, தவறான முடிவுகளில் தள்ளி விடுகிறது. கோபம் , பச்சாதாபம் போன்ற உணர்ச்சிகளின் தூண்டுதலால் எடுக்கப்பட்ட முடிவுகள் நம் வாழ்வின் சரிவுக்கான காரணங்கள்.

சமநிலையில் எடுக்கப்பட்ட முடிவுகள், சமவெளியில் உருவான நாகரிகம் போல.... பதற்றம் இல்லாத மனோ நிலையில் விளைந்த தீர்மானங்கள் தீர்க்கமானவை. சாத்தியமானவை. நியாயமானவை. சமூகத்துக்கு. அவசியமானவை.

திருப்பதி பெருமாளுக்குப் பூக்கட்டும் திருப்பணி செய்தவர் அனந்தாழ்வார் என்கிற அடியவர். நாராயண என்னும் நாமத்தை நாவால் தொடுத்து, நந்தவனத்து நாள் மலரை நாரால் தொடுக்கும் நற்பணியாற்றிய நம்பியே அவர். அனந்தன் என்றால் பாம்பைக் குறிக்கும். ஆதிசேடன் பெயர் தாங்கிய அடியவரே அனந்தாழ்வார். ஒருநாள் பூக்களைத் தொடுக்கும் பக்திப் பணி புரிந்த போது பாம்பு ஒன்று அவர் விரலைத் தீண்டியது. பதறாமல் பணியைத் தொடர்ந்தார். பூமாலை கட்டி பெருமாள் திருத்தோளில் சாற்றப் போனார்.

பெருமாள் பதறினாராம். ''பாம்பு... பாம்பு... அனந்தா... பாம்பு கடித்துவிட்டது'' என்றதும் நிதானமாக அனந்தாழ்வார் ''ஸ்வாமி... கடித்த பாம்புக்கு விஷம் அதிகம் என்றால் கைங்கர்யம் அங்கே. கடியுண்ட பாம்புக்கு விஷம் அதிகமானால் கைங்கர்யம் இங்கே. பின் என்ன கவலை? என்றார்.

ஒருவேளை கடித்த பாம்பு விஷம் அதிகம் உடையது என்றால் மரணம் வரும். மரணம் வந்தாலும் கவலை இல்லை. இறந்தால் வைகுந்தம் போகலாம். அங்கும் மாலை கட்டிப் பெருமாளுக்கு இதே தொண்டு செய்யலாம். கடியுண்ட பாம்பாகிய (அனந்தன் = பாம்பு) தமக்கு விஷம் அதிகம் என்றால் மரணம் வராது. இறக்கவில்லை என்றால் இதே மாலை கட்டும் திருப்பணியை இங்கேயே தொடர்ந்து செய்யலாம். என்ன தெளிவு? என்ன உறுதி? துன்பத்துக்கு துன்பப்படாத மகாஞானி அவர்.

நம்மவர்களில் பலர் கஷ்டங்களால் சாவதை விட கஷ்டங்களைப் பற்றிய கற்பனைகளால் சாகிறார்கள். ஆபத்துக்களைவிட ஆபத்துக்களைப் பற்றிய கற்பனைகள் ஆபத்தானவை.



துன்பத்துக்கும் உயிருக்கும் பண்டமாற்றம் செய்யும் வாழ்க்கைச் சந்தையில் சில பேர் இன்பத்துக்கும் உயிரை விற்கிறார்கள். இது பெரிய வேடிக்கை அல்லவா? இரண்டு லட்ச ரூபாய் அதிஷ்ட லாபச் சீட்டுழுப்பில் குலுக்கலில், ஓர் இருதய நோயாளிக்குப் பரிசு கிடைத்து விட்டது. பரபரப்பாக இந்தச் செய்தியை அவரிடம் சொல்ல வந்த குடும்பத்தாரை டாக்டர் கடிந்து கொண்டார். திடீர் என்று சொன்னால் இந்த மகிழ்ச்சியை அவர் இதயம் தாங்காது என்று விளக்கி, தாமே சொல்வது என்று தீர்மானித்தார்.

மெல்ல மெல்ல நலம் விசாரித்தார். வெவ்வேறு விஷயம் பேசிவிட்டு சிரித்தபடி கேட்டார்.

'உங்களுக்கு லாட்டரியல் இருநூறு ரூபாய் விழுந்தால் என்ன செய்வீர்கள்?'

'எங்கே விழப்போவுது... விழுந்தா நீங்க எழுதின மருந்து எல்லாத்தையும் வாங்குவேன்'' என்றார் நோயாளி.

'ஒரு பத்தாயிரம் விழந்தால்...' இழுத்தார் டாக்டர்.

'வீடு ஒழுகுது. திருத்தம் செஞ்சிடுவேன்..' என்றார் அவர்.

'லட்ச ரூபாய் விழுந்தால்?'

'பொண்ணு கல்யாணத்தை முடிச்சிடுவேன். கவலை இல்லை.'

'இரண்டு லட்ச ரூபாய் நிஜமாகவே விழுந்தால் என்னதான் செய்வீர்கள்? உண்மையைச் சொல்லுங்கள்' என்று இறுதியாக விஷயத்துக்கு வந்தார் டாக்டர். 'என்ன செய்வேன்.. எவ்வளவு நல்ல டாக்டர் நீங்க... சாவிலிருந்து என்னைக் காப்பாற்றியவர். அதனால் ஒரு லட்ச ரூபாய் உங்களுக்கே கொடுத்து விடுவேன்' என்றார் நோயாளி. அடுத்த வினாடி 'ஆ' என்ற அலறல். நெஞ்சைப் பிடித்தபடி மயங்கி விழுந்தார் டாக்டர்! இந்த இன்ப அதிர்ச்சியைத் தாங்காமல் டாக்டரது இதயம் நின்று போய்விட்டது.

சுகமும் துக்கமும் இரண்டுமே ஆபத்தானவைதான். சமநிலைதான் சரியான வாழ்க்கை வழி. ஒரு நிமிட ஆத்திரத்தில் கொலை செய்துவிட்டு வாழ்நாள் எல்லாம் வருந்துவது.. ஒரு நொடி இரக்கத்தில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு விட்டு வாழ்வெல்லாம் அவளையும் அழவைத்து தானும் அழும் முட்டாள்தனம்... ஒரு கணம் இன்பம் கருதி ஒரு முழு வாழ்க்கையை நாசமாக்கும் மிருக வெறி... இவையாவும் ஸ்திதப்ரக்ஞனுக்கு இல்லை. அவனது வாழ்க்கை முழுவதும் ஒரு தவம். ஒரு யோகம்.. ஒரு பரிசுத்தமான யாகம்!

*நன்றி: சுகி.சிவம்*

# மரமும் மனிதனும்

ஒரு ராஜா தன் பரிவாரங்களோடு ஒரு காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தார். பக்கத்தில் அமைச்சரும் அதற்கு மத்தியில் அரண்மனை சேவகர்களும் போகிறார்கள். திடீரென ஒரு கல் ராஜாவொட நெற்றியில வந்து பட்டது. அவரும் நெற்றியைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தார்.

பக்கத்தில் இருந்தவர்கள் பதறிப் போனார்கள்! எங்கே இருந்து அந்தக் கல் வந்திருக்கும் எனத் தேடிக் கொண்டு எல்லோரும் நாலா பக்கமும் ஓடினார்கள். அங்கே ஒரு சின்னப் பையன் கையில் கல் வைத்துக் கொண்டிருந்தான். அமைச்சர் கோபமா இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்று கேட்டார்.

அவன் பயந்து போய் மெதுவாக வாயைத் திறந்து மாங்காய் அடித்துக் கொண்டிருக்கிறேன் என்றான். பக்கத்தில் ஒரு பெரிய மாமரத்தில் இரண்டு மாங்காய் இருந்தது. அவர் புரிந்து கொண்டார். மாங்காய்க்கு வீசிய கல்தான் மன்னன் நெற்றியில் வந்து பட்டிருக்கும். இருந்தாலும் சும்மா விட முடியுமா? மன்னன் முன்னால் நிறுத்தி இவன்தான் வீசியவன் இவனை சும்மா விடக் கூடாது. தண்டனை கொடுக்க வேண்டும் என்றார்கள் எல்லோரும். ராஜா யோசித்தார் நாளைக்கு அரண்மனையிலே விசாரணை செய்யலாம் என்று சொல்லிவிட்டுப் போனார்.

*சொன்னவர்: தென்கச்சி கோ.சுவாமிநாதன்.*

# சின்னச் சின்ன விதைகள் பெரிய பெரிய விருட்சம்!

''உங்கள் ஊரை மாற்றியமைக்க
நீங்கள் நாலைந்து பேர் போதும்.
கட்சி, சாதி, மதம் கடந்து நீங்கள்
சின்ன அளவில் ஒன்று சேர்ந்தால்,
ஒரு சங்கம் அமைத்தால் நாளை
இந்த நாடே மாறும். உருப்படியாக
ஏதாவது செய்யுங்கள். நல்லதைத்
தொடங்குங்கள். வெற்றி நிச்சயம்!''

பெரிய பெரிய காரியங்களைச் சாதிக்க வேண்டும் என்று பெரிய பெரிய கனவு காண்கிற சிலர் எதையுமே தொடங்கமாட்டார்கள். ஏன்? என்று கேட்டால் எல்லாம் ஒரே நேரத்தில் கூடி வர வேண்டும். சின்ன அளவில் எதையும் நான் செய்ய முடியாது... ஆரம்பமே பிரம்மாண்டமாக இருக்க வேண்டும் என்று கதை அளப்பார்கள்.

பிரம்மாண்டமான ஆலமரம் எதுவுமே பிரமாண்டமாகவே தோன்றியதில்லை. மீன் முட்டை போன்ற விதையும், விதையில் விழித்த தாவரக் கோடும்தான் தழைத்துப் பருத்துப் பெருத்துப் பிரம்மாண்டம் என்கிற நிலையை எட்டியது. தாய் வயிற்றில் விழுந்த ஒற்றைப் புள்ளிதான் பிள்ளையாய் விளைந்தது. தரையில் விழுந்து வாலிபமாய் வளர்ந்தது. பெரிய பிள்ளைகளாய் யாரும் பிறப்பதே இல்லை.

ஆடு தாண்டும் அகலத்தில் பிறந்த சின்னக் காவிரிதான் ஆனை தாண்ட முடியாத அகண்ட காவிரியாக அகலப்பட்டது. பெரிய பெரிய விஷயங்கள் எல்லாம் சின்னச் சின்னத் தொடக்கங்களால்தான் ஏற்பட்டன என்பதைப் புரிந்து கொண்டு தொடங்குங்கள்... வளருங்கள்... பெரிதாகவே பிறக்க வேண்டும் என்ற பேதைத்தனமான பிடிவாதத்தை விடுங்கள்.

உடுத்து மாற்றும் துணி இல்லாமல் உட்கார்ந்திருந்த ஐந்து சந்நியாசிகளின் சங்கல்பம்தான் இன்று உலகெங்கும் விரிந்து கிடக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் தெரியுமா? தட்சிணேஸ்வரத்தில் கங்கைக் கரையோரத்தில் மிகச் சின்ன அளவில் தொடங்கப்பட்டதுதான் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம். இன்று அப்படியா ராமகிருஷ்ணர் மீது வைத்த திடமான பக்தியும் விவேகானந்தர் பலமும் சேர்ந்து கோடி கோடி பக்தர்களையும் கோடி கோடி சொத்துக்களையும் உடைய அற நிறுவனம் ஆகிவிட்டது அது!

சின்னச் சின்ன விதைகளிலிருந்து பெரிய பெரிய விருட்சங்கள். பெரியப் பெரிய பள்ளிக் கூடங்கள், பல்லைக்கழகங்கள் நாலைந்து மாணவர்களுடன் ஒற்றை ஆசிரியருடன், கூரைக் கொட்டகையில் உண்டாயின என்ற செய்தி நம்ப முடிகிறது.


தாஜ்மஹால் ஒரே நாளில் கட்டப்பட்டதா? தஞ்சைப் பெரிய கோயில் ஒரே நாளில் உருவாக்கப்பட்டதா? கொஞ்சம் கொஞ்சமாகத்தான் எல்லாப் பெரிய விஷயங்களும் உருவாகின்றன. அடி அடியாகத்தான் கவிதைகள் பிறக்கின்றன. வரிவரியாகத்தான் கட்டுரைகள் பிறக்கின்றன. மந்திரத்தில்

காப்பியமும் கண நேரத்தில் பிறந்ததில்லை. உலகெல்லாம் என்ற ஒற்றை வரியிலிருந்துதான் பெரிய புராணம் பிறந்தது. எனவே பெரிய பெரிய முடிவுகளை எதிர்பார்த்திருந்தாலும் சின்னச் சின்னத் தொடக்கங்கள்தான் அவற்றின் ஆரம்பம் என்று அறிந்து கொள்ளுங்கள். ஆரம்பியுங்கள். ஒரே நாளில் எவனையும் தலைவனாக உலகம் உருவாக்குவதில்லை.

உங்கள் ஊர் உருப்பட வேண்டுமா? நாலைந்து பேர் இது பற்றிப் பேசி மாய்ந்து போகிறீர்களா? நாம் என்ன செய்ய முடியும் என்று அங்கலாய்த்துக் கொள்ளுகிறீர்களா? இந்தப் பெட்டைப் புலம்பலை (பாரதி பாஷையில்) உடனே நிறுத்துங்கள். உங்கள் ஊரை மாற்றியமைக்க நீங்கள் நாலைந்து பேர் போதும். கட்சி,சாதி, மதம் கடந்து நீங்கள் சின்ன அளவில் ஒன்று சேர்ந்தால், ஒரு சங்கம் அமைத்தால் நாளை இந்த நாடே மாறும். உருப்படியாக ஏதாவது செய்யுங்கள். நல்லதைத் தொடங்குங்கள், வெற்றி நிச்சயம்.

ஏமாளித்தனமாக எவனுக்காவது ரசிகனாகி எடுபிடியாகச் செத்துத் தொலைக்க வேண்டாம். அது தற்கொலைக்குச் சமம். நீங்கள் உயர, உயர, உங்களைச் சுற்றி உள்ள சமூகம் உயர ஏதாவது செய்யுங்கள். ''நாளைக்கு அதைச் செய்யப் போகிறேன்'' அதைத் தொடங்குங்கள்.

படித்தவர் பலர் இருக்கும் சபைகளில் கூட தேசிய கீதம்... என்று அறிவித்ததும் ஒருவரை ஒருவர் பார்க்கிறார்கள். தேசிய கீதமா தெரியாது! யார் தொடங்குவது யாராவது ''ஜனகன... என் றால், எல்லாரும் சேர்ந்து கொள் ளுகிறார்கள். தொடக்கம் தான் பிரச் சினை, நண்பர்களே, எது செய்ய நினைத்தாலும் உடனே தொடங்குங்கள். வெற்றி நிச்சயம்.



*நன்றி: சுகி.சிவம்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## கணக்கீடு 02 | பகுதி - I

*(கடந்த 20.07.2010 தொடர்ச்சி)*

* 31-35 வரையுள்ள வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கூற்றுக்கள் உண்மையானதா அல்லது பொய்யானதா எனக் குறிப்பிடுக.


31. பங்கு ஒன்றுக்கான உழைப்பில் குறுங்கால திரவத் தன்மையையும் அறியலாம். (   )

32. மின்சாரம் ஒரு மாறும் கிரயமாகும். (   )

33. பொருட் கட்டுப்பாடு கொள்வனவுடனும் தொடர்புடையது. (   )

34. நேரப்பதிவும், வேலை நேரப்பதிவும் வேறு வேறு விடயங்கள் அன்று. (   )

35. அலகுக்கான மாறும் கிரயத்தின் கிரய வரைபடம் இதுவாகும். (   )




* 36-40 வரையுள்ள வினாக்களின் கூற்றுக்களின் இடைவெளிகளை நிரப்புக.

36. இலாப அளவு விகிதம் ................................ இற்கும் ............................ இற்கும் இடையிலான தொடர்பைக் காட்டுகிறது.

37. நிலையான கிரயம் ........................ போது இலாபநட்டமற்ற புள்ளி அதிகரிக்கும்.

38. நிலையான கிரயம் குறைவடைந்தால் பாதுகாப்பு எல்லை ..............................

39. புதிய செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் ஏற்கனவே கிடைத்த நன்மை இழக்கப்படும் தொகை ................................ கிரயமாகும்.

40. எதிர்காலங்களில் குறிப்பிட்ட பணத்தின் பெறுமதியின் தற்போதைய பெறுமதி ................................ ஆகும்.

## கணக்கீடு 01 | பகுதி - II

01. அ. ஸமந்தா, வசந்தா, பிரியந்தா ஆகியோர் வியாபாரம் ஒன்றின் பங்காளர்களாவர். அவர்களுள் உடன்படிக்கையில் பின்வரும் ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

1) இலாபநட்டங்கள் சமமாகப் பகிரப்படவுள்ளன.
2) ஸமந்தா, வசந்தா, பிரியந்தா ஆகியோர் முறையே ரூபா 7500, ரூபா 6000, ரூபா 4500 என்னும் மாதச் சம்பளத்துக்கு உரித்துடையவராவர்.
3) முன்னைய பங்காளர் ஒருவரான ஜயந்தா என்பவருக்குச் சென்மதியான தொகையானது ஒவ்வொன்றும் ரூபா 90,000 ஆகிய ஆண்டுத் தவணைக் கட்டணங்களில் செலுத்தப்படுகிறது. இத்தவணைக் கட்டணங்கள் ஆண்டுக்கு 10% படி அட்டுறு வட்டியுடன் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 30 ஆம் திகதி கொடுபடவேண்டும்.

ஒவ்வோர் ஆண்டும் புதுப்பக்கப்படவேண்டிய நிலையான கட்டளை ஒன்றை வங்கிக்கு வழங்குவதன் மூலம் பங்காளர்களின் சம்பளங்கள் கொடுப்பனவு செய்யப்படுகின்றன. இதன்படி ஒவ்வொரு பங்காளரது மாதச் சம்பளமும் வங்கியினால் அவரது தனிப்பட்ட வங்கிக் கணக்கிற்குச் செலவு வைக்கப்படுகிறது. ஆயினும், 2008/09 ஆண்டுக்கான நிலையான கட்டளையிலான தட்டச்சு வழு ஒன்று காரணமாக வங்கியானது ஆண்டுபூராகவும் ஒவ்வொரு மாதமும் 75,000 ரூபாப்படி ஸமந்தாவின் வங்கிக் கணக்கிற்குச் செலவு வைத்திருந்தது. வங்கிக் கூற்றில் கொடுக்கப்பட்டிருந்த விவரங்களின்படி கணக்குப் பதிவாளர் கணக்கேடுகளில் பதிவுகளைச் செய்திருந்தார்.

2005 ஜனவரி 01 ஆம் திகதியில் முறையே ரூபா 450 000, ரூபா 600 000 ஆகிய தொகைகளுக்குப் பெறப்பட்ட காணியும் கட்டடமும் மேலதிக தொழிற்படு மூலதனத்தை ஏற்படுத்தும் பொருட்டு 2008 ஜூலை முதலாம் திகதியன்று விற்கப்பட்டன. எனினும், அதே திகதியன்று ரூபா 90 000 எனும் ஆண்டு வாடகைக்கு இக்கட்டடமானது நிவனத்திற்கு ஒரு குத்தகையின் அடிப்படையில் மீள் எடுக்கப்பட்டது. முதலாம் ஆண்டு வாடகைப் பணமானது விற்பனை வரும்படியிலிருந்து கழிக்கப்பட்டு எஞ்சியதொகை காசாக விற்பனைப் பதிவும் நிறுவன ஏடுகளில் செய்யப்படவில்லை.

வங்கியினால் செலவு வைக்கப்பட்ட பங்காளர்களின் சம்பளங்களை இலாப நட்டக் கணக்கிற்குத் தாக்கல்செய்த பின்னர் ஆனால் தேய்மானம், வட்டி என்பவற்றைத் தாக்கல்செய்ய முன்னர் 2009 டிசம்பர் 31 ஆம் திகதியன்று பின்வரும் பரீட்சைமீதி நிறுவன ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

பரீட்சைமீதி

| | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| காணி கிரயத்தில் 2009.01.01 | | 1,050,000 |
| கட்டடங்கள் கிரயத்தில் 2009.01.01 | | 1,200,000 |
| தளபாடங்களும் பொருத்திகளும் கிரயத்தில் 2009.01.01 | | 90,000 |
| மூலதனக் கணக்கு : | | |
| ஸமந்தா | 600,000 | |
| வசந்தா | 450,000 | |
| பிரியந்தா | 300,000 | |
| ஜயந்தாவின் கடன் கணக்கு 2009.01.01 | | 540,000 |
| வியாபாரத் தொக்கு | 289,500 | |
| முன் செலுத்தியவை | 36,000 | |
| 2009.06.30 அன் ஜயந்தாவுக்குக் கொடுத்த காசு | | 117,000 |
| 2008.12.31 முடிவடைந்த ஆண்டுக்கு நட்டம் | | 409,500 |
| நடப்புக் கணக்குகள் | | |
| ஸமந்தா | 18,000 | |
| வசந்தா | 51,000 | |
| பரியந்தா | 33,000 | |
| கடன்கொடுத்தோர் | 244,500 | |
| காணியினதும் கட்டடத்தினதும் விற்பனையிலிருந்தான வரும்படி | 873,000 | |
| தேய்மான ஏற்பாடுகள் 2008.01.01 | | |
| கட்டடங்கள் | 120,000 | |
| தளபாடம் பொருத்திகள் | 30,000 | |
| வங்கி மீதி | | 136,500 |
| | 3,294,000 | 3,294,000 |

கட்டடங்கள், தளவாடமும் பொருத்திகளும் ஆகியனமீது ஆண்டுக்கு முறையே 2%, 10% என்னும் வீதப்படி கிரயத்தின் மீது தேய்மானத்துக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிறுவனத்திலுள்ள தனது பங்கு தவிர்ந்த வேறெந்தச் சொத்துக்களையோ பொறுப்புக்களையோ விட்டுச்செல்லாது 2008 டிசம்பர் 31 ஆம் திகதி ஸமந்தா இறந்துபோனார்.

ஸமந்தாவின் இறப்புப் பற்றி எந்தவிதப் பதிவுகளும் நிறுவன ஏடுகளில் செய்யப்படவில்லை. இலாப நட்டங்களை 2:1 என்னும் விகிதத்தில் பகிர்ந்து கொண்டு வியாபாரத்தை நடத்திச் செல்வதற்கு வசந்தாவும் பிரியந்தாவும் இணங்கினர். 2008 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிவனத்தின் நன்மதிப்பு ரூபா 180,000 ஆகப் பெறுமானமிடப்பட்டது.

**வேண்டப்படுவது:**

1) 2009 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்டப் பகிர் கணக்கு.
2) 2009 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கு பங்காளர்களது மூலதனக் கணக்கும் நடப்புக் கணக்கும். (நிரல் வடிவில்)
3) 2010 ஜனவரி 01 ஆம் திகதி இருந்தவாறான புதிய நிறுவனத்தின் ஐந்தொகை.

ஆ. பின்வரும் தகவல்களிலிருந்து விற்பனை, கொள்வனவு, உட்திரும்பல், வெளித்திரும்பல் நாளேடுகளையும் பெறுமதிசேர் வரிக் கணக்கையும் தயாரிக்குக.

| | | |
|---|---|---|
| கடன்கொள்வனவு | - கொன்சி | ரூபா 33,600 (ஏய்வு 12%) |
| | சிவா | ரூபா 25,000 (ஏய்வுப் பதிவு செய்யாதவர்) |
| கடன் விற்பனை | | |
| | கமல் | ரூபா 100,800 (ஏய்வு 12%) |
| | நாதன் | ரூபா 22,400 (ஏய்வு 12%) |
| வெளித்திரும்பல் | - கொன்சி | ரூபா 4 480 |
| | சிவா | ரூபா 6,720 |
| உட்திரும்பல் | | |
| | கமல் | ரூபா 11,200 |
| | நாதன் | ரூபா 3,360 |

02. அ. பகத் என்பவர் ஒரு சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார். 2010 மார்ச் மாதத்திற்கான கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு:

| | ரூபா |
|---|---|
| 1) உரிமையாளரால் புகுத்தப்பட்ட முதலீடு - காசு | 200,000 |
| - அலுவலக உபகரணம் | 60,000 |
| 2) கடன் அடிப்படையில் பொருட் கொள்வனவு | 45,000 |
| 3) அலுவலக உபகரணக் காசுக் கொள்வனவு | 20,000 |
| 4) பொருட்களின் காசு விற்பனை (இப் பொருளின் கிரயம் ரூ. 10,000) | 25,000 |
| 5) கடன் கொடுத்தோருக்குச் செலுத்தப்பட்டது | 7,000 |
| 6) உரிமையாளரினால் எடுப்பனவு செய்யப்பட்ட காசு | 2,500 |

**வேண்டப்படுவது:**

1) ஒவ்வொரு ஊடுசெயல்களையும் பேரேட்டுக் கணக்குகளில் பதிவுசெய்க.
2) மேற்படி ஊடுசெயல்களினால் பின்வரும் கணக்குகளில் ஏற்படும் விளைவுத் தாக்கங்களை, அதாவது அதிகரிப்பு, வீழ்ச்சி, மாற்றமில்லை எனக் குறிப்பிட்டுக் காட்டுக.
காசு + தொக்கு + அலுவலக உபகரணம் = மூலதனம் + கடன்கொடுத்தோர்

ஆ. பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி பத்மா நிறுவனத்தின் மோட்டார் வாகனச் செலவீடு, போக்குவரத்துச் செலவீடு, பொழுதுபோக்குச் செலவீடு, தபால் தொலைபேசிச் செலவுகளுக்கான நிரல் முறையிலான சில்லறைக் காசேட்டினைத் தயாரிக்குக.

2009 ஜனவரிக்கான சில்லறைக் காசுச் செலவீடுகள்.

| திகதி | கொ.சீட்டு இலக்கம் | | ரூபா |
|---|---|---|---|
| 1 | 1 | சில்லறைக் காசு முற்பணம் பெறப்பட்டது | 7,000 |
| | 2 | எரிபொருட் செலவீடு | 600 |
| | 3 | நாற்காலி ஒன்று கொள்வனவு | 500 |
| 2 | 4 | அஞ்சலிடல் | 600 |
| 3 | 5 | கடன்கொடுத்தோன் சிறிக்குக் கொடுத்தது | 100 |
| 4 | 6 | பிரயாணச் செலவீடு | 200 |
| | 7 | தபாலுறைகள் | 500 |
| | 8 | முத்திரைகள் | 300 |
| 5 | 9 | குளிர்பானம் | 250 |
| | 10 | எரிபொருட் செலவீடு | 500 |
| | 11 | தேயிலை, சீனி, பால் என்பன | 100 |
| 6 | 12 | பிரயாணச் செலவீடு | 100 |
| 7 | 13 | எரிபொருட் செலவீடு | 400 |
| | 14 | வாகனப் பராமரிப்பு | 400 |
| 8 | 15 | முத்திரைகள் | 350 |
| | 16 | கடிதம் பதிவுசெய்தல் கட்டணம் | 500 |
| 9 | | மீளப் பெற்றுக்கொண்ட முற்பணம் | |

03. அ. நம்புங்கள் நாராயணன் நிறுவனத்தின் புத்தகங்களிலிருந்து பின்வரும் மீதிகள் 30 ஜூன் 2008 இல் எடுக்கப்பட்டன.

| | ரூபா |
|---|---|
| வியாபாரக் கடன்பட்டோர் | 143,000 |
| ஐயக்கடனுக்கான ஏற்பாடு (செலவு) | 3,200 |

ஐயக்கடன் ஏற்பாட்டுக்கான கம்பனியின் கொள்கை பின்வருமாறு:
ஒவ்வொரு காலாண்டின் கடன் விற்பனையின் 1.5% ஐ முதலாம் காலாண்டு இதியில் ஐயக்கடனுக்கான ஏற்பாடாகச் செய்வதுடன், கடன்பட்டோரின் காலப் பகுப்பாய்வுக்கமைய ஒவ்வொரு அரையாண்டு இறுதியிலும் ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கைச் செம்மையாக்கல் அறவிடமுடியாக்கடன் ஐயக்கடன் ஏற்பாடு பதிவழிக்கப்படுகிறது.

ஜூலை முதல் டிசம்பர் 2008 வரை அறவிடமுடியாக்கடன், ஐயக்கடன் ஏற்பாடு தொடர்பான நடவடிக்கைகள் வருமாறு:

| | | |
|---|---|---|
| ஓக.09 | - | பின்வரும் கடன்பட்டோர் மீதிகள் பதிவழிக்கப்பட்டன. க.கதிர் ரூபா 200, அ.அமர ரூபா 100, சி.சில்வா ரூபா 700. |
| செப்.30 | - | கடன் விற்பனை ரூபா 140,000 இற்கான 1.5% ஐயக்கடன் ஏற்பாடு பதியப்பட்டது. |
| ஒக்.18 | - | பின்வரும் மீதிகள் அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிக்கப்பட்டன. மதன் ரூபா 500, யோன்சன் ரூபா 400. |
| டிச.31 | - | கடன்பட்டோர் காலப்பகுப்பாய்விற்கமைய ஐயக்கடன் ஏற்பாடு பதியப்பட்டது. |

| | வயதுப் பகுப்பு | | | |
|---|---|---|---|---|
| மொத்த மீதி | 1 - 30 நாட்கள் | 31 - 60 நாட்கள் | 61 - 90 நாட்கள் | 90 இற்கு மேல் |

கடந்த வாரம் கணக்கீடு 02 இன் பகுதி I வெளிவந்தது

ஆசிரியர்: திரு.D.Sam, DMI, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்கீடு 02 — பகுதி - II

ரூபா 163,000

| மதிப்.ஐயக் | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
|---|---|---|---|---|
| கடன் ஏற்பாடு | 100,000 | 40,000 | 14,000 | 9,000 |
| வீதம் | 0.1% | 0.5% | 5% | 30% |

**வேண்டப்படுவது:**
1) மேற்படி நடவடிக்கைகளைப் (காசு உட்பட) பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக.
2) ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கைத் தயாரிக்குக.
3) 31 டிசம்பர் 2008 இல் ஐந்தொகையில் கடன்பட்டோர்.

ஆ. ஒரு காசுப் புத்தகத்தின் 2009 மார்ச் மாதத்திற்கான சுருக்கம் பின்வருமாறு:

| | ரூபா '000' வரவு | செலவு |
|---|---|---|
| முன் கொ.வந்தது | | 761 |
| கொடுப்பனவுகள் | | 1,262 |
| பெற்றவை | 1,469 | |
| மீதி கீ.கொ.சென்றது | 554 | |
| | 2,023 | 2,023 |

பெற்றவை எல்லாம் வங்கியிலிடப்பட்டதுடன் பணக்கொடுப்பனவுகள் காசோலையால் செலுத்தப்பட்டன. பின்வரும் தகவல்கள் வெளிப்படுத்தப் பட்டன.
1) நேரடி வரவுக்கட்டணம் ரூபா 300 காசுப் புத்தகத்தில் பதியப்படவில்லை.
2) கொடுப்பனவுக்காக எழுதப்பட்ட ரூபா 500 இற்கான காசோலை வங்கியில் மாற்றப்படவில்லை.
3) ரூபா 670 தொகையான காசோலைகள் காசுப்புத்தகத்தில் பதிவு செய்யப் பட்டதுடன் வங்கியிலும் செலுத்தப்பட்டது. ஆனால் ஏப்ரல் 2009 வரை வங்கியால் செலவுவைக்கப்படவில்லை.
4) ரூபா 100 பெறுமதியான ஒரு காசோலை கொடுப்பனவுக்குப் பதிலாகப் பெற்றவையாகக் காசுப்புத்தகத்தில் பதியப்பட்டிருந்தது.
5) ரூபா 123 இற்கான வேறொரு வாடிக்கையாளனின் காசோலை வங்கியால் தவறுதலாக வரவு வைக்கப்பட்டிருந்தது.
6) கிடைக்கப்பெற்ற ரூபா 450 இற்கான காசோலை வரையப்பட்டவருக்கு அனுப்புக என்ற குறிப்புடன் வங்கியால் திருப்பி அனுப்பப்பட்டது. ஆனால், காசுப்புத்தகத்தில் செம்மையாக்கல் ஒன்றும் செய்யப்பட்டிருக்கவில்லை.
7) பெற்றுக்கொள்ளவேண்டிய பங்குலாபங்கள் எல்லாம் வங்கிக்கணக்கில் நேரடியாகச் செலவு வைக்கப்படுகின்றன. மாதகாலத்தில் ரூபா 457 தொகை யானது வங்கியால் செலவு வைக்கப்பட்டிருந்தது. ஆனால், காசுப் புத்தகத் தில் ஒரு பதிவும் செய்யப்படவில்லை.
8) ரூபா 560 இற்கு எழுதப்பட்ட காசோலை ஒன்று காசுப்புத்தகத்தில் தவறு தலாக ரூபா 650 ஆகப் பதியப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:**
1) காசுப் புத்தகத்தில் ஏற்படுத்தவேண்டிய செம்மையாக்கலைக் காட்டுக.
2) 2009 மார்ச் 31 அன்றில் உள்ளவாறு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்குக.

04\. அ. ரண்சலு நிறுவனத்தின் பரீட்சைமீதி இணங்கவில்லை. தொங்கற்கணக்கு திறக்கப்பட்டு அதன்மூலம் பரீட்சைமீதி வேறுபாடு இடப்பட்டதுடன் வேறு பாடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன.
1) சதீஸ் என்பவருக்கான விற்பனை 2,400 அவரது கணக்கில் செலவு வைக் கப்பட்டது.
2) சில்வாவிற்குத் திருப்பியனுப்பிய பொருட்கள் ரூபா 3,500 சிவா கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
3) அலுவலக மோட்டார்கார் திருத்தம் 4,000 ரூபா அலுவலக மோட்டார்கார் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
4) அனுமதிக்கப்பட்ட விற்பனை ரூபா 4,000 விற்பனைக் கணக்கினுள் உள் ளடக்கப்பட்டிருந்தது. இதில் அரைவாசி திருப்பி அனுப்பப்பட்டிருப்பினும் அது உரிய கணக்குளில் பதியப்படவில்லை. இருப்பினும் திருப்பியனுப் பப்பட்ட பொருட்கள் இறுதி இருப்புக்களில் 1,000 ரூபா கிரயப் பெறுமதி யில் உள்ளடக்கப்பட்டிருந்தது.
5) இக்பாலிடம் கொள்வனவு 3,400 ரூபா கொள்வனவு நாளேட்டில் பதியப்பட் டிருப்பினும் கடன்கொடுத்தோர் பேரேட்டில் இமின் கணக்கில் தவறவிடப் பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:**
1) வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பதிவு.
2) தொங்கல் கணக்கு.

ஆ. 2009 டிசம்பர் 31ஆம் திகதியன் வரையறுத்த சம்பத் கம்பனியின் வருமதியா ளர்கள் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கிலுள்ள ரூபா 120,000 ஆன மீதி வருமதியாளர்கள் பேரேட்டிலிருந்து பெறப்பட்ட மீதிகளின் மொத்தத் தொகை யுடன் ஒத்திருக்கவில்லை. பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
1) விற்பனைகளின் ஒரு தொகுதி மொத்தத் தொகையான ரூபா 143,45 ஆனது கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா 143,542 ஆகப் பதிவிடப்பட்டது இந்த விற்பனைக்கான தனித்தனிப் பேரேட்டுக் கணக்குப் பதிவுகள் சரி யாகவுள்ளன.
2) விற்பனைத் திரும்பல்களான ரூபா 450 ஆனது வருமதியாளர்கள் பேரேட் டில் சரியாகப் பதிவிடப்பட்டிருந்தாலும் கட்டுப்பாட்டுக் கணக்கிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளது.
3) செலவு மீதியான ரூபா 15 ஆனது வருமதியாளர்களின் அட்டவணையில் வரவு மீதியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:**
விற்பனைப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் சரியான மீதியைக் காட்டுக.

05\. அ. பின்வரும் நாட்குறிப்புப் பதிவுகள் அஜித்தின் ஏடுகளிலிருந்து பிரித்தறியப் பட்டன.

பொதுநாட்குறிப்புப் பதிவேடு

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| 1) மின்கட்டணம் | வரவு 5,000 | |
| செலுத்தப்படவேண்டிய மின்கட்டணம் | | 5,000 |
| (ஆண்டின்போது பெறப்பட வேண்டிய மின்கட்டணமாக) | | |
| 2) அறவிடமுடியாக்கடன் செலவு | வரவு 4,500 | |
| ஐயக்கடன் ஏற்பாடு | | 4,500 |
| (ஐயக்கடன் ஏற்படல்) | | |
| 3) பொறி இயந்திரங்கள் | வரவு 150,000 | |
| கடன்கொடுத்தோர் | | 150,000 |
| (பொறி இயந்திரங்கள் கடனுக்கு வாங்குதல்) | | |
| 4) மோட்டார் வாகனங்கள் | வரவு 500,000 | |
| மூலதனம் | | 500,000 |
| (உரிமையாளரின் வாகனத்தை வியாபாரத் திற்கு வழங்கியது தொடர்பாக) | | |

**வேண்டப்படுவது:**
மேற்படி ஒவ்வொரு நாட்குறிப்புப் பதிவினையும் தயாரித்தலில் பிரயோகிக் கப்பட்ட மிகவும் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருவைக் கூறுமாறு நீர் கேட்கப்பட்டுள்ளீர்.

ஆ. சங்கர் நிறுவனம் 1 ஜனவரி 2006 இல் லேசர் பிறிண்டர் ஒன்றை ரூபா 18,000 இற்கு வாங்கியது. இப் பிறிண்டர் 4 வருடங்கள் பாவிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. அத்துடன் கழிவுப்பெறுமதி எதுவும் இல்லை எனவும் கருதப்பட்டது.

| வருடம் | பிறிண்ட் செய்யும் தாள்கள் |
|---|---|
| 2006 | 35,000 |
| 2007 | 45,000 |
| 2008 | 45,000 |
| 2009 | 55,000 |

**வேண்டப்படுவது:**

அ. பின்வரும் முறைகளில் 2006, 2007, 2008, 2009 ஆண்டுகளுக்குரிய பெறு மானத்தேய்வுக் கணிப்பீடுகள்:
1) நேர்கோட்டு முறை.
2) ஒடுங்குபாக மீதிமுறை வருடம் 60%
3) வெயியீட்டு அலகு முறை

ஆ. 1 ஜூலை 2009 இல் இவ் லேசர் பிறிண்டர் ரூபா 2,000 விற்கப்பட்டால், ஒடுங்குபாக முறையில் வருடத்திற்கு 60% தேய்விடப்படுமெனக் கொண்டு, 2009 இற்குப் பின்வரும் கணக்குகளைத் தயாரிக்குக.
1) லேசர் பிறிண்டர் கணக்கு.
2) பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு.
3) சொத்து முடிவுசெய்தற் கணக்கு.

06\. அ. அன்பர் பலசரக்கு மற்றும் பொதுப் பண்டங்களை விற்கும் கடை ஒன்றின் உரி மையாளரால் இதற்கு முன்னர் ஒரு கணக்காளரை அவர் வேலைக்கு அமர்த்தி யிருக்கவில்லை. கீழ்க்காட்டப்பட்ட கணக்குக் கூற்றானது உள்நாட்டு இறை வரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும் அது பூரணப்படுத்தப் பட்டிருக்கவில்லை என்ற காரணத்தால் திணைக்களத்தினால் மறுதலிக்கப் பட்டது.

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| பொருட்களுக்கான கொடுப்பனவுகள் | 19,000 | பெறுவனவுகள் | 22 000 |
| செலவுகளுக்கான கொடுப்பனவுகள் | 2,400 | | |
| இலாபம் | 600 | | |
| | 22 000 | | 22 000 |

பதிவேடுகளைப் பரீட்சித்து கணக்குகளைத் தயாரிக்குமாறு அவர் உம்மைக் கேட்டுள்ளார்.
1) ஒவ்வொரு நாளின் இதியில் கையிருப்பைக் கணக்கெடுத்து அதன்படி தின சரி விற்பனைகள் ஒரு குறிப்புக் காசேட்டில் பதியப்பட்டதுடன் அந்தக் காசேடு தீயினால் அழிந்துவிட்டது. எனினும், மொத்தப் பெறுவனவானது ரூபா 22,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது
2) கணக்குகளின் பின்வரும் மீதிகள் காணப்பட்டன.

| | 2009.03.31 ரூபா | 2010.03.31 ரூபா |
|---|---|---|
| காசுக் கையிருப்பு | 100 | |
| ஐயக்கடன் ஏற்பாடுகள் | 920 | 1 000 |
| கடன்பட்டோர் | 4 000 | 7 000 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 440 | 600 |
| வியாபாரத் தொக்கு | 3 000 | 2 000 |

3) ரூபா 300 பெறுமதியான கடன்பட்டோர் மீதி வருடத்தின்போது அறவிடப் படமுடியாததாகக் கைவிடப்பட்டுள்ளது.
4) செலவுகளாகக் காட்டப்பட்ட ரூபா 2,400 இனுள் ஆண்டிற்கான வாடகை யும் சோலைவரியுமான ரூபா 210 உள்ளடக்கப்பட்டிருப்பதுடன், இதில் 1/3 பங்கு தனிப்பட்ட (சொந்த) தங்குமிடச் செலவாகக் கொள்ளப்படல் வேண்டும்.
3) கீழ்க்காட்டப்பட்ட கொடுப்பனவுகளும் செலவாகக் காட்டப்பட்ட ரூபா 2,400 இனுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. வீட்டுச் செலவுக்காக மாதமாதம் ரூபா 80 எடுக்கப்பட்டிருந்தது. ஆண்டின்போது நண்பர் ஒருவரிடமிருந்து ரூபா 700 விலையில் பழைய மோட்டார் வாகனம் கொள்வனவு செய்யப் பட்டதுடன் வியாபாரத்திலிருந்து வழங்கப்பட்ட பொருட்களுக்காக நண் பனால் செலுத்தப்படவேண்டியிருந்த ரூபா 134 ஐக் கழித்துக் கொண்டு எஞ்சிய தொகை செலுத்தப்பட்டிருந்தது.
4) சம்பளமாகச் செலுத்தப்பட்ட ரூபா 400 இற்கான பற்றுச்சீட்டு ககிடைத்திருப் பதுடன் இத்தொகை தரப்பட்ட செலவுகளுள் உள்ளடக்கப்படவில்லை.

சகல கொள்வனவுகளும் விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகக் கொள்க.

**வேண்டப்படுவது:**
1) 2010.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கணக்கு.
2) 2010.03.31 ஆம் திகதியில் ஐந்தொகை.

ஆ. 31 டிசம்பர் 2009 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஆதவன் கழகத்தின் பெறு கைகள் கொடுப்பனவுக் கணக்குகள் கீழே தரப்படுகின்றன.

| பெறுகைகள் ரூபா '000' | | கொடுப்பனவுகள் ரூபா '000' | |
|---|---|---|---|
| மீதி.மு.கொ.வந்தது | 2,050 | சம்பளங்கள் | 1,200 |
| சந்தா 2007 | 80 | பொது செலவுகள் | 260 |
| சந்தா 2008 | 4,100 | கழியாட்ட நிகழ்ச்சிச் செலவுகள் | 900 |
| சந்தா 2009 | 120 | வார இதழ்களும் சஞ்சிகைகளும் | 50 |
| பொது அன்பளிப்புகள் | 1,080 | நிர்வாகச் செலவு | 120 |
| களியாட்ட நிகழ்ச்சிச் சேகரிப்புகள் | 1,900 | நீச்சல் தடாக வாடகை | 150 |
| பழைய சஞ்சிகைகளும் வார இதழ்களுக்குமான விற்பனை | 90 | வெள்ளப் பெருக்குக்கான அன்பளிப்பு | 300 |
| | | திறைசேரி முறிகளில் முதலீடு | 4,000 |
| மின்சாரமும் தொலை பேசியும் | 280 | மீதி.கீ.கொ.வந்தது | 2,160 |
| | 9,420 | | 9,420 |

பின்வரும் மேலதிக தகவலும் கிடைத்துள்ளன.
1) ஒவ்வொருவரும் ஒரு வருட சந்தாவாக ரூபா 10,000 செலுத்த வேண்டும். 2009ஆம் ஆண்டுக்கான 500 அங்கத்தவர்களின் சந்தா இன்னமும் நிலுவை யாக உள்ளது.
2) நீச்சல் தடாக வாடகையில் ரூபா 50,000 30 ஜூன் 2010 வரைக்கும் முற் பணமாகச் செலுத்தப்பட்டுள்ளது.
3) டிசம்பருக்கான சம்பளப்பட்டியல் தொகை ரூபா 100,000 செலுத்தப்பட் டிருக்கவில்லை.
4) புத்தகத்தில் பிரதிபலிக்கும் கட்டடக்கிரயம் ரூபா 10 மில்லியன் 2009 ஆம் ஆண்டு தொடங்கி ஆண்டுக்கு 5% பதிவழிக்கப்படவேண்டியுள்ளது.
5) வைத்திருந்த 5 மாதங்களுக்கான அரசாங்க முறியின்மேல் ஆண்டுக்கு 6% வட்டி அட்டுறு சேர்ந்துள்ளது.
6) 31 டிசம்பர் 2008 இல் உள்ளவாறான மூலதன நிதிக்கணக்கு மீதி ரூபா 12.13 மில் ஆகும்.
7) அன்பளிப்பு பொதுவானதாகவும் காலத்துக்கான வருமானமாகவும் பாவிக்குக.

**வேண்டப்படுவது:**
1) 31 டிசம்பர் 2009 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானச் செலவைத் தயாரிக்குக.
2) 31 டிசம்பர் 2009 இல் ஐந்தொகை.

(நிறைவுற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்வு

எமது கல்லூரியின் ஆசிரியர்களான
திருமதி சி.கந்தசாமி அவர்களின் அன்புத் தாயும்
திருமதி இ.சிவனொடியான் அவர்களின் அன்பு
மாமியுமாகிய

**திருமதி சிவபாக்கியம் நடராஜா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆத்ம
சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம்,**
**யாழ்.வைத்தியா கல்லூரி.**

(100877)


## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 559
திகதி 2010/07/24

சுப்பர் இலக்கம் 23
வெல்லப்பட்ட இலக்கங்கள் 45 49 54 55

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 27,948,600.00 வீதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 வீதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 வீதம் | 09 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 வீதம் | 228 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 வீதம் | 451 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 வீதம் | 11,201 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 வீதம் | 6,446 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீதம் | 162,317 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீதம் | 25,909 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ.7,499,460.00
சுப்பர் பரிசு ரொக்க ஜீப் வண்டியுடன் மீதித் தொகை பணமாக

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 28,162,826.40

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk


## நீங்காத நினைவில்
## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 25 . 12 . 1914

விண்ணில் 26 . 07 . 2000



**அமரர் Major N.A. இம்மானுவேல்**

(இளைப்பாறிய நிறைவேற்று அதிகாரி, துறைமுக கூட்டுத்தாபனம், மேஜர்- ஆர்டிலறி ரெஜிமண்ட்)

அன்பாலும் பண்பாலும் எமை
அரவணைத்த அன்புத் தந்தையே!
மீளாத்துயில் கொண்டு பத்து ஆண்டுகள்
கடந்தாலும் உங்கள் நினைவில் வாழும்.

54/3, புனித அன்னாள் கோயில்
முன் வீதி, பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம்.

**அன்பு மகள், மருமகன், பேரப்பிள்ளைகள் குடும்பம்**
(லண்டன்).

(100942)


මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

23.07.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2269

வெற்றி எழுத்து E
வெற்றி எண்கள் 0 6 0 3 5 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | E | 0 | 6 | 0 | 3 | 5 | 2 | ரூபா.14,428,587/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 0 | 6 | 0 | 3 | 5 | 2 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 6 | 0 | 3 | 5 | 2 | ரூபா. 100,000/= | பரிசுகள் 15 |
| 3 பரிசுகள் | | | | 0 | 3 | 5 | 2 | ரூபா. 10,000/= | பரிசுகள் 134 |
| 4 பரிசுகள் | | | | | 3 | 5 | 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1340 |
| 5 பரிசுகள் | | | | | | 5 | 2 | ரூபா. 100/= | பரிசுகள் 13478 |
| 6 பரிசுகள் | | | | | | | 2 | ரூபா. 20/= | பரிசுகள் 133623 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 0 | 6 | 0 | 3 | 5 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 14 |
| 8 பரிசுகள் | | 0 | 6 | 0 | 3 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 127 |
| 9 பரிசுகள் | | 0 | 6 | 0 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1332 |
| 10 பரிசுகள் | | 0 | 6 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13343 |
| 11 பரிசுகள் | E | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 53347 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 14,334,550.00

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை


## சமய சந்நிதிகளில்

வலி.வடக்கு, ஜூலை 26

தாவடி தெற்கு, கொக்குவில் ஸ்ரீ ஆதி காளி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறும் திருவிழாவில் அடுத்த மாதம் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (1-86)

* * *

சாவகச்சேரி, ஜூலை 26

சாவகச்சேரி வடக்கு பன்றிக்கேணி கந்தசாமி தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 12ஆம் திகதி ஆரம்பமானது.

உற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கும் நடைபெறவுள்ளன. (1-131)

## உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு முகாமைத்துவ செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் உத்தியோகத்தர்களுக்கான 'உள்ளூராட்சி மன்றங்களின் ஆதன முகாமைத்துவ சட்டங்கள்' தொடர்பான செயலமர்வு அடுத்தமாதம் ஏழாம் திகதி சனிக்கிழமை யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை உள்ளூர் ஆளுமை நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் உத்தியோகத்தர்களுக்கு இந்தச் செயமர்வு நடத்தப்படவுள்ளது.

ஒவ்வொரு மன்றத்திலிருந்தும் நகர முதல்வர் அல்லது தவிசாளர் உட்பட ஐந்து பேரின் பெயர் விவரங்களை எதிர்வரும் இரண்டாம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு நிறுவன ஆலோசகர் பிரகாசினி பிலபிட்டிய அறிவித்துள்ளார். (1-207)

## யாழ்.பல்கலைக்கழக அனைத்துப் பீடங்களின் அங்கத்தவர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம், நாளை செவ்வாய்க்கிழமை, சம்பள உயர்வுக்கான அடையாள வேலைநிறுத்தத்தை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த வேலைநிறுத்தத்தில் பங்கு கொள்வது குறித்து ஆராய்வதற்காக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு சிரேஷ்ட பொது அறையில் கூடவிருக்கிறது.

இந்த கலந்துரையாடலில் அனைத்துப் பீட அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு சங்கத் தலைவர் பேராசியர் செ. இளங்குமாரனும் செயலாளர் கலாநிதி செ. சிவசுப்பிரமணியமும் அழைப்பு விடுத்துள்ளனர். (ஒ-323)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 15 . 02 . 1948

மறைவு 12 . 06 . 2010



**திருமதி சீவரத்தினம் இராசபுத்திரி**

கடந்த 12.06.2010 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எம் குடும்பக் குலவிளக்கின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (26.07.2010) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கைதடி நாவற்குழி தெற்கு,
கைதடி.

என்றும் நினைவில்:
**குடும்பத்தினர்.**

(100882)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1210

சிங்கம் 18 35 37 39 23-07-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 7,306,825/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 223,668 | 20/- | 4,473,360/- |
| 2 இலக்கங்கள் | 20,538 | 40/- | 821,520/- |
| 1 இல. + லக்கினம் | 20,361 | 60/- | 1,221,660/- |
| 2 இல. + லக்கினம் | 1,855 | 200/- | 371,000/- |
| 3 இலக்கங்கள் | 542 | 1000/- | 542,000/- |
| 3 இல. + லக்கினம் | 52 | 10,000/- | 520,000/- |
| 4 இலக்கங்கள் | 1 | 200,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 7,306,825/- | 7,306,825/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 15,456,365/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 605 | | 601,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 267,623 | | 16,057,365/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

தனுசு 07 40 41 49

ஜக்பொட் பரிசு ரூபா400,000 வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 602 | 500/- | 301,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 400,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 605 | | 601,000/- |

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா.500,000/-


## நினைவலைகள்

**34ஆம் ஆண்டு**

மலர்வு 01.01. 1907



உதிர்வு 01.05. 1976

**10ஆம் ஆண்டு**

மலர்வு 02.02.1917



உதிர்வு 17.07.2000

**அமரர் முத்து கதிரித்தம்பி**

**திருமதி தங்கரத்தினம் கதிரித்தம்பி**

திதி: அபரபக்க பிரதமை

அன்புடனே அரவணைத்து
பார் போற்ற எமை வளர்த்த
ஐயா, அம்மா ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
நீண்ட உம் நினைவலையால்
பாரினிலே தவிக்கின்றோம்.
''உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்''

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

சித்தாப்பத்தனை,
வலிகாமம்.

(100816)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.02.1993

✱ விடுதலைப் புலிகள் பயன்படுத்துகின்ற கப்பல்களைத்தேடி இந்தியக் கடற்படை ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிப்பு.

✱ ஐ.நா. உணவு விவசாய ஸ்தாபனம் வடக்கு - கிழக்கு மக்களுக்கென வழங்கிய உணவுப் பொருள்களை இலங்கை அரசு சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மட்டுமே வழங்கி வருவதாகத் தெரிவிப்பு.

17.02.1993

✱ கண்டி நகரில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்திய பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் பல மாணவர்கள் பொலிஸாரினால் கடுமையாகத்தாக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.

✱ யாழ். குடாநாட்டின் மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தி விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிப்பதே பிரேமதாஸ அரசின் திட்டம் என விடுதலைப் புலிகள் தரப்பு குற்றச்சாட்டு.

18.02.1993

✱ பாக்குநீரிணையில் மேற்கொள்ளப்படும் இருதரப்பு கடற்படை நடவடிக்கைகள் உட்பட வேறும் பல விடயங்கள் குறித்து இலங்கை - இந்திய வெளியுறவுச் செயலர்கள் நேற்று புதுடில்லியில் சந்தித்துப் பேச்சு.

✱ மூன்று ஆண்டுகளுக்கு முன் நாட்டின் பாதுகாப்புச் செலவினத் தொகைக்குத் மூன்றுமடங்கான தொகையைத் தற்போது பாதுகாப்புச் செலவினமாகச் செலவிடவேண்டி நேர்ந்துள்ளதாகத் ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.

19.02.1993

✱ சுயாதீனப் பத்திரிகைகளுக்கு எதிராக அரசு மேற்கொண்டு வரும் அடக்குமுறைகள் குறித்து விசாரிக்க உள் நாட்டு வெளிநாட்டுப் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட இருப்பதாகத் தெரிவிப்பு.

✱ இலங்கைக் கடற்படைக்குக் கடும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையிலேயே விடுதலைப் புலிகளின் கடற் புலிப்போராளிகள் தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி உள்ளதாகத் 'ரொய்ட்டர்' செய்தி ஸ்தாபனம் தெரிவிப்பு.

20.02.1993

✱ இராணுவத்தினருக்கு கீழ்ப்படியும் நிலைக்கு இலங்கை அரசு தள்ளப்பட்டிருப்பதாகவும், போரை நிறுத்தும் முடிவை மேற்கொள்ளும் அதிகாரம் தற்போது படையினர் வசமே உள்ளதாகவும் பி.பி.ஸி வானொலி தனது ஆய்வுக் கண்ணோட்டத்தில் தெரிவிப்பு.

✱ இலங்கை அரச படைகளில் இருந்து ஓடியோரை கண்டுபிடிக்க இராணுவத்தினரும் பொலிஸாரும் கூட்டாக தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிப்பு.

21.02.1993

✱ யாழ். குடாக் கடல் நீரேரி ஊடாக படகுகளில் பயணிக்கும் தமிழ் பொது மக்களை இராணுவத்தினர் படு கொலை செய்துவருவதாக மனித உரிமைகள் இயக்கம் இலங்கை அரசை வற்புறுத்தி வருவதாகத் தெரிவிப்பு.

✱ ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணித் தலைவர்களான காமினி திஸநாயக்க மற்றும் லலித் அதுலத் முதலி ஆகியோரை ஏதாவது ஒரு வழக்கில் சம்பந்தப்படுத்தி அவர்களது பெயருக்கு களங்கம் விளைவிக்க பிரேமா அரசு முயற்சித்து வருவதாக விமர்சிப்பு.

22.02.1993

✱ யாழ்.குடா நீரேரி ஊடான போக்குவரத்துக் குறித்து அரசின் இராணுவ அதிகாரிகள் கூறுபவை முற்றிலும் பொய்யானதாகும் என யாழ்ப்பாணம் வந்து திரும்பிய பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் விமர்சிப்பு.

23.02.1993

✱ பொருளாதார மற்றும் போக்குவரத்துத் தடைகளை நீக்கக்கோரி யாழ். குடாநாட்டு மக்கள் யாழ். செயலகம் முன் மறியல் போராட்டங்களை நடத்தியதாகத் தெரிவிப்பு.

✱ நேற்று முன்தினம் கிளாலிக் கடற்பரப்பில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பெரும் மோதல் ஒன்று இடம்பெற்றதாகத் தெரிவிப்பு.

24.02.1993

✱ மும்முனைகளில் இருந்து முப்படைகளின் உதவியுடன் முன்னேற முயன்ற பாதுகாப்பு படையினருக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மாதகல் கடற்கரையில் இடம்பெற்ற மோதலின் முடிவில் இராணுவத்தினர் இழப்புக்களுடன் பின்வாங்கியதாகத் தெரிவிக்கின்றது.

✱ யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த தேவையான உறுதியும் வசதிகளும் விடுதலைப் புலிகளிடம் உள்ளன என்று இலங்கை பாதுகாப்பு பகுப்பாய்வாளர் ஹரிகுணதிலக தெரிவிப்பு.

25.02.1993

✱ பொலனறுவை மாவட்டத்தில் இராணுவத்தினரின் மினிமுகாம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 9 படையினர் பலியானதாகவும் மினி முகாம் புலிகளால் முற்றாகத் தகர்க்கப்பட்டதாகவும் தெரிவிப்பு.

✱ ஆள்கள் காணாமல் போகும் 40 நாடுகளில் இலங்கை முதல் இடம் வகிப்பதாக ஐ.நா மனிதஉரிமைகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையில் தெரிவிப்பு.

26.02.1993

✱ மன்னார் மாவட்டம், நானாட்டானில் படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இராணுவத்தினர் பலர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிப்பு.

✱ கிழக்கு மாகாணம் மகிழந்தனையில் முப்பது தமிழ்ப் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக 23 இராணுவத்தினர் மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருப்பதாக இலங்கை அரசு அறிவிப்பு.

27.02.1993

✱ கிளாலிக் கடற்பகுதியில் இலங்கை கடற்படையினரின் நவீன பீரங்கிப் படகு ஒன்று விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கிச் சிதறியதில் பல படையினர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

✱ யாழ். குடாநாட்டின் மீது பொருளாதாரத் தடையை விதித்து விட்டு, குடாநாட்டு மக்களுக்கு தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களில் மூன்றில் ஒரு பகுதியையே அரசு கப்பல் மூலம் அனுப்புவதாகத் தெரிவிப்பு.

28.02.1993

✱ இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் குழுவிடம் இருந்து பெறப்பட்ட உதவித் தொகையில் வடக்கு - கிழக்கில் சில அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள ஒதுக்கப்பட்ட பணம் செலவிடப்படாமல் தேங்கிக்கிடப்பதாகத் திறைசேரி வட்டாரங்கள் தெரிவிப்பு.

✱ 11 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ள ஈழப்போரில் விடுதலைப் புலிகள் வெற்றியீட்டும் சாத்தியம் அதிகமாக தென்படுவதாகத் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிப்பு.

✱ மாதிரி நீர்முழ்கிப் படகு ஒன்றை தயாரித்ததாகக் கூறப்படும் இலங்கைத் தமிழர் ஒருவரை தமிழக உளவுப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவிப்பு.

# ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை ஹம்பாந்தோட்டைக்கு வந்தே தீரும்

## சஜித் அடித்துக் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 26

''ஐக்கிய தேசியக். கட்சியின் தலைமைத்துவமும் இந்த நாட்டின் தலைமைத்துவமும் என்றாவது ஒரு நாளைக்கு ஹம்பாந்தோட்டைக்கு வந்தே தீரும்'' - என்று ஐ.தே.கவின் ஹம்பாந்தோட்டை மாவட்ட எம்.பி. சஜித் பிரேமதாஸ கடந்த வியாழக்கிழமை கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

எமது கட்சியின் மறுசீரமைப்பு வேலைத் திட்டங்கள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. கட்சியின் தலைமைத்துவத்தைப் பாதுகாப்பதற்காக மறுசீரமைப்பு வேலைகள் தாமதப்படுத்தப்படுகின்றன என்ற குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது.

மறுசீரமைப்பு தொடர்பான அநேகமான விடயங்களில் நாம் ஜனநாயக ரீதியாக ஒன்றிணைந்து இணக்கம் கண்டு வருகிறோம். இணக்கம் காணப்பட முடியாத விடயங்களை ஜனநாயக முறையில் தீர்க்க நடவடிக்கை எடுப்போம்.

அவ்வாறு இணக்கம் காணப்பட முடியாத விடயங்கள் தொடர்பில் உள்ளூராட்சி மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர்கள் ஆகியோரின் ஆலோசனைகள் உள்வாங்கப்பட வேண்டும் என்று நாம் கட்சியிடம் யோசனை முன்வைத்துள்ளோம்.

எமது கட்சி ஒழுக்கமுள்ள கட்சி. ஒழுக்கத்தின் அடிப்படையில் நின்று நாம் மறுசீரமைப்பு விடயத்தைத் கையாள்வோம்.

கட்சியின் தலைமைத்துவம் மாத்திரமின்றி நாட்டின் தலைமைத்துவமும் கூட என்றாவது ஒரு நாளைக்கு ஹம்பாந்தோட்டை மாவட்டத்துக்கே வரும். 1994ஆம் ஆண்டிலிருந்து நான் அதைக் கூறி வருகிறேன். - என்றார். (சி)

# உண்மையான அகதிகளை ஆஸி. ஏற்கவேண்டும்

## ஐ.நா. பிரதிநிதி கோரிக்கை

கொழும்பு, ஜூலை 26

உண்மையான அகதிகள் என ஐ.நா. உறுதிப்படுத்தியவர்களை அவுஸ்திரேலியா ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஐ.நா.அகதிகள் பேரவையின் பிராந்திய பிரதிநிதி ரிச்சர்ட்டவல் கோரிக்கை விடுத்துள்ளார்.

உண்மையான அகதிகள் என ஐக்கிய நாடுகள் சபை உறுதிப்படுத்திய பின்னரும், அவுஸ்திரேலியா அவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்காதது ஏன் எனவும் அவர் கேள்வி எழுப்பி உள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தானிய அகதிகளுக்கான பாதுகாப்பு விசா வழங்கும் நடவடிக்கைகளை அவுஸ்திரேலியா வெகுவாகக் குறைத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையினரால் அங்கீகரிக்கப்பட்ட அகதிகள் அவுஸ்திரேலிய அகதிகள் சபையால் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள் என்றும் இருந்தும் அவர்களுக்கான பாதுகாப்பு விசாக்களை வழங்குவதில் ஆஸ்திரேலியா பின்நிற்பது ஏன் என்றும் ரிச்சர்ட் டவல் கேள்வி எழுப்பி உள்ளார். (சி)

# விமான விபத்துக்கான காரணத்தைக் கண்டறியும் கறுப்புப் பெட்டியை வடிவமைத்தவர் மரணம்



கொழும்பு, ஜூலை 26

விமானத்தில் பயன்படுத்தப்படும் கறுப்புப்பெட்டியைக் கண்டுபிடித்த அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த டேவிட் வாரன் (வயது 85) காலமானார்.

1934 ஆம் ஆண்டில் நடந்த விமான விபத்து ஒன்றில் வாரனின் தந்தை உயிரிழந்தார். இதை அடுத்து விமான விபத்துக்களுக்கான காரணத்தை அறிந்து கொள்வதன் அவசியத்தை உணர்ந்த வாரன் அதற்கான கருவியை வடிவமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் கண்டார்.

அவர் கண்டுபிடித்த கறுப்புப் பெட்டி 1953 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டுக்கு வந்தது. விமானிகளுக்கும் தரைக்கட்டுப்பாட்டு மையத்துக்கும் இடையே நடக்கும் உரையாடல்கள் விமானம் இயங்கும் முறை உள்ளிட்டத் தகவல்களை கறுப்புப் பெட்டி பதிவு செய்யும்.

விமானம் எந்த விதமான விபத்தில் சிக்கினாலும் கறுப்புப் பெட்டிக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இது வடிவமைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் விமானம் விபத்துக்குள்ளான காரணத்தை தெளிவாக அறிந்து கொள்ள முடியும். (6)

# டெங்குநோய்த் தாக்கத்தில் முதலிடம் கொழும்பு மாவட்டத்துக்கு

## மூன்றாவது இடத்தில் யாழ்ப்பாணம்

கொழும்பு, ஜூலை 26

பாரதூரமான உயிர்க் கொல்லி நோயாகப் பரவிச் செல்லும் டெங்குக் காய்ச்சலின் தாக்கத்துக்கு உள்ளாகி இதுவரையில் உயிரிழந்துள்ளோரின் எண்ணிக்கை கொழும்பு மாவட்டத்திலேயே அதிகம் எனத் தெரிய வந்துள்ளது.

அதேசமயம் அதிக டெங்கு நோயாளர்களைக் கொண்டுள்ளதும் கூட கொழும்பு மாவட்டமேயாகும்.

சுகாதார அமைச்சின் உயிர்கொல்லி நோய்கள் தொடர்பான ஆய்வுப் பிரிவின் புள்ளி விவரங்களுக்கு அமைய, இந்த ஆண்டின் ஜனவரி மாத்திலிருந்து ஜூலை 21 ஆம் திகதி வரையிலும் டெங்குத் தாக்கத்தின் காரணமாக கொழும்பு மாவட்டத்தில் 44 பேர் மரணமடைந்துள்ளனர், 3,414 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் 2,563 பேர் டெங்கு நோயாளர்கள் என அடையாளப் படுத்தப்பட்டுள்ளதுடன் டெங்கினால் 20 பேர் மரணமடைந்துள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோயினால் 16 பேர் மரணம் அடைந்துள்ளதுடன் 2,434 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்து நாடு முழுவதிலுமாக 158 டெங்கு மரணங்கள் நிகழ்ந்துள்ளதோடு, இனங்காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 21,677 ஆகும்.

டெங்கு நோயை ஒழிப்பது தொடர்பாக உதாசீனம் காட்டப்படும் நிலைப்பாடொன்றே நாட்டில் தென்படுவதால் தினமும் 200 பேர் வரையிலான டெங்கு நோயாளர்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையிலும், 40 நோயாளர்கள் வரையில் களுபோவில மருத்துவ மனையிலும் அனுமதிக்கப்படுவதாக மேற்படி மருத்துவ மனைகளின் பணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆகப்பிந்திக் கிடைத்த புள்ளி விவரங்களுக்கு அமைய இலங்கையில் 17 மாவட்டங்களில் அதிகரித்த அளவில் டெங்கு நோய் பரவிச் செல்வதாகத் தெரிய வந்துள் ளது.

இவ்விதம் நாளுக்கு நாள் டெங்கு மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றாலும் கூட நாட்டில் செயற்படும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் எந்த விதத்திலும் போதுமானவையல்ல என்பதே மக்கள் முன்வைத்துவரும் குற்றச்சாட்டாகும். (1-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெற்றோ பொலிற்றன் கொம்பியூட்டர்ஸ் நிறுவனத்தின் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
ஐ.எல்.ஈ.நிறுவன ஆலோசகர் தே.மனோகரன் மங்களவிளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா நாடாவெட்டித் திறந்து வைப்பதையும், நிறுவன ஊழியர்களையும் இறுதி இரண்டு படங்களிலும் காணலாம். *(படங்கள்: ரட்ணம், டிலீப், சபேசன்)*

## மருந்துகள் தொடர்பான தேசியக் கொள்கை; மனுவை விசாரிக்க உயர்நீதிமன்றம் திகதி நியமனம்

கொழும்பு, ஜூலை 26

தேசிய மருந்துகள் கொள்கை தொடர்பாகத் தயாரிக்கப்பட்டு நிலுவையிலுள்ள சட்டமூலத்தினை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்படியாக சுகாதார அமைச்சரை பணிக்க வேண்டும் என்ற மனுவை நவம்பர் 3ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர்நீதிமன்றம் சம்மதித்துள்ளது.

பொதுமக்களுக்குத் தரமான மருந்துகளை அவர்களால் கொள்முதல் செய்யக் கூடிய விலைகளில் வழங்குவதற்கான தேசிய கொள்கையொன்று வகுக்கப்பட வேண்டும் என்று இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

நீதியரசர்கள் ஷிராணி திலக்கவர்தன, எஸ்.ஐ.இமாம் மற்றும் சுரேஷ்சந்திர ஆகியவர்களின் முன்னிலையில் இவ்விடயம் விசாரணைக்கு வந்தது.

நோயாளர்களின் உரிமைகளுக்கான மக்கள் அமைப்பின் தலைவர் லூயிஸ் பெனடிக்ட், இணைச் செயலாளர்கள் எம்.கே.பி.சந்திரலால் மற்றும் கே.வி. காந்தவேல் என்பவர்களால் ஒரு மனுவும் லோகான் பிபிலே என்பவரால் இன்னொரு மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவர் தேசிய மருந்துகள் கொள்கையை உருவாக்கப் பாடுபட்டவரான பேராசிரியர் சேனக்க பிபிலேயின் பேரன் முறையான வராவார்.

பேராசிரியரின் கொள்கையானது உலக சுகாதார ஸ்தாபனத்தால் பாராட்டப்பட்டுள்ளதுடன் சுமார் 100 நாடுகளில் அமுல் படுத்தப்படுகின்றது. ஆனால் பிபிலேயின் சொந்தநாட்டில் மட்டும் அமுல்படுத்தப்படவில்லையென்பதை மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர். (ப)

**தவறிவிட்டது**

இல.53, U.C. வீடு பேஸ்லீன் வீதி, பருத்தி என்னும் முகவரியை யாழிந்த வேல் விஷ்ணு என்பவரின் தேசிய அ. அட்டை (907322831V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே: 021 3737 689, 0785008441, 0322266948

**Deutsch வகுப்புகள்**

German, Swiss மொழி வகுப்புகள் தமிழ் மொழிபெயர்ப்புடன் நடைபெறுகின்றன. (Germany இல் இருந்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது.)
தொடர்பு: 10, Palaly Road, Jaffna. 0771604823

## டிஜிற்றல் ஆர்ட் வேக் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ். மாவட்ட செயலகத்தால் ''டிஜிற்றல் ஆர்ட் வேக்'' தொழில்திறன் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பயிற்சி நெறியானது 3 மாதங்கள் நடைபெறும் .

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் க.பொ.த. உயர்தரம் அல்லது க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி அடைந்திருக்க வேண்டும் எனவும்-

கணனி தொடர்பான அடிப்படை அறிவு உள்ளவர்களாகவும் -

18-25 வயதிற்கு இடைப்பட்டவராகவும் - இருத்தல் வேண்டும்.

உள்நாட்டில் இடம்பெற்ற போர் அனர்த்தத்தின்போது பாதிக்கப்பட்டவராகவும், கலைத்துறை சார்ந்த பாடநெறிகள் அல்லது துறைசார்ந்த பயிற்சிகளில் சித்தி அல்லது அனுபவம் பெற்றிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் '' மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்'' மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகின்றனர். (1-310-311-312)

# கண்ணீர் அஞ்சலி



ஸரிக்கனேஸ் பல், மூக்குக் கண்ணாடியக உரிமையாளர்

## அமரர் வல்லிபுரம் கணேசலிங்கம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் மறைவுக்காக எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

கைதடி மேற்கு,
கைதடி.

சிறி (பாபு) குடும்பத்தினர்.
(நோர்வே)

(100887)

## பழைய இரும்புக் குவிப்பால் போக்குவரத்துப் பாதிப்பு

கொழும்புத்துறை, ஜூலை 26

யாழ்.ஐந்து சந்திப்பகுதியிலும், மானிப்பாய் வீதியில் இருமருங்கிலும் பழைய இரும்புகள் குவித்து வைத்திருப்பதால் அவ்வீதிகளூடானன போக்குவரத்துக்குப் பெரும் இடையூறு காணப்படுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்புக்குக் கொண்டுசெல்ல கொள்வனவு செய்த இந்தப் பழைய இரும்புக் கழிவுகள் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கழிவுகள் இப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்கள், அலுவலக ஊழியர்கள் கூடுதலாகப் பயணிக்கும் காலை மாலை வேளைகளில் விபத்துக்கள் ஏற்படும் சாத்தியம் காணப்படுவதாகப் பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். (1-135)

## ஊர்காவற்றுறை பிரதேசத்தில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26

ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வுள்ளன.

இந்த அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை முதலாவது வீதி, மதகுடன் புனரமைக்கப்பட்டுள்ளது.

அதனை விட அனலைதீவு உப- அலுவலக பொதுநூலகக் கட்டடம் அனலைதீவு அருணோதயா சனசமூக நிலையக் கட்டடம் போன்றவை புனரமைப்புச் செய்யவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்குக் கட்டட ஒப்பந்தக் காரர்களிடம் இருந்தும் கேள்விகள் கோரப்பட்டுள்ளன. (1-224)

## வலி.மேற்கில் நுண்கலைப் பயிற்சி

மூளாய், ஜூலை 26

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவை நுண்கலைப் பயிற்சி வகுப்புக்களை இலவசமாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்களுக்காக ஆர்வம் உள்ளவர்களிடமிருந்து இக்கலாசாரப் பேரவையால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வயலின், மிருதங்கம், வாய்பாட்டு, நடனம் போன்ற பல பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன. இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவை தற்போது மேற்கொண்டு வருகின்றது.

இப்பயிற்சிக்கான அனைத்து விண்ணப்பங்களும் கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (1-99)

## சுழிபுரம் விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள்

மூளாய் ,ஜூலை 26

சுழிபுரம் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

வறுமை நிலையில் உள்ள விவசாயிகளுக்கே மேற்படி உதவி வழங்கப்பட்டுள்ளது. சர்வோதயம் நிறுவனத்தின் நிதி உதவியுடன் சுழிபுரம் மத்தி, சுழிபுரம் கிழக்கு, ஆகிய கிராமங்களிலேயே மேற்படி உதவித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (1-99)

## இறங்கு துறைகளில் மலசலகூடம் அமைப்பு

யாழ்ப்பாணம் ,ஜூலை 26

அனலைதீவு மற்றும் எழுவை தீவு இறங்கு துறைகளில் பயணிகளின் வசதி கருதி பொது மலசலகூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை இதற்கான துரித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இந்த மலசல கூடங்களை நிர்மாணம் செய்வதற்கு நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதோடு கட்டட ஒப்பந்தக்காரரிடம் இருந்தும் கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி துறைகளில் மலசலகூட வசதியின்மையால் பயணிகள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர். (1-224)

# மரண அறிவித்தல்

## திருமதி சூரியகுமாரி குலேந்திரம்

(முன்னைநாள் பாலர் பாடசாலை ஆசிரியை, முன்னாள் தலைவர், ஞானசம்பந்தர் கலைமன்றம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை)

புலோலி கிழக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சூரியகுமாரி குலேந்திரம் நேற்று முன்தினம் (24.07.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - அம்புசரத்தினம் தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பாக்கியம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் குலேந்திரத்தின் அன்பு மனைவியும், ஸ்கந்தபாபு (முகாமையாளர், H.N.B., சுன்னாகம்), ஸ்கந்த வேணு (Second officer, Ship, டுபாய்), ஸ்கந்தவாணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், வாசுகி (ஆசிரியை, நெல்லியடி ம.ம.வித்தியாலயம்), குமுதினி, ஸ்ரீதர் (கணக்காளர், SEED நிறுவனம், வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியும், ஜெயகுமாரியின் சகோதரியும், ரமணிதன், கார்த்தீபன், வைஷினிகா, ஐஸ்வர்யன், ஹரினி, பாவனி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2010) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் பருத்தித்துறை கடற்கரை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைமன்றம் வீதி, புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புளியம்பொக்கணையில் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு; அந்தப் பிரதேச மக்கள் பெரும் அச்ச நிலையில்!

## கட்டளைத் தளபதியிடம் சிறிதரன் எம்.பி. எடுத்துரைப்பு



கிளிநொச்சி,ஜூலை 26

புளியம்பொக்கணை, கலவெட்டித்திடல், நாகேந்திரபுரம் ஆகிய பகுதிகளில் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படுகிறது. இதன் காரணமாக அந்தப் பிரதேச மக்கள் இராணுவ அச்சுறுத்தலால் அச்சமடைந்த நிலையில் உள்ளனர். இதற்கு உடனடித் தீர்வுகாண வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் மேற்கண்டவாறு கோரிக்கை முன்வைத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் இராஜகுருவுடன் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற சந்திப்பிலேயே இக்கோரிக்கையை அவர் முன்வைத்தார்.

* சாந்தபுரம் பிரதேச மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்காததால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை மீளக் குடியமர அனுமதிக்க வேண்டும்.
* செட்டிகுளம் நலன்புரி நிலையத்தில் இருந்து அழைத்துவரப்பட்ட மயில்வாகனபுரம், குமாரசாமிபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எந்தவித அடிப்படை வசதிகளும் இன்றி 12 ஆம் கட்டை, பிரமந்தனாறுப் பகுதிகளில் தரப்பாள்களின் கீழ் வாழ்கின்றனர். அவர்களை சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டும்.
* வன்னேரிக்குளம், கண்ணகைபுரம் பகுதிகளில் இருந்து இராணுவத் தேவைக்காக குடிதண்ணீர் எடுத்துச் செல்லப்படுவதால், அப்பகுதி மக்கள் தமது வயல்களுக்கு பகலில் நீர்ப்பாய்ச்ச முடியாத நிலை காணப்படுகின்றது. இதற்கு தீர்வு காணவேண்டும்.
* கிளிநொச்சி மாவட்டமக்களின் காணிப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். மக்களின் போக்குவரத்துக்கு சைக்கிள்கள் வழங்கவேண்டும்.
* மக்களால் கைவிடப்பட்ட சொத்துக்களை மீளப் பெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் முன்வைத்த கோரிக்கைகளுக்கு உடனடித் தீர்வைக் காண நடவடிக்கை எடுப்பதாகக் கட்டளைத் தளபதி உறுதி அளித்தார்.

இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் பொன் காந்தன், ஆசிரியர் சச்சிதானந்தன், 57 ஆவது படையணித் தளபதி கேணல் ஜினேந்திரா ஆகியோரும் கலந்து கொண்டனர். (1)

# நூலகத்தை இயக்குமாறு மக்கள் கோரிக்கை

கண்டாவளை,ஜூலை 26

கிளிநொச்சி இராமநாதபுரத்தில் பொது நூலகத்திற்கு என அமைக்கப்பட்ட முற்றுப் பெறாத கட்டடத்தை அபகரிக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளனர். அதை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் பகுதியில் 2003, 2004 காலப்பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒதுக்கப்பட்ட நிதிகளிலிருந்து பொது நூலகம் ஒன்று அமைக்கப்பட்டு வந்தது.

அந்நூலகம் முற்றுப் பெறாத நிலையில் காணப்படுவதால் மீள் குடியேற்ற நடவடிக்கையில் தனியார் ஒருவர் அக் கட்டடத்தை சுற்றி வேலி அமைத்து பின்னால் உள்ள வெற்றுக் காணியையும் உழுது பண்படுத்தி சொந்தமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இராமநாதபுரம் பொது நூலகத்திற்கு என ஒதுக்கப்பட்ட காணியையும் கட்டடத்தையும் மீட்டு விரைவில் நூலகத்தினை இயக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (1-432)

# பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் இலங்கை வங்கி கிளைகளைத் திறக்க வேண்டும்

## வன்னி வாடிக்கையாளர் வேண்டுகோள்

கண்டாவளை,ஜூலை 26

கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கை வங்கியின் புதிய கிளைகளை பிரதேச செயலர் பிரிவு ரீதியாக அமைக்குக என அதன் வாடிக்கையாளர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் ஒரே ஒரு கிளை மூலம் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வாடிக்கையாளர்கள் அனைவரது தேவைகளையும் வங்கி நிறைவேற்றி வருகின்றது.

தற்போது மீள் குடியேற்றக் கொடுப்பனவு முதல் அரசாங்க கணக்குகள் யாவும் இலங்கை வங்கியின் மூலமே மேற்கொள்ளப்பட்டு வருவதால் தினசரி கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளை முன்பாக தேர்த் திருவிழா போல் சனக் கூட்டம் அலை மோதுவதைக் காணமுடிகின்றது.

காலையில் வரும் வாடிக்கையாளர் ஒருவர் தமது தேவையை நிறைவு செய்ய மணிக்கணக்கில் தவமிருக்கும் துர்ப்பாக்கிய நிலையே காணப்படுகிறது.

ஏனைய பிரதேச பிரிவுகளான கண்டாவளை, பளை, பூநகரி போன்ற பிரிவுகளிலும் தலா ஒவ்வொரு புதிய வங்கிக் கிளை அமைப்பதன் மூலம் இவ்வாறான நெருக்கடிகளை குறைக்க முடியும் என வாடிக்கையாளர் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து இலங்கை வங்கி வாடிக்கையாளர்களின் சிரமத்தை குறைப்பார்கள் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். (1- 432)

# குடமுறுட்டிப் பாலப் புனரமைப்புப் பணியை மீள ஆரம்பிக்குமாறு மக்கள் கோரிக்கை

பூநகரி,ஜூலை26

பூநகரி - பரந்தன் வீதியில் அமைந்துள்ள குடமுறுட்டி ஆற்றின் பால புனரமைப்புப் பணிகள் கடந்த 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு போர்ச்சூழல் காரணமாக அதன் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் உள்ளன.

வருகின்ற பருவகாலத்தில் பயணிகள் சிரமமின்றிய பயணத்தை மேற்கொள்வதற்கு இப் பாலம் புனரமைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே இப் பாலப் பணிகளை பருவகாலத்துக்கு முன்னர் பூர்த்தி செய்யுமாறு அப்பிரதேச மக்கள் வேண்டி நிற்கின்றனர். (1-420)

# மண்ணித்தலை - மணியம் தோட்டம் படகுச் சேவை; விஸ்தரிக்குமாறு பூநகரி மக்கள் கோருகின்றனர்

பூநகரி,ஜூலை26

மண்ணித்தலை - மணியந்தோட்டம் இடையே பொதுமக்களின் நன்மை கருதி படகுச் சேவையானது தினமும் மூன்று வேளைகளில் இடம் பெறுகின்றது.

எனினும் மண்ணித்தலை, பூநகரியிலிருந்து முதலாவது படகுச் சேவை காலை 8 மணியளவில் ஆரம்பிக்கின்றது.

இதனால் உயர்கல்வி மாணவர்கள், பொதுமக்கள் போன்றோர் காலதாமதமாக யாழ்ப்பாணம் செல்வதால் தமது செயற்பாடுகளில் பூரண நன்மையை அடைய முடியவில்லை.

அதனால் தமது கல்விச் செயற்பாட்டைக் கருத்திற் கொண்டு காலை 6.30 மணியளவில் மண்ணித்தலையிலிருந்து மணியந் தோட்டத்துக்கும் மாலை 5 மணியளவில் மணியந்தோட்டத்திலிருந்து மண்ணித்தலைக்கும் படகுச் சேவை ஒழுங்கை சில தினங்களில் ஏற்படுத்தித் தருமாறு பிரயாணிகள் படகுசேவைகள் ஒழுங்கமைப்பாளர் குழுவைக் கோருகின்றனர். (1-420)




# சட்ட விரோத மணல் அகழ்வு; பன்னங்கண்டிப்பாலம் இடியும் நிலையில்

கண்டாவளை,ஜூலை 26

கிளிநொச்சி வட்டக்கச்சி வீதியில் பன்னங்கண்டி பாலத்திற்கு அருகில் பெருமளவில் மணல் அள்ளப்படுவதால் பன்னங்கண்டிப் பாலம் விரைவில் இடிந்து விழும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் மீள் குடியேற்ற நடவடிக்கைகளைத் தொடர்ந்து கட்டடங்கள் அமைப்போரின் தொகையும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக வட்டக்கச்சி வீதியில் உள்ள பன்னங்கண்டிப் பாலத்திற்கு அருகாமையாக் பெருமளவான உழவு இயந்திரங்களில் தினமும் மணல் அள்ளப்பட்டு வருகின்றது.

பன்னங்கண்டிப் பாலத்திற்கு அருகாக பெருமளவில் மணல் அள்ளப்படுவதால் அப்பாலம் விரைவில் இடிந்து விழும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளையும் கிளிநொச்சியையும் இணைக்கும் பிரதான பாலம் பன்னங்கண்டிப் பாலம் என்பது குறிப்பிடத்தக்கது. (1-432)

# பளைக் கல்விக் கோட்டத்தில் ஆறு பாடசாலைகள் இயங்க ஆரம்பம்

கண்டாவளை,ஜூலை 26

பளைப் பிரதேசத்தில் ஆறு பாடசாலைகள் மீளவும் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளன.

கிளிநொச்சி பளைக் கல்விக் கோட்டத்தில் உள்ள 13 பாடசாலைகளில் ஆறு பாடசாலைகள் மட்டுமே சொந்த இடத்தில் இயங்கி வருகின்றன.

பளை மத்திய கல்லூரி, பளை றோ.க.த.பா, மாசார் அ.த.க.பா, சோரன்பற்று கணேசா வித்தியாலயம், சோரன்பற்று சி.சி.த.க.பா, தர்மக்கேணி அ.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளே தமது சொந்த இடத்தில் இயங்கும் பாடசாலைகளாகும்.

கிளாலி றோ.க.த.க.பா, அல்லிப்பளை அ.த.க.பா, முகமாலை றோ.க.த.க, கிளி/ வேம்படுகேணி அ.த.க.பா, இயக்கச்சி அ.த.க.பா, கிளி/ கோவில்வயல் சி.சி.த.க.பா, முகாவில் அ.த.க.பா ஆகிய பாடசாலைகளே இன்னமும் சொந்த இடங்களில் இயங்க முடியாத நிலையில் உள்ளன. (1-432)

# ஆலடிக் கிராமப் பொதுக் கிணறுகளை சுத்திகரித்துத் தருமாறு மக்கள் கோரிக்கை

## குடிதண்ணீருக்கு பலமைல் தூரம் செல்லும் அவலம்

கண்டாவளை,ஜூலை26

கிளிநொச்சி இராமநாதபுரம் ஆலடிக் கிராமத்தில் பொதுக் கிணறுகள் சுத்திகரிக்கப்படாமையால் மக்கள் குடிதண்ணீருக்காக பல மைல் தூரம் செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி இராமநாதபுரம் ஆலடிக் கிராமத்தில் உள்ள கிணறுகள் மிகவும் ஆழமானவை. இங்குள்ள கிணறுகள் பெரும்பாலும் கட்டுக்கிணறுகள்அல்ல. இப்பகுதியில் இரண்டு பொதுக் கிணறுகள் உண்டு. மக்கள் அக்கிணறுகளிலேயே குடிதண்ணீர் தேவையை பூர்த்தி செய்து வந்தனர்.

இப்பகுதியில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு இரு மாதங்கள் கழிந்தும் இது வரை இப் பொதுக்கிணறுகளை யாரும் சுத்தம் செய்து தரவில்லை என மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இப்பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட கிணறு என்று எவையும் இல்லை. எனவே இங்குள்ள இரண்டு பொதுக் கிணறுகளையும் சுத்தம் செய்து தமது சுத்தமான குடி தண்ணீர்த் தேவையை பூர்த்தி செய்து தருமாறு உரிய அதி காரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளனர். (1-432)



உள்ளூராட்சி வாரம் 2010 ஐ யொட்டி கிளிநொச்சி திருநகர் மயானத்தில் கரைச்சிப் பிரதேசசபைச் செயலர் குலேந்திரன் தலைமையில் நடைபெற்ற சிரமதானப் பணியில் கலந்துகொண்டோரையும் சிரமதானப் பணியில் அவர்கள் ஈடுபடுவதைப் படங்களில் காணலாம். (432)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லாசிரியர்களை உருவாக்கும் தார்மீகப் பணியில் யாழ்.கல்வியியற் கல்லூரி மிளிர்ந்து கொண்டிருக்கிறது

## 10ஆம் ஆண்டு விழாவில் ஆறு.திருமுருகன் உரை

கடந்த 10 ஆண்டுகளாக சமூகத்தின் வளர்ச்சிக்காக நல்லாசிரியர்களை உருவாக்கிய பெருமைக்குரிய தார்மீகப் பணியாற்றிய கல்விச்சாலையாக கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி மிளிர்ந்து கொண்டிருக்கிறது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் இவ்வாறு தெரிவித்தார். கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் 10ஆம் ஆண்டு நிறைவு விழா கடந்த வியாழக்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு வாழ்த்துரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த பத்து ஆண்டுகளாக நல்லாசிரியர்களை உருவாக்குகின்ற ஒரு தார்மீக பணியினை இந்தக் கல்வியியற் கல்லூரி செய்து வருகின்றது. இந்தக் கல்லூரியினை அமைப்பதற்கு பெரியளவிலான கணனியினை அன்பளிப்புச் செய்த நல் உள்ளங்களை நன்றியுடன் நினைவுகூருகின்றேன்.

அத்துடன் இந்தக் கல்லூரியினை அமைப்பதற்கு முழுவீச்சாகச் செயற்பட்ட முன்னாள் பீடாதிபதி கமலநாதனும் அவர் விட்டுச் சென்ற பணிகளை இன்றும் அதே நோக்குடன் முன்னெடுத்து வருகின்ற பீடாதிபதி யோகநாதனும் நன்றியுடனும், பாராட்டுடனும் நினைவு கூர வேண்டியவர்கள்.

இன்றைய சூழலில் படித்தவர்களிடம் அதற்குரிய பண்புகள் காணப்படுவதில்லை. அத்துடன் பொறாமை மனம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

இந்த நிலை மாறவேண்டும். நல்லதொரு அறப்பண்புகள் கொண்ட சமூகம் உருவாக வேண்டும். அதன் ஊடாகவே ஆரோக்கியமானதொரு சமுதாயத்தை எம்மால் கட்டியெழுப்ப முடியும் - என்றார்.

இந்நிகழ்வில் வவுனியா கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி பேனார்ட், வண. பிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் ந.சண்முகலிங்கன், மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோரும் உரையாற்றினார்கள். (1-9)

# உள்ளூராட்சி வார கலைப் போட்டிகள்

கொழும்புத்துறை,ஜூலை26

உள்ளூராட்சி வாரத்தையொட்டி கொழும்புத்துறை றொசாறியன் சனசமூக நிலையம் கலைப்போட்டிகள், சிரமதான நிகழ்வுகளை நடத்தவுள்ளது.

தனிநடனம், தனிப்பாடல் போட்டிகள் 10 வயது முதல் 30 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமிடையில் நடைபெறவுள்ளதாக நிலைய கலைப்பிரிவு பொறுப்பாளர் எஸ். யேசுதாஸ் தெரிவித்துள்ளார்.

சுயவிண்ணப்பங்களை 'தலைவர் றொசாறியன் ச.ச.நிலையம் கொழும்புத்துறை' என்னும் முகவரிக்கு எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-135)

# ஈழத் தமிழரின்.....

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்டன.

அப்பொழுது இந்திய அரசின் செல்லப் பிள்ளைகளாக இருந்த ரெலோ அமைப்பினரும், சிதறிப் போகும் ஆரம்ப கட்டத்தில் இருந்த புளொட் அமைப்பினரும், மற்றைய சில உதிரி ஈழ இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் தமிழ் நாட்டில் பல்வேறு கொள்ளை நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்தார்கள். முற்றுமுழுதாக இந்தியாவின் உதவிகளையும், ஆலோசனைகளையும் மட்டுமே நம்பிப் போராட்டம் நடத்திவந்த இயக்கங்கள், கொள்ளைகளையும், சமுகவிரோத நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் நிலைக்கு திட்டமிட்டுக் கொண்டுசெல்லப்பட்டன. இந்த இயக்கங்களின் தலைமைகளின் திறமையின்மை மற்றும் கட்டுப்பாடு இன்மை என்பன ஒருபுறம் இருக்க, கொள்ளை, களவு என்பனவற்றில் இவ் அமைப்புக்களின் உறுப்பினர்கள் ஈடுபடும் வகையில் நிலைமையில் மாற்றங்கள் ஏற்பட்டன; ஏற்படுத்தப்பட்டன.

வீடுகளில் கொள்ளை, வங்கிக் கொள்ளை, ஆள்கடத்தல், கொலை என்று தமிழ் நாட்டில் இந்த இயக்க உறுப்பினர்களின் சமூக விரோத நடவடிக்கைகள் 1986ஆம், 87ஆம் வருடங்களில் உச்சத்தை அடைந்தன.

அதேவேளை இயக்க உறுப்பினர்கள் ஈடுபட்ட இதுபோன்ற செயல்களைக் கட்டுப்படுத்த இந்திய அரசு மேற்கொண்டிருந்த நடவடிக்கைகளும் வேடிக்கையாகவே இருந்தன. தமிழ் நாட்டில் இதுபோன்ற சமுகவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுத் திரிந்த போரளிகளை தமிழ் நாட்டுப் பொலிஸார் கைதுசெய்யும் சந்தர்ப்பங்களில், 'றோ' அதில் தலையிட்டு அவர்களை விடுதலைசெய்து தமிழ் நாட்டு மக்களின் கோபத்தை கனகச்சிதமாக போராளிகளின் பக்கம் திருப்பிவிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

'அண்ணா நகரில் கொள்ளை. ஈழப்போராளி கைது' என்று கொட்டை எழுத்துக்களில் முதல் நாள் பத்திரிகைகளில் செய்தி வரும். மறுநாளே 'பொலிஸார் கைதுசெய்த போராளி விடுதலை' என்றோ அல்லது 'போராளி தப்பி ஓட்டம்' என்றோ செய்தி வெளியாகும்.

'ஈழப்போராளிகளுக்கு உதவுகின்றோம்' என்று கூறிக்கொண்டு செயற்பட்ட மத்திய உளவு அமைப்பான 'றோ', உண்மையிலேயே தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் ஈழப் போராளிகளுக்கு இருந்த ஆதரவை சிதைப்பதிலேயே கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டது. அதில் படிப்படியாக வெற்றியும் கண்டது.

அக்காலத்தில் எந்த ஓர் ஈழப் போராளியையும் 'விடுதலைப் புலி' என்றே தமிழ் நாட்டு மக்கள் அழைத்து வந்தார்கள். 'புளொட்' என்றும், 'டெலோ' என்றும் வேறுபடுத்திப் பார்க்க தமிழ் நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. இலங்கையில் எந்த இயக்கப் போராளி கொல்லப்பட்டாலும் 'கொட்டியா' என்று சிங்கள இராணுவத்தினர் அழைத்தது போன்று தமிழ் நாட்டில் அனைத்து இயக்கங்களையும் 'விடுதலைப் புலிங்க' என்றுதான் அழைப்பார்கள். புலிகளின் செயற்பாடுகள், அவர்களது நடவடிக்கைகள், அவர்கள் மேற்கொண்ட பிரசாரங்கள், புலிகள் தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் நடந்துகொண்ட விதம் போன்றன புலிகள் பற்றிய பிரமிப்பை தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தியிருந்தது.

ஆனால் தமிழ் நாட்டில் புலிகள் பெற்றிருந்த பிரபலமே புலிகளின் பெயரைச் சிதைப்பதற்கும் சதிவேலைகளில் ஈடுபட்டவர்கள் காரியம் சாதிப்பதற்கும் ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துவிட்டது. மற்றைய இயக்க உறுப்பினர்களால் பல சந்தர்பங்களில் தமிழ் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சமுகவிரோதச் செயல்கள் அனைத்தும் புலிகளாலேயே மேற்கொள்ளப்பட்டன என்று தமிழ் நாட்டில் உள்ள ஒரு தொகுதி மக்கள் நினைத்துவிடும் அபாயம் இதனால் ஏற்படலாயிற்று. களவுகள், கொள்ளைகளில் ஈடுபட்ட 'புளொட்' இயக்க உறுப்பினர்கள் தங்களை புலிகள் என்று கூறி கொள்ளையடித்த சந்தர்ப்பங்கள் பலவும் உள்ளன.

அக்காலத்தில் SOLT (Students Organisation of Liberation Tigers) என்ற பெயரில் விடுதலைப் புலிகள் சென்னை அடையார் உட்பட பல இடங்களில் அலுவலகம் திறந்து, தமது இயக்க நடவடிக்கைகள் பற்றிய பிரசாரங்களை மேற்கொண்டி ருந்தார்கள். அதேபோன்று தமிழ் நாட்டில் தங்கியிருந்து கல்வி கற்றுக் கொண்டிருந்த ஈழத் தமிழ் மாணவர்களது நடவடிக்கைகளி னாலும், அகதிகளாக தமிழ் நாடு வந்து தங்கியிருந்த இளைஞர்களின் தீய செயல்களினாலும் ஈழத்தமிழர்கள் பற்றி தமிழ் நாட்டு மக்களுக்கு இருந்த அபிப்பிராயம் கெட்டுவிடக் கூடாது என்ற எண்ணத்தில் பல செயற்திட்டங்களை இந்த உறுப்பினர்கள் மேற்கொண்டிருந்தார்கள். ஈழத் தமிழர்கள் எங்காவது பிரச்சினைப்படுத்தினால் தமிழ் நாட்டிலுள்ள பொதுமக்கள் அவர்களைப் பிடித்து புலிகளின் இந்த அலுவலகத்தில் ஒப்படைக்கும் அளவுக்கு இதன் செயற்பாடுகள் அங்கு பிரசித்திபெற்றிருந்தன.

ஆனால் ஈழத்தமிழர்கள் பற்றி நல்ல எண்ணத்தை தமிழ் நாட்டு மக்களிடம் கட்டி எழுப்பும் நோக்குடன் புலிகள் மேற்கொண்ட இதுபோன்ற பல நடவடிக்கைகள், மாற்று இயக்கங்களின் திட்டமிட்ட சதி காரணமாக சிதறிப் போயின.

அதேபோன்று, விடுதலைப் புலிகள் போலவே அந்த நேரத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப். [illegible] (குழைமேட்டுச் சம்பவங்கள் போன்ற ஒன்றிரண்டைத் தவிர) பெரிதாக சமூக விரோத நடவடிக்கைகளில் தமது உறுப்பினர் ஈடுபடாமல் பார்த்துக்கொண்டதையும் இங்கு குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

ஈழத் தமிழ் அமைப்புக்கள் ஒன்றுபடக்கூடாது என்பதிலும், அவர்கள் தமக்குள் மோதிக்கொண்டு இருக்கவேண்டும் என்பதிலும், ஆரம்பம் முதலே இந்திய உளவு அமைப்புக்கள் உறுதியாக இருந்தன. அதில் அவர்கள் வெற்றியும் கண்டிருந்தார்கள்.

அத்தோடு 1986ஆம் ஆண்டில் இந்திய அரசு இலங்கை அரசுடன் நேரடியாகப் பேச நினைத்த உடனேயே, தமிழ் நாட்டு மக்களின் மனங்களில் இருந்து போராட்ட இயக்கங்களை அந்நியப்படுத்தும் சதிகளை இந்த புலனாய்வு அமைப்பு கனகச்சிதமாக அரங்கேற்றியிருந்தது. போராட்ட இயக்கங்கள் தமக்குள் மோதுப்பட்டு தம்மைத்தாமே பலவீனப்படுத்திக்கொள்ளவேண்டும் என்ற சதியையும் மிகக் கவனமாக இந்தியப் புலனாய்வாளர்கள் அரங்கேற்றியிருந்தார்கள்.

அந்தக் காலகட்டத்தில் இருந்தது போன்ற ஒரு தேவை தற்பொழுதும் இந்தியாவுக்கு இருக்கின்றது என்பதில் சந்தேகம் இல்லை.

புலம் பெயர் போராட்ட சக்திகள், தமிழ் நாட்டில் உள்ள ஈழ ஆதரவு சக்திகள் ஆகியவற்றுக்கு இடையே பிளவுகளை ஏற்படுத்தவும், மக்கள் மத்தியில் இந்த சக்திகளை அந்நியப்படுத்தவும், தனக்கு வேண்டிய அல்லது தன்னால் வழிநடத்தப்படும் தமிழ் தலைமைகளை பலமடைய வைக்கவும் இந்தியப் புலனாய்வுப் பிரிவான 'றோ' சதிகளைச் செய்யலாம் என்கின்ற கருதுகோளை இலகுவில் நாம் நிராகரித்துவிட முடியாது.

சரி இனி மீண்டும் பழைய கேள்விக்கே வருவோம்.

எப்படியான இரகசிய நடவடிக்கைகள் இந்தியப் புலனாய்வுப் பிரிவினரால் புலம்பெயர் ஈழத் தமிழரைக் குறிவைத்து எடுக்க முடியும்?

அதனைத் தடுப்பதற்கு ஈழத் தமிழர் என்ன செய்யவேண்டும்?

இதற்கான பதில்களை மற்றொரு சந்தர்ப்பத்தில் தேடுவதற்கு முயல்வோம்.

*நன்றி: தமிழ்வின்*


**வேலை ஆள்கள் தேவை**

எமது நிறுவனத்திற்கு ஆண்/பெண் வேலை ஆள்கள் தேவை. இன்று (26.07.2010) திங்கட்கிழமை காலை 8 மணி - மாலை 5 மணிவரை நேரில் தொடர்பு கொள்ளவும். 146, புங்கன்குளம் றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 6071675, 021 4909789

**கடை வாடகைக்கு**

சாவகச்சேரி கொமர்ஷல் வங்கிக்கு அருகிலுள்ள கடை வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 0851881


## காணவில்லை



**சேயோன் அஜந்தன்**


ஆகிய எனது மகன்
(யா/சென்ற் பெனடிக்ற் கல்லூரி, தரம் - 1 மாணவன்)
31.03.2010ஆம் திகதியிலிருந்து காணாமல் போயுள்ளார். கடந்த 31.03.2010 புதன்கிழமை தந்தையுடன் வீட்டில் இருந்து ஸ்கூட்டி (Scooty) மோட்டார் சைக்கிளில் (NPUL 0368) மாலை 5 மணிக்குப் புறப்பட்டவர்கள் இன்றுவரை வீடு வந்து சேரவில்லை. (வழக்கு இலக்கம் (AR/191/10) நீதிமன்ற உத்தரவின்படி சேயோன் அஜந்தனாகிய எனது மகனை கண்டவர்கள் அல்லது அவர் இருக்கும் இடம் தெரிந்தவர்கள் தயவு செய்து உடனடியாக தொடர்பு கொள்ளவும். அல்லது நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும்.

புதிய செம்மணி வீதி,
வயல்வெளி கந்தசாமி கோயில் வீதி,
கல்வியங்காடு.

தகவல்:
தாய்: சே.[illegible]
தொ.பே.: 0777969704

## அனுதாபச் செய்தி

கடந்த 21.07.2010 அன்று சிவபதமடைந்த



**தியாகராஜக் குருக்கள் செந்தில்நாதசர்மா**

*(ஏழாலை மேற்கு)*

அவர்களின் பிரிவுத்துயரில் நேரில் சமுகம் கொடுக்க முடியாததினால் அவர்களின் குடும்பத்தினர் திருமதி செ.புஸ்பகாந்தி அம்மா,செ.ரவிச்சந்திரக்குருக்கள் (லண்டன்), செ.சுகுமாரக்குருக்கள் (ஏழாலை) ஆகியோர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

வட்டூர் தவில்வித்துவான்
N.இராமநாதன் குடும்பத்தினர்.

வட்டு.வடக்கு,
வட்டுக்கோட்டை.
T.P:021 3217376

(இ/569164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய மட்ட வலைப்பந்தாட்டம்;

# இலகுவாகப்பெற்ற வெற்றியுடன் அடுத்த சுற்றுக்கு முன்னேறியது யாழ். அணி

வலி. வடக்கு ,ஜூலை 26

இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கம் அகில இலங்கை மட்டத்தில் நடத்தும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்றில் யாழ். மாவட்ட வலைப் பந்தாட்ட அணி வெற்றி பெற்றுள்ளது.

திருகோணமலை பொது விளை யாட்டு மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணியும், கொழும்பு நீர்ப்பாசனத் திணைக்கள அணியும் மோதிக்கொண்டன.

போட்டி எதிர்பார்த்தளவிற்கு சோபிக்காத துடன் யாழ். மாவட்ட அணி மிகவும் இலேசாக வெற்றியைப் பெற்றுக் கொண் டது.

முதல் பாதி ஆட்டம் யாழ். மாவட்ட அணி 14:01 புள்ளிகள் என்ற அடிப் படையில் நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டதிலும் யாழ். மாவட்ட அணி 11:00 என்ற புள்ளிகள் பெற்ற நிலையில் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் யாழ். மாவட்ட அணி 25:01 புள்ளிகள் என்ற அடிப்படையில் கொழும்பு நீர்ப்பாசனத் திணைக்களத்தை வெற்றி பெற்று இரண்டாம் சுற்றில் விளை யாடத் தகுதி பெற்றுள்ளது. (1-86)

# மாவட்ட மட்ட 50 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி

யாழ்ப்பாணம் ,ஜூலை 26

மாவட்ட மட்டத்தில் மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி (50 மைல்) எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறும்.

நவாலி வடக்கு சனசமூக நிலையமும் கலைமகள் முன்பள்ளியும் இணைந்து இப்போட்டியை நடத்தவுள்ளன.

வயது வேறுபாடு இன்றி ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் 15 பிரதேச செயலாளர் பிரிவுக்குள் வசிக்கும் இளைஞர் கள் மட்டுமே பங்குபற்றலாம்.

போட்டியில் பங்கு பற்றும் அனைத்து வீரர்களும் அன்றைய தினம் நவாலி அரசடி சந்திக்கு காலை 6.30 மணிக்கு வருகை தந்து பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு 50 மைல் ஓட்டப் போட்டிக்கு தயாராவதற்கான வீதி விவரம் உடன் அறியத்தரப்படும்.

மேற்படி போட்டியில் முதலிடம் பெறும் வீரர்களுக்கு புத்தம் புதிய துவிச்சக்கரவண்டி பரிசாக வழங்கப்படும்.

கடந்த 10 வருடங்களுக்கு பின்னர் மாவட்ட மட்டத்தில் இப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக தலைவர் சி. ஆனந்தர் அறிவித்துள்ளார். (1-302)

# மானிப்பாய் இந்துவுக்கு இலகுவான வெற்றி

வலி. வடக்கு ,ஜூலை 26

ஈசொப்ற் நிறுவனம் நடத்திய உதைபந்தாட் டப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல் லூரி வெற்றி பெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் இடையே ஈசொப்ற் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சாவ கச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி முதல் பாதி ஆட்டத்தில் 3 கோல்களைப் பெற்று முன்னணியில் நின்ற வேளையில் முதல் பாதி ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் மேலும் 2 கோல்களை மானிப்பாய் இந்துக் கல் லூரி பெற்ற நிலையில் ஆட்டம் முடி வடைந்தது.

ஆட்ட நிறைவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 5:0 என்ற கோல் கணக்கில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியை வெற்றி பெற்றது. (1-86)




# நிறேச்சின் சிறப்பான துடுப்பாட்டம்; 4விக்கெட்டுக்களால் வென்றது சென்றல்

யாழ்ப்பாணம் ,ஜூலை 26

நிறேச்சின் சிறப்பான துடுப்பாட்டத்தி னால் 4விக்கெட்டுக்களால் யாழ்.இந்துக் கல் லூரி அணியை வெற்றி கொண்டது யாழ் மத்திய கல்லூரி அணி.

பாடசாலை துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் 17 வயதுக்கு உட்பட் டோருக்குக்கான 50 பந்து பரிமாற்றங் களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணியினர் 41.05 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றனர்.

பார்த்தீபன் 24 ஓட்டங்களையும் துல சிறாம் 20 ஓட்டங்களையும், நிலோசன் 21 ஓட்டங்களையும் சுஜீவன் 17 ஓட் டங்களையும் தமது அணிக்காகப் பெற் றுக் கொடுத்தனர். உதிரிகளாக 26 ஓட்டங் கள் கிடைத்தன.

யாழ்.மத்திய கல்லூரி வீரர்களான டர்வின் 9.5 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங் களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் வதூசன் 9 ஓவர்கள் பந்துவீசி , 40 ஓட் டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக் களையும், கோகுலன் 10 ஓவர்கள் பந்து வீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட் டுக்களையும், நிசாந்தன் 8 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக் கெட்டையும் சிறீவண்ணன் 5 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 136 ஓட்டங்களைப் பெற் றால் வெற்றியென களம் இறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி 25 ஓவர்கள் நிறை வில் 6 விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட் டங்களைப் பெற்றது.

நிறேச் 59 ஓட்டங்களையும் கபிலன் 11 ஓட்டங்களையும் , டர்வின் 23 ஓட்டங் களையும் , கோகுலன் ஆட்டம் இழக்காமல் 16 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். உதிரிகளாக 20 ஓட் டங்கள் கிடைத்தன.

துலசிறாம் 8 ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக் களையும் சிறிகீர்தனன் 8 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக் கெட்டுக்களை வீழ்த்தினர். (1-23)

# ஜனாத்தனின் அபாரமான துடுப்பாட்டம்; மகாஜன 225 ஓட்டங்களால் வெற்றி

வலி. வடக்கு ,ஜூலை 26

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலை அணிக ளுக்கு இடையே நடைபெற்று வரும் 15 வயதுப் பிரிவினருக்கான சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்றில் தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரி 225 ஓட்டங் களால் வெற்றிபெற்றுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட் டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி யும், மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொண் டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 07 விக் கெட்டுக்களை இழந்து 364 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

ஜனாத்தன் ஆட்டமிழக்காது 19 நான்குகளும் 06 ஆறுகளுடன் 151, மயூரன் 36, சிந்துஜன் 34, கஜந்தன் 26, ரசி கரன் 24 ஓட்டங்கள் பெற்றதுடன் உதிரிகளாக 48 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியைச் சேர்ந்த தனுசன் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 47 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் சிவராம் 10 ஓவர் கள் பந்துவீசி 74 ஓட்டங்களுக்கு 2 விக்கெட் டுக்களையும் சிவசங்கர் ,ஜெயராம், பிரசாத் முறையே 47,54,57 ஓட்டங்க ளைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப் பற்றினார்கள்.

365 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விக் ரோறியாக் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட் டங்களை பெற்றுக் கொண்டது.

சிவராம் 28, கிரிசாந் 18, ஜெயராம் 13 ஓட்டங்களை பெற்றதுடன் உதிரிகளாக 58 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த மயூ ரன் 9 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற ஓவர் களுடன் 9 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக் களையும் ஜனார்த்தன் 10 ஓவர்கள் பந்து வீசி 06 ஓட்டமற்ற ஓவர்களுடன் 17 ஓட்டங் களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கஜந்தன் 10 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட் டமற்ற ஓவர் களுடன் 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக் களையும் சதுஜன், நிசாந்தன் முறையே 02, 06 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக் கெட்டையும் கைப்பறினார்கள். (1-86)

# மின்னொளியில் தாச்சிப் போட்டி; மயிலிட்டி ஒன்றியம் கேடயம் சுவீகரித்தது

கைதடி ,ஜூலை 26

பாரம்பரிய விளையாட்டான தாச்சி விளையாட்டை வளர்த்தெடுக்கும் நோக் கோடு கொக்குவில் காளியம்பாள் விளை யாட்டுக் கழகம் மின்னொளியிலான தாச்சிப் போட்டி ஒன்றை நடத்தியது.

யாழ். மாவட்ட ரீதியில் இடம்பெற்ற இப்போட்டியின் இறுதிச் சுற்றில் கட் டுடை விநாயகர் விளையாட்டுக் கழகமும் , மயிலிட்டி இளைஞர் ஒன்றிய விளையாட் டுக்கழகமும் மோதிக் கொண்டன.

யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் தலைவர் செ. சண்முகலிங்கம் பிரதம விருந் திரனராக கலந்து கொண்ட இப்போட்டி யில் மயிலிட்டி இளைஞர் ஒன் றிய விளை யாட்டுக்கழகம் 2 இற்கு 4 என்ற ரீதியில் புள்ளிகளைப் பெற்று வெற்றியைத் தன தாக்கிக் கொண்டது.

மிக விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியைப் பெருந்திரளான தாச்சி ஆர் வலர்கள் மின்னொளியில் கண்டு ரசித் தனர். (1-288)



வடமாகாணக் விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்கள் , உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடைபெற்ற தடகளப் போட்டிகளில் சிறந்த தட வீரராக தெரிவு செய்யப்பட்ட யாழ். பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எட்வேட் எடின் யாழ். மாவட்டத்தின் 2010 ஆம் ஆண்டுக்கான சிறந்த கள வீரனாகத் தெரிவு செய்யப்பட்ட சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரஜீம்ராஜ், சிறந்த கள வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்ட யாழ். பிரதேச செயலகததைச் சேர்ந்த கஜீதா, சிறந்த தட வீராங்கனையாக தெரிவுசெய்யப்பட்ட தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஜக்சனா ஆகியோருக்கு யாழ். மாவட்ட அரச அதிபர் தங்கப் பதக்கம் அணிவித்துக் கௌரவிப்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகர், நடிகைகள் இலங்கை செல்ல இனி யாரும் தடை போடக் கூடாது!

## தடுப்போர் மீது நடவடிக்கை; நடிகர் சங்கம் எச்சரிக்கை



சென்னை, ஜூலை 26
தொழில் ரீதியாகவோ, தனிப்பட்ட முறையிலோ நடிகர், நடிகைகள் இலங்கை செல்வதை இனி யாரும் தடுக்கக் கூடாது, தடுப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று நடிகர் சங்கப் பொதுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், தமிழர் படுகொலை புரிந்தோரை சர்வதேச நீதிமன்றம் மூலம் தண்டிக்க வேண்டும் என்றும் நடிகர் சங்கம் தெரிவித்துள்ளது.

அண்மையில் நடிகை அசின் இலங்கை சென்று சர்ச்சையை ஏற்படுத்தினார்.

இந்தியக் கலைஞர்கள் இலங்கை செல்லக் கூடாது என்று தமிழுணர்வாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில் இவர்களின் இலங்கைப் பயணத்திற்கு தென்னிந்திய நடிகர் சங்கம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள்.

இந்நிலையில் சென்னையில் தென்னிந்திய நடிகர் சங்கக் கூட்டம் நேற்றுக் கூடியது.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டம், ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும். அனைத்து நடிகர் - நடிகைகளும் அதில் கலந்துகொள்வார்கள்.

இந்த வருடத்துக்கான பொதுக்குழு கூட்டம், சென்னை தியாகராயநகரிலுள்ள நடிகர் சங்கக் கட்டடத்தில் நேற்றுக்காலை நடந்தது.

மு.ப. 10 மணிக்கு கூட்டம் தொடங்கியது. கூட்டத்துக்கு, நடிகர் சங்கத் தலைவர் சரத்குமார் தலைமை தாங்குகினார். செயலாளர் ராதாரவி, துணைத்தலைவர்கள் விஜயகுமார், மனோரமா, பொருளாளர் வாகை சந்திரசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இந்தக் கூட்டத்தில், நடிகர் சங்கச் செயற்குழு உறுப்பினர்கள் சத்தியராஜ், சூர்யா, முரளி, சார்லி, எஸ்.வி.சேகர், கே.ராஜன், சத்தியப்பிரியா, குயிலி, இணைச் செயலாளர்கள் கே.ஆர்.செல்வ ராஜ், அலெக்ஸ், கே.என்.காளை உட்பட ஏராளமான நடிகர்-நடிகைகள் கலந்துகொண்டார்கள்.

கூட்டத்தின் முடிவில் இலங்கை செல்ல நடிகர், நடிகைகளுக்குத் தடை போடக் கூடாது. தொழில் ரீதியாகவோ, தனிப்பட்ட முறையிலோ நடிகர், நடிகைகள் அங்கு செல்வதை இனி யாரும் தடுக்கக் கூடாது. இலங்கை செல்வோரைத் தடுப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், தமிழர் படுகொலை புரிந்தோரை சர்வதேச நீதிமன்றம் மூலம் தண்டிக்க வேண்டும். சினிமா இலாப - நஷ்டங்களுக்கு நடிகர்களிடம் நஷ்டஈடு கேட்கக் கூடாது என பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இலங்கை செல்ல நடிகர், நடிகைகளுக்கு தடை இல்லை. தடை போட்டாலும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நடிகர் சங்கத்தின் தீர்மானங்கள் தமிழுணர்வாளர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றன.

## இந்தியச் செய்திகள்

# ஈழத் தமிழர் மீட்சி பெற இந்தியாவின் செயற்பாடு பலமாக இருக்கவேண்டும்

## வீரமணி தெரிவிப்பு

சென்னை, ஜூலை 26
ஈழத்தமிழர்கள், தமிழக மீனவர்கள் படும் அவதிகளைக் களைந்து, அவர்கள் மீட்சி பெற இந்திய அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் - என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் நிரந்தரமான அமைதி ஏற்படவும், அந்த நாடு செழிக்கவும் வழி வகைகளைச் செய்ய காலம் கனிந்துள்ளது என்று தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்கத் துணை அமைச்சர் ரோபேர்ட் பிளேக் கூறியுள்ளார்.

போர்க் காலங்களில் சிறைப்பிடிக்கப்பட்ட யுத்தக் கைதிகளை எப்படி நடத்த வேண்டும்; சமாதான வெள்ளைக் கொடியுடன் வந்தவர்களை எப்படி மனித உரிமைகளை மதித்து நடத்த வேண்டும் என்ற சர்வதேச விதிமுறைகள் எவ்வாறெல்லாம் மீறப்பட்டு இடி அமீன்கள் கூட வெட்கப்பட்டு ஓடிவிடும் அளவுக்கு இலங்கையில் நடந்தவற்றை உலகம் அறிய வேண்டும். தமிழ்நாடு முதல்வர் கலைஞர் எத்தனை முறைதான் கடிதம் எழுதி, நேரில் வலியுறுத்தி, தனது எம்.பிக்களை அனுப்பி, வற்புறுத்திப் பாடுபடமுடியுமோ அவ்வளவும் செய்துவிட்டார்.

ஈழத்தந்தை செல்வாவிடம் தந்தை பெரியார் கூறிய வாசகம்தான் கல்லில் எழுத்தாக நம் முன்னே நிற்கிறது.

பாம்புக்கும் நோகாமல், பாம்படிக்கும் கோலுக்கும் நோகாமல் இலங்கை அரசிடம் இந்திய அரசு நடந்து கொள்வது தமிழின அழிப்பிலிருந்து அவர்களைக் காப்பாற்றத் தவறுவது மன்னிக்க முடியாத வரலாற்றுப் பிழை அல்லவா?

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை மீது ஐ.நா. விசாரணைக்கு இந்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டும்

## புதிய தமிழகம் கட்சி வலியுறுத்து

சென்னை, ஜூலை 26
இலங்கைத் தமிழர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் எவ்வித நன்மையும் செய்யவில்லை. எனவே, இப்போது இலங்கை அரசு மீது ஐ.நா. விசாரணை நடத்த இந்திய அரசு நிர்பந்திக்க வேண்டும். அதற்கான ஒரு கடமையையாவது தமிழக முதல்வர் செய்ய வேண்டும் - என்று புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி கூறியுள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழக முதல்வர் கருணாநிதி மக்களை ஏமாற்றி வருகிறார். ஏற்கனவே இலங்கைக்குச் சென்று வந்த நாடாளுமன்றக் குழுவினர் எதையும் சாதிக்காத நிலையில் இப்போது மீண்டும் ஒரு தூதுக்குழுவை நியமிக்க வேண்டும் என்பது ஏமாற்று வேலை.

தமிழர்கள் வாழும் பகுதிகளில் ஆயிரக் கணக்கான சிங்களவர்களை குடியேற்றம் செய்யும் இலங்கை அரசின் நடவடிக்கையை அந்நாட்டு எம்.பி.க்கள் வெட்ட வெளிச்சமாக்கி உள்ளனர்.

இதுவரையில் இலங்கைத் தமிழர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் எவ்வித நன்மையும் செய்யவில்லை. எனவே, இப்போது இலங்கை அரசு மீது ஐ.நா. விசாரணை நடத்த இந்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டும். அதற்கான ஒரு கடமையையாவது தமிழக முதல்வர் செய்ய வேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.

# சீமானின் சிறைக்காவல் நீடிப்பு



தென்னிந்தியத் திரைப்பட இயக்குநரும், 'நாம் தமிழர்' இயக்கத் தலைவருமான சீமானின் சிறைக்காவல் நீடிக்கப்பட்டுள்ளது.

ஈழத்தமிழர்களையும், தமிழகத் தமிழர்களையும் தொடர்ந்து தாக்கி வரும் இலங்கை அரசையும், இலங் கைக் கடற்படையையும் கண்டித்து 'நாம் தமிழர்' இயக்கத்தின் சார்பில் நடந்த ஆர்ப்பாட்டத்தின்போது சீமான் ஆவேசமா கப் பேசினார்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட சீமான், வன்முறையைத் தூண்டும் வகையில் பேசினார் எனக் கூறி பொலிஸார் வழக்குப் பதிவுசெய்து கைதுசெய்து வேலூர் சிறையில் அடைத்தனர். பின்னர் அவர் மீது தேசிய பாதுகாப்புச் சட்டமும் பிரயோகிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் சீமான் காவல் நீடிப்புக்காக ஜோர்ஜ்டவுன் நீதிமன்றுக்குக் கொண்டுவரப்பட்டார். அப்போது வரும் ஓகஸ்ட் 6 ஆம் திகதிவரை காவலை நீடித்து நீதிவான் சாந்தி உத்தரவிட்டார். இதையடுத்து பாதுகாப்புடன் சீமானை வேலூர் சிறைக்கு பொலிஸார் கொண்டு சென்றனர்.

முன்னதாக நீதிமன்றுக்கு சீமான் கொண்டுவரப்பட்டபோது பொலிஸாரைக் கண்டித்து நாம் தமிழர் இயக்கத் தொண்டர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர்.



இந்திய ரூபா நோட்டுக்கு குறியீடு உருவாக்கிய உதயகுமார் தனது குடும்பத்தினருடன் நேற்றுமுன் தினம் கருணாநிதியைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# தென் மாநில நதிகளை இணைப்பதற்கு மத்திய அரசு பேச்சு நடத்த வேண்டும்

## தமிழக அரசு வலியுறுத்து



சென்னை, ஜூலை 26
தென் மாநில நதிகளை இணைப்பதற்கான பேச்சுகளை மத்திய அரசு தொடங்க வேண்டும் - என்று தமிழக அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

டில்லியில் சனிக்கிழமை நடைபெற்ற தேசிய வளர்ச்சி கவுன்ஸிலின் 55 ஆவது கூட்டத்தில் தமிழக முதல்வர் கருணாநிதி சார்பாக துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றுப் பேசியபோது இக்கருத்தை வலியுறுத்தினார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

பதினோராவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் தமிழகத்துக்கு ரூபா 85 ஆயிரத்து 344 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதில், 2009 - 2010 ஆம் நிதியாண்டுவரை ரூபா 47 ஆயிரத்து 500 கோடி திட்டச் செலவினமாகியுள்ளது. நடப்பு நிதியாண்டில் ரூபா 20 ஆயிரத்து 68 கோடிக்குத் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளன.

இப்போது பொருளாதார நிலை சாதகமான நிலையை எட்டி வருகிறது. எனவே, வளர்ச்சி வீதம் உச்சத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தண்ணீர்ப் பற்றாக்குறை மாநிலமாக தமிழகம் உள்ளது. இந்த நிலையில், வேளாண் உற்பத்தியை நவீன முறைகள் மூலம் பெருக்கும் முயற்சியில் மாநில அரசு ஈடுபட்டுள்ளது. கல்வி மற்றும் சுகாதாரத்தில் முன்னோடி மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது.

மக்கள் தொகையைக் குறைக்கும் வகையில், குழந்தைகள் பிறப்பு வீதம் 2008 ஆம் ஆண்டில் மட்டும் 1.6 சதவீதமாக குறைந்துள்ளது. சிசு மரணவீதம் குறைவாக உள்ள மாநிலங்களில் தமிழகம் இரண்டாம் இடம் வகிக்கிறது. அனைவருக்கும் தொடக்கக் கல்வி மற்றும் 95 சதவீதம் பேருக்கு நடுநிலைக் கல்வி என்ற இலக்கை 2012 ஆம் ஆண்டுக்கு முன்பே எட்டுவோம் என்ற நம்பிக்கை உள்ளது.

மகாத்மா காந்தி கிராம வேலை உறுதித் திட்டம், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் உள்ளிட்டவை தமிழகத்தில் சிறப்பாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழகத்துக்குள் ஓடும் நதிகளை இணைப்பதற்கான திட்டங்களை மாநில அரசு வகுத்துள்ளது. இந்த நிலையில், மாநிலங்களுக்கு இடையே ஓடும் நதிகளை குறிப்பாக தென் மாநிலங்களுக்கு இடையிலான நதிகளை இணைக்க வேண்டும். இதற்கான பேச்சு முயற்சிகளை மத்திய அரசு எடுக்க வேண்டும்.

ஒரு மாநிலத்தின் வளர்ச்சி என்பது போக்குவரத்து போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைக் கொண்டு அமைகிறது. எனவே, அதிகளவு அகல ரயில் பாதைத் திட்டங்களை உருவாக்குவதோடு புதிய ரயில் பாதைகளையும் ஏற்படுத்த வேண்டும். துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களை மேம்படுத்த வேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்திய அணிகள் கொழும்பில் இன்று மோதல்

கொழும்பு, ஜூலை 26

இந்திய-இலங்கை அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இந்த ஆட்டத்திற்கான இலங்கை அணியிலிருந்து மலிங்க நீக்கப்பட்டுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணி, இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. காலியில் நடந்த முதலாவது போட்டியில், இந்திய அணி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலங்கையிடம் தோல்வியடைந்தது.

இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி இன்று கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமாகிறது.

தொடரை வெல்லும் வாய்ப்பைத் தக்க வைத்துக்கொள்ளவேண்டுமாயின், இந்தப் போட்டியில் கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டிய நெருக்கடியில் இந்திய அணி களமிறங்குகிறது.

இந்த நிலையில் இந்திய அணிக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாக, 2ஆவது டெஸ்டில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் மலிங்க காயம் காரணமாக விளையாடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு டெஸ்ட் அணிக்குத் திரும்பிய மலிங்க, முதல் போட்டியிலேயே இந்திய துடுப்பாட்ட வீரர்களைத் திணறடித்து 7 விக்கெட்டுகள் வீழ்த்தி ஆட்டநாயகன் விருதினையும் பெற்றார்.

அவரது வலது கால் மூட்டில் வலியால் அவதிப்படுகிறார். இதனால் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக அவருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

''மலிங்கவின் உடல்தகுதி குறித்து நாங்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம்.

3ஆவது டெஸ்டுக்கு இன்னும் 10 நாள்கள் இருப்பதால் அதற்குள் உடல் தகுதியைப் பெற்று விடுவார் என நம்புகிறோம்'' என்று இலங்கை அணியின் தேர்வுக் குழுத் தலைவர் அரவிந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவருக்குப் பதிலாக திலகார பெர்னாண்டோ சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, முதலாவது போட்டியில் ஒரு கலக்குக் கலக்கிய 'சுழல் மன்னன்' முரளிதரன் இல்லாத நிலையில் - வலுவிழந்த இலங்கை அணி, இந்தியாவைச் சமாளிக்கிறதா அல்லது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்தியா இலங்கையைத் துவம்சம் செய்கிறதா என்பது அனைவரது எதிர்பார்ப்பாகவும் அமைகிறது.

முரளிதரனுக்குப் பதிலாக அஜந்த மெண்டிஸ் சேர்க்கப்பட்டுள்ளார். இவர், இந்தியாவுக்கு எதிரான பயிற்சியாட்டத்தின்போது 6 விக்கெட்டுகள் வீழ்த்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், மஹேல ஜெயவர்த்தன துணை அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

2ஆவது டெஸ்டுக்கான இலங்கை அணி வருமாறு:-

சங்கக்கார (அணித்தலைவர்), டில்ஷான், பரனவிதான, மஹேல ஜெயவர்த்தன, சமரவீர, மத்யூஸ், பிரசன்ன ஜெயவர்த்தன, அஜந்த மெண்டிஸ், பெர்னாண்டோ, வெலகெதர, சுராஜ் ரன்டிவ், ஹேரத், கண்டம்பி, தம்மிக பிரசாத், திரிமன்னே, நுவான் பிரதீப்.

# முதலிடத்தில் தொடர்கிறது இந்தியா!

கொழும்பு, ஜூலை 26

இலங்கை அணிக்கு எதிராக காலியில் நடந்த டெஸ்ட் போட்டியில் தோல்வியடைந்தபோதும் இந்திய அணி, டெஸ்ட் தரவரிசையில் தொடர்ந்தும் முதலிடத்தில் (124 புள்ளிகள்) உள்ளது.

120 புள்ளிகளுடன் தென்னாபிரிக்கா 2ஆவது இடத்திலும், 119 புள்ளிகளுடன் அவுஸ்திரேலியா 3ஆவது இடத்திலும் உள்ளன.

115 புள்ளிகளுடன் இலங்கை அணி 4ஆவது இடத்திலும், 108 புள்ளிகளுடன் இங்கிலாந்து அணி 5ஆவது இடத்திலும் உள்ளன.

6ஆவது இடத்தில் பாகிஸ்தானும், 7ஆவது இடத்தில் நியூஸிலாந்தும், 8ஆவது இடத்தில் மேற்கிந்தியத் தீவுகளும், 9ஆவது இடத்தில் பங்களாதேஷும் உள்ளன.

இலங்கைக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்து தொடரை இழந்தால் இந்தியா முதலிடத்தை இழக்க நேரிடும்.

# பிடியாணை பிறப்பிப்பு



சண்டிகர், ஜூலை 26

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் விளையாடும் பஞ்சாப் அணியின் உரிமையாளரான நடிகை பிரீத்தி ஜிந்தாவுக்கு சண்டிகர் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் உரிமையாளர்களாக நடிகை பிரீத்தி ஜிந்தா, அவரது முன்னாள் காதலரும், தொழிலதிபருமான நெஸ் வாடியா, மொகித் பர்மன், கரன் போல் ஆகியோர் உள்ளனர்.

இதையடுத்து வரவு-செலவு விவரங்களைத் தாக்கல் செய்யாதி பஞ்சாப் அணியின் உரிமையாளர்கள் மீது கம்பெனிகளின் பதிவாளர் அலுவலகம் கடந்த ஏப்ரல் மாதம் சண்டிகர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தது.

வழக்கை விசாரித்த நீதிபதி, ஜூலை 24ஆம் திகதி (நேற்றுமுன்தினம்) விசாரணையின்போது பஞ்சாப் அணியின் உரிமையாளர்கள் ஆஜராக வேண்டும் என்று நோட்டீஸ் அனுப்பி உத்தரவிட்டார்.

இந்த நிலையில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் நடந்த விசாரணையின்போது கரன்போல் சார்பில் அவரது சட்டத்தரணி ஆஜரானார். ஆனால், பிரீத்தி ஜிந்தா உள்ளிட்ட மற்ற மூன்று பேரும் நீதிமன்றுக்கு வரவில்லை. அவர்களது சார்பில் சட்டத்தரணிகளும் ஆஜராகவில்லை. இதையடுத்து பிரீத்தி ஜிந்தா, நெஸ் வாடியா, மொகித் பர்மன் ஆகியோருக்கு பிணையில் வெளிவரக்கூடிய பிடியாணை பிறப்பித்து, தலைமை நீதிபதி ஜஸ்பிர் சிங் சித்து உத்தரவிட்டார். வழக்கின் அடுத்த விசாரணை ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# பிரான்ஸ் வீரர்கள் நீக்கம்!

உலகக் கிண்ணத் தொடரில் பிரான்ஸ் அணிக்காக விளையாடிய 23 வீரர்களும் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். புதிய பயிற்சியாளரான லோரன்ட் பிளான்க்கே இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின்போது, பிரான்ஸ் வீரர்களால், அந்த அணி பல்வேறு சர்ச்சைகளைச் சந்தித்தது.

இதனால், சர்ச்சைகளை ஏற்படுத்தி அனைத்துத் தரப்பினர் மீதும் நடவடிக்கை எடுக்கும்படி அந்நாட்டு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்த நிலையிலேயே, பிரான்ஸ் வீரர்கள் அத்தனை பேரும் கூண்டோடு அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். அடுத்த மாதம் 11ஆம் திகதி ஒஸ்லோ நகரில் நோர்வே அணியுடன் பிரான்ஸ் அணி நட்பு ஆட்டம் ஒன்றில் மோதுகிறது.

இந்தப் போட்டியில் உலகக் கிண்ணத் தொடரில் இடம்பெற்ற வீரர்கள் எவரும் இடம்பெறவில்லை. இவர்களுக்குப் பதிலாக 23 புதிய வீரர்கள் அணியில் இடம் பெறவுள்ளனர்.

புதிய வீரர்களை பிரான்ஸ் பயிற்சியாளர் லாரன்ட் பிளான்க், அடுத்த மாதம் 5ஆம் திகதி அறிவிப்பார்.

# இரத்தம் சிந்தவில்லை என்கிறார் சச்சின்

மும்பை, ஜூலை 26

''டெண்டுல்கர் ஓபஸ்'' புத்தகத்தில், எனது இரத்தம் கலந்திருக்கிறது என வெளிவந்த செய்திகளில் உண்மை இல்லை'' என சச்சின் தெரிவித்துள்ளார்.

சச்சினின் சுயசரிதை அடங்கிய டெண்டுல்கர் ஓபஸ் புத்தகத்தின் கையெழுத்துப் பக்கத்தில் சச்சினின் இரத்தம் சேர்க்கப்பட்டுள்ளது என 'கிரேகான் மீடியா' நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி கோல் போவ்லர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

ஆனால், இதை அதிரடியாக மறுத்துள்ளார் சச்சின்.

இது குறித்து அவர் கூறியவை வருமாறு:-

'டெண்டுல்கர் ஓபஸ்' புத்தகம், எனது கிரிக்கெட் வாழ்க்கை குறித்த புகைப்படங்களின் தொகுப்பு. இது சுயசரிதையும் அல்ல; வாழ்க்கை வரலாறும் அல்ல. இந்தப் புத்தகத்தில் எனது இரத்தம் கலந்திருக்கிறது என்ற தகவல் முற்றிலும் பொய்யானது. இந்தச் செய்தி வெளியானபோது, நான் காலியில் நடந்த டெஸ்ட் போட்டியில் விளையாடிக் கொண்டிருந்தேன். போட்டியில் கவனம் செலுத்தியதால், இதுபற்றி எதுவும் தெரியவில்லை.

கடந்த வியாழக்கிழமைதான் இதுபற்றி அறிந்தேன். இந்தப் புத்தகம் அனைவரும் வாங்கும் விதத்தில் பல்வேறு விலைகளில் வெளிவரும். இதுதவிர, இந்தியாவில் உள்ள நூலகங்களுக்கு இந்தப் புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.

- இவ்வாறு சச்சின் கூறினார்.

இதேவேளை, 'கிரேகான் மீடியா'வும் இதேகருத்தைத் தெரிவித்துள்ளது. இது குறித்து அதன் தலைமை நிர்வாக அதிகாரி கோல் போவ்லர் கூறுகையில்,

''நான் கூறிய கருத்துகள், பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகளில் தவறாக வெளிவந்துவிட்டன. 'டெண்டுல்கர் ஓபஸ்' புத்தகத்தில் சச்சினின் இரத்தம் கலந்திருக்காது.'' - என்றார்.

# உலகச் சம்பியன் ஸ்பெயின் அணி ஆர்ஜென்ரீனாவுடன் மோதல்!

உலக சம்பியன் ஸ்பெயின், ஆர்ஜென்ரீனாவுடன் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி சினேகபூர்வ ஆட்டம் ஒன்றில் விளையாடவுள்ளது.

ஆர்ஜென்ரீனா சுதந்திரமடைந்து 200 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு சிறப்பு உதைபந்தாட்டப் போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் உலக சம்பியன் ஸ்பெயினும், ஆர்ஜென்ரீனாவும் மோதுகின்றன. நியூயோர்க் நகரில் இந்தப் போட்டி நடைபெறுவதாக இருந்தது. ஆனால், தற்போது பியூனஸ் அயர்ஸுக்கு மாற்றப்பட்டுள்ளது. எதிர்வரும் செப்ரெம்பர் 7ஆம் திகதி இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.




# ஆஸியை வீழ்த்தி தொடரைச் சமன் செய்தது பாக்.!



லீட்ஸ், ஜூலை 26

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில், 15 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் முறையாக பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றிருக்கிறது.

பாதுகாப்புப் பிரச்சினை காரணமாக கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பாகிஸ்தானில் சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகள் எதுவும் நடைபெறவில்லை. இதையடுத்து அங்கு நடக்க விருந்த பாகிஸ்தான்-ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் பொதுவான இடமான இங்கிலாந்தில் நடத்தப்பட்டது.

இதில் முதலாவது டெஸ்டில் ஆஸ்திரேலிய அணி, 150 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது.

இந்த நிலையில் ஆஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி லீட்ஸில் கடந்த 21ஆம் திகதி ஆரம்பமாகியது.

இதன் முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணி, 88 ஓட்டங்களுக்குள் சுருண்டு, கடந்த 26 ஆண்டுகளில் மோசமான ஓட்டங்களைப் பெற்றது. பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் 258 ஓட்டங்களைச் சேர்த்தது.

இதையடுத்து 170 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி, அணித்தலைவர் ரிக்கி பொண்டிங், மைக்கல் கிளார்க், ஸ்டீபன் ஸ்மித் ஆகியோரின் அரைச்சதங்களின் உதவியுடன் 349 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தது.

பின்னர் 180 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 3ஆவது நாள் ஆட்ட நேர முடிவின்போது 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 140 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

மேலதிகமாக 40 ஓட்டங்களைச் சேர்த்தால் வெற்றி என்ற நிலையில் நேற்றுமுன்தினம் 4ஆவது நாள் ஆட்டத்தை தொடர்ந்தது பாகிஸ்தான்.

சிறிய இலக்கு என்ற போதிலும், பாகிஸ்தான் வீரர்களால் எளிதில் வெற்றியை ருசிக்க முடியவில்லை. வெற்றிக்கனியைப் பறிக்க மேலும் 4 விக்கெட்டுகளைப் பறிகொடுக்க வேண்டியிருந்தது. முடிவில் 50.4 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 180 ஓட்டங்களைத் தொட்டது.

இதன்மூலம் 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் 'திரில்' வெற்றிபெற்றது.

இம்ரான் பர்கத் 67 ஓட்டங்களையும், அஸார் அலி 51 ஓட்டங்களையும், கம்ரன் அக்மல் 13 ஓட்டங்களையும் சேர்த்திருந்தனர்.

ஆஸ்திரேலிய அணி சார்பாகப் பந்துவீச்சில், போலிஞ்சர், ஹில்பனாஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.


ஆஸ்திரேலியாவுக்கு எதிராகத் தொடர்ந்து 13 டெஸ்ட் தோல்விகளுக்குப் பின்னர் பாகிஸ்தான் பெற்ற முதல் வெற்றி இதுவாகும். அதாவது 15 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த வெற்றியை ருசித்திருக்கிறது. இதற்கு முன்பு கடைசியாக 1995ஆம் ஆண்டு வஸிம் அக்ரம் தலைமையிலான பாகிஸ்தான் அணி, சிட்னியில் நடந்த டெஸ்டில் ஆஸ்திரேலியாவைத் தோற்கடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வெற்றியின் மூலம் 2 டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரை பாகிஸ்தான் 1-1 என்ற கணக்கில் சமன் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா, தென்கொரியா மீது அணுகுண்டு வீசவும் தயங்கோம்

## வடகொரியா எச்சரிக்கை




சியோல், ஜூலை 26

அமெரிக்கா, தென்கொரியா ஆகிய இரு நாடுகள் மீதும் அணுகுண்டுகளை வீசி பதிலடி கொடுக்கவும் தயங்கமாட்டோம் என்று வட கொரியா கடுமையான எச்சரிக்கை விடுத் துள்ளது.

தென்கொரியாவும், அமெரிக்காவும் கூட்டு கடற்படை ஒத்திகையை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளன. இதற்காக அமெரிக்காவின் ஜோர்ஜ் வாஷிங்டன் போர்க்கப்பல் தென்கொரியாவுக்கு வருகை தந்துள்ளது.

இந்தக் கப்பல் முழுவதும் போர் விமானங்கள் இடம்பெற்றுள்ளன. தென்கொரியாவும் கடல் பகுதியில் போர்க் கப்பலை நிறுத்தியுள்ளது. இந்த எச்சரிக்கையின் மத்தியிலும் இரு நாடுகளின் கூட்டு கடற்படை ஒத்திகை நேற்று ஞாயிற்றுக்கிழமை திட்டமிட்டபடி ஆரம்பமாகியது.

அத்துமீறிய செயல்களில் ஈடுபட்டு வரும் வடகொரியாவுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில்தான் இரு நாடுகளும் இந்தக் கூட்டு கடற்படை ஒத்திகையை நடத்தவுள்ளன எனத் தகவல் முன்கூட்டியே வெளியாகியுள்ளது.

இதனால் வடகொரியா கோபம் அடைந்துள்ளது. அமெரிக்காவுக்கும், தென்கொரியாவுக்கும் அது எச்சரிக்கை விடுத்துள்ளது.

''ஒருவேளை அமெரிக்காவும், தென்கொரியாவும் எங்களைத் தாக்கினால் நாங்கள் வேடிக்கை பார்க்கமாட்டோம். இரு நாடுகளின் தாக்குதலுக்குப் பயந்து எங்களது இராணுவச் சிப்பாய்களோ, மக்களோ ஓடமாட்டார்கள். எதிர்த்துப் பதிலடி கொடுப்பார்கள்'' என்று வட கொரியா தெரிவித்துள்ளது.

''தேவைப்பட்டால் எங்கள் வசமுள்ள அணுகுண்டுகளை வீசித் தாக்கவும் தயங்கமாட்டோம்'' என்றும் அந்நாடு கடுமையாக எச்சரித்துள்ளது.

''தென்கொரியாவும், அமெரிக்காவும் போர்க்கப்பல்களை நிறுத்தி வைத்துள்ளமையைக் கவனித்துவரும் வடகொரியா கோபத்தின் உச்சத்துக்கே சென்றுள்ளது. இரு நாடுகளும் தங்கள் மீது எப்போது வேண்டுமானாலும் தாக்குதல் தொடுக்கலாம் என்ற முடிவுக்கே அது வந்துள்ளது'' என்றும் வட கொரிய அரசு செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

''இதைக் கருத்திற்கொண்டு எத்தகைய சூழலையும் எதிர்கொள்ளும் வகையில் வட கொரியா தனது இராணுவத்தை ஆயத்தப்படுத்தியுள்ளது'' என்றும் வட கொரிய அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த எச்சரிக்கையை அடுத்து வட கொரியா- தென்கொரியா இடையே பதற்றம் அதிகரித்துள்ளது.

# பங்களாதேஷ் கடற்படையில் பிரி. தயாரித்த ஆய்வுக் கப்பல்

டாக்கா, ஜூலை 26

பங்களாதேஷ் அதன் கடற்படைக்குப் பிரிட்டனிலிருந்து ஆய்வுக் கப்ப லொன்றை வாங்கியுள்ளது.

நவீன தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்ட 'அணுஷன்தன்' என்ற இந்த ஆய்வுக் கப்பல் பங்களாதேஷ் கடற்படையில் வெள்ளிக்கிழமை இணைத்துக் கொள்ளப்பட்டது.

பங்களாதேஷ் கடற்படையில் இடம் பெறும் நவீன தொழில்நுட்பம் கொண்ட முதல் கப்பல் இதுதான் என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்வதேச தரம்வாய்ந்த இந்தக் கப்பல் இணைத்துக்கொள்ளப்பட்டதன் மூலம் தங்களது கடற்படையின் வலிமை அதிகரித்துள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

இந்தக் கப்பல், கடல் பகுதியிலுள்ள வளங்களைக் கண்டறியும் ஆய்வில் அதிக கவனம் செலுத் தும். கடலோரப் பகுதியில் தகவல்களைச் சேகரித்துக் கடற்பகுதியை பாதுகாக்கும் பணியிலும் ஈடுபடும் என்று பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவத்தை சீனா பலப்படுத்துவது குறித்து அமெ. நாடாளுமன்றில் அறிக்கை சமர்ப்பிக்க வலியுறுத்து

## எதிர்க்கட்சியின் செனட்டர்கள் அழுத்தம்

வாஷிங்டன், ஜூலை 26

சீன இராணுவம் பலப்படுத்தப்படுவது தொடர்பாக நாடாளுமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பாதுகாப்புத் துறையை அமெரிக்க எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சியின் செனட்டர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சீனா தமது இராணுவத்தைப் பலப்படுத்திவருவது தொடர்பாக அதிருப்தி தெரிவித்துள்ள குடியரசுக் கட்சி உறுப்பினர்களான ஜோன் கோர்னின், ஜோன் மெகைன், ஜேம்ஸ் ரிச், ரொபர்ட்ஸ், ஜேம்ஸ் இன்ஹோப் ஆகியோர் தமது கோரிக்கையை வலியுறுத்தி பாதுகாப்புத்துறைக்குக் கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

''சீனா தமது இராணுவத்தைப் பலப்படுத்தி வருகிறது. நவீன ஏவுகணைகளை தயாரித்தல், ஏவுகணைத் தயாரிக்கும் புதிய தொழிற்சாலைகளை அமைத்தல், அதி நவீன நீர்மூழ்கிக் கப்பலை வடிவமைத்தல் ஆகியவற்றில் அது முனைப்பு காட்டி வருகிறது.

அந்நாடு தான் வடிவமைக்கும் நவீன ஏவுகணைகளை அவ்வப்போது சோதித்தும் வருகிறது. சீனா தனது இராணுவத்தில் ஏவுகணைப் பிரிவை வலிமையானதாக மாற்றுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகிறது. இதற்காக ஒவ்வோர் ஆண்டும் பட்ஜெட்டில் கணிசமான தொகையை ஒதுக்கீடு செய்கிறது.

சீனாவின் இத்தகைய நடவடிக்கையால் அமெரிக்க பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அதிகரித்து வருகிறது. இதில் ஐயமில்லை. ஆனால், அமெரிக்க பாதுகாப்புத்துறை இது பற்றி கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

சீனாவின் இராணுவ நடவடிக்கை தொடர்பாக கடந்த சில மாதங்களாக நாடாளுமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை. இது ஏன்? இதற்கான விளக்கத்தை அளிக்க வேண்டும். அத்துடன், நிலுவையில் உள்ள அறிக்கைகளை உடனடியாகத் தாக்கல் செய்ய வேண்டும்.''

இவ்வாறு குடியரசுக் கட்சி செனட்டர்கள் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

# தலிபான் தலைவர்கள் மீது அமெ. பொருளாதாரத் தடை

வாஷிங்டன், ஜூலை 26

தலிபான் சிரேஷ்ட தலைவர் நசீருதீன் ஹக்கானி உட்பட மூன்று பேர் மீது அமெரிக்க அரசு பொருளாதாரத் தடை விதித்துள்ளது. தலிபான் தலைவர் முல்லா ஓமரின் நெருங்கிய நண்பர் குல் ஆகா இஷாக், தலிபான் இயக்கத்தின் முன்னாள் நிதிச் செயலர் ஆமீர் அப்துல்லா ஆகியோர் மீதும் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தலிபான் இயக்கத்தை வழிநடத்தும் ஹக்கானி குழுவினருக்கும், ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீது கர்சாயுக்குமிடையே சமரச முயற்சிகளைப் பாகிஸ்தான் அரசு மேற்கொண்டு வருகிறது. அதன்படி, ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க கூட்டுப் படையினரை வெளியேற்றுவது உள்ளிட்டவை குறித்து பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதனிடையே, ஹக்கானி பிரிவின் சிரேஷ்ட தலைவர் நசீருதீன் ஹக்கானி உள்ளிட்டோர் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருப்பதால் பாகிஸ்தானின் சமரச முயற்சிகள் பாதிக்கப்படும் என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா மட்டுமன்றி ஐ.நா. உறுப்பு நாடுகளும் நசீருதீன் ஹக்கானி உள்ளிட்டோரின் சொத்துகள், வங்கிக் கணக்குகள் ஆகியவற்றை முடக்க வலியுறுத்தப்படும். இதன்மூலம், பாகிஸ்தான் அரசும், ஹக்கானி பிரிவினர் மீது நடவடிக்கை எடுக்க நிர்ப் பந்திக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

# சியாச்சினிலிருந்து படை வாபஸ் விவகாரம்: பேச்சு நடத்த இந்தியாவுக்கு பாக். அழைப்பு!

லாகூர், ஜூலை 26

சியாச்சினிலிருந்து படைகளை வாபஸ் பெற்றுக்கொண்டு, இரு நாடுகளுக்கிடையேயான எல்லைப் பிரச்சினையை சுமுகமாகப் பேசித் தீர்த்துக்கொள்ள இந்தியாவுக்குப் பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி அழைப்புவிடுத்துள்ளார்.

அமெரிக்காவிலிருந்து வெளிவரும் 'டெய்லி ரைம்ஸ்' பத்திரிகைக்கு லாகூரில் வெள்ளிக்கிழமை சர்தாரி பேட்டியளித்தார். இந்தப் பேட்டியின்போது, சியாச்சினிலிருந்து படைகளை வாபஸ் பெற்று பேச்சுகளில் ஈடுபட இந்தியாவுக்கு அழைப்பு விடுத்தார்.

சியாச்சினில் இந்தியாவும், பாகிஸ்தானும் படைகளை நிறுத்தியுள்ளன. இங்கு நிறுத்தப்பட்டுள்ள வீரர்களுக்கு இரு நாடுகளும் அதிகளவில் பணத்தை செலவழித்து வருகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியா ஒரு வீரருக்கு நாளுக்கு 2,250 ரூபாயையும், பாகிஸ்தான் ஒரு வீரருக்கு நாளுக்கு 50 ரூபாயையும் செலவழித்து வருகின்றன. இப்படி பாதுகாப்பு வீரர்களுக்காக இரு நாடுகளும் வீணாகப் பணத்தை செலவழித்து வருகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இரு நாடுகளும் சியாச்சினிலிருந்து படைகளை வாபஸ் பெற்றுக்கொண்டால் இந்தப் பணம் முழுவதும் மிச்சமாகும். இதை இரு நாடுகளும் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தலாம். இரு நாடுகளுக்கு மிடையே நீடிக்கும் எல்லைப் பிரச்சினையை சுமுக மாகப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் அஷிப் அலி சர்தாரி தெரிவித்தார்.



உக்ரைனிலுள்ள யால்டாவில் உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யானுகோவிச், ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புடினை கைகுலுக்கி வரவேற்கிறார்.

# பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியாவில் தொடரும் கடும் நிலநடுக்கங்கள்

மணிலா, ஜூலை 26

தென்கிழக்கு ஆசிய நாடுகளான பிலிப்பைன்ஸிலும், இந்தோனேஷியாவிலும், கடல் பகுதியிலும் சனிக்கிழமை கடும்

உலக அரங்கில்

பூகம் பம் ஏற்பட்டது.

பிலிப்பைன்ஸில் தொடர்ந்து 3 தடவைகள் ஏற்பட்ட நிலநடுக்கங்கள் ரிச்டர் அளவு கோலில் 7.3 முதல் 7.6 வரையிலான அலகுகளில் பதிவாகின.

எனினும், சேதவிவரம் உடனடியாக வெளியாகவில்லை. ஆழிப்பேரலை எச்சரிக்கை அறிவிப்பும் வெளியிடப்பட வில்லை.

சுமார் 7 ஆயிரம் தீவுகளுக்கு மேல் உள்ள பிலிப்பைன்ஸில் கடலுக்கடியில் சுமார் 600 கி.மீ. ஆழத்தில் பூகம்பம் மையம் கொண்டிருந்தது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இலங்கை நேரப்படி அதிகாலை 3.30 மணிக்கு முதல் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது 7.3 ஆக பதிவானது.

அடுத்த சிறிது நேரத்தில் இதைவிட அதிகமாக இரு தடவைகள் நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. சுமார் ஒருமணி நேரத்துக்குள் 3 தடவைகள் நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. கடற்கரைப் பகுதியில் வசிக்கும் மக்கள் பலர் இந்த நிலநடுக்கங்களை உணர்ந்துள்ளனர்.

இந்தோனேஷியாவின் வடக்கு சுமத்ரா பகுதியிலும் சனிக்கிழமை நிலநடுக்கம் உணரப்பட்டது. ரிச்டர் அளவுகோலில் 6.0 என்ற அளவில் பதிவான இந்த நிலநடுக்கத்தால் பெரிய அளவில் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

மெண்டலிங் நாடால் மாவட்டத்தில் நிலநடுக்கத்தால் பீதியடைந்த மக்கள் தெருக்களுக்கு ஓடிவந்தனர். இப்போது அங்கு சகஜநிலை திரும்பிவிட்டது. ஆழிப் பேரலை ஏற்படும் வாய்ப்பு இல்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் ஊடக அனுசரணையுடன் நடந்த புலமைப்பரிசில் கருத்தரங்கின் பதிவுகள்




உதயன் ஊடக அனுசரணையுடன் கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் நேற்று நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான கருத்தரங்கில் வளவாளர் ஒருவர் மாணவர்களுக்கு விளக்கமளிப்பதையும் கலந்துகொண்ட மாணவர்களையும் ஆர்வத்துடன் மாணவர்களை அழைத்துவந்த பெற்றோர்களையும் படங்களில் காணலாம்.

# பொதுக்கட்டடங்களிலிருந்து படையினர் வெளியேறுவர் உரிமையாளர் அங்கு மீளக்குடியமர வாய்ப்புக் கிட்டும்

## இராணுவத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 26

பொதுமக்களின் கட்டடங்களில் இருந்து இராணுவத்தினர் வெளியேறவேண்டும் என்பது அரசாங்கத்தின் விருப்பமாகும். அதன்மூலம் அக்கட்டடங்களை உரிமையாளர்கள் மீளப் பெற்றுக்கொள்ளலாம். அதன் காரணமாக அவர்கள் அங்கு குடியேறமுடியும். இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் ஜகத்ஜயசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு சாந்திபுரத்தில் இராணுவத்தின் 68 ஆவது பிரிவுக்காக அமைக்கப்பட்ட கட்டடத்தொகுதியை திறந்து வைத்துப்பேசுகையில் இப்படிக்கூறினார்.

கெமுனு வொட்ஸ் 7 ஆவது பிரிவு வீரர்களால் வழங்கப்பட்ட சம்பிரதாய அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட பின்னர் அணி வகுப்பு மைதானத்தில் விசேட அணி வகுப்பு மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வுகளுக்கு முன்பதாக பௌத்த பூஜை நிலையத்தில் இராணுவத் தளபதி மலர்கள் வைத்து வணங்கினார். வண. அடம் பாகஸ்கடகல்யாண திஸ்ஸநாயக்கதேரர் சமயச்சடங்குகளை நடத்தி அவ்விடத்தை ஆசீர்வதித்ததுடன் செற்பிரித் ஓதினார்.

முற்பகல் 10.20 மணி சுபவேளையில் தளபதி ஜயசூரிய கட்டடத் தொகுதியின் ஞாபகார்த்த பெயர்ப்பலகையைத் திறந்து வைத்தார். கட்டடத்தொகுதி வளவில் மா மரக்கன்று ஒன்றையும் நாட்டினார்.

இராணுவத்தளபதி ஜகத் ஜயசூரிய பின்னர் படைவீரர்கள் மத்தியில் உரை நிகழ்த்துகையில் மேலும் கூறியவை வருமாறு:-

சீனாவிலிருந்து கிடைத்துள்ள முன் கூட்டியே தயாரிக்கப்பட்ட தொழில்நுட்ப சாதனங்களால் இம்மாதிரி கட்டடங்களை உருவாக்கமுடிந்துள்ளது.

பொதுமக்களுக்குரிய கட்டடங்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேறவேண்டும் என்று அரசாங்கம் விரும்புகின்றது. அதன்மூலம் அக்கட்டடங்களுக்குரியவர்கள் அவைகளை பெற்றுக்கொண்டு குடியேறமுடியும். அதன் மூலம் குறித்த பகுதிகளில் மாமூல் நிலைமையை உருவாக்க முடியும். இப் பகுதிகளில் பொது மக்களின் மீள் வாழ்வினை உறுதி செய்ய வேண்டும். அதற்கு அனுசரணைய புரிய வேண்டும். திருமணம் முடிந்தவர்களுக்கும் ஏனைய பிரிவினருக்குமான வசிப்பிடங்கள் தயாரான பிறகு அவர்கள் அங்கு குடியேற முடியும். அங்கு தம் குடும்பங்களுடன் வாழ்ந்து கொண்டு அப்பகுதிக்கும் பணியாற்ற முடியும்.



எதிர்காலத்தில எந்தவிதமான சவாலையும் எதிர்கொள்ளும் வகையில் பாதுகாப்பு உட்கட்டுமாணங்களை நாடு முழுவதும் பலப்படுத்தும் அரசாங்கத்தின் வியூகத்துக்கமைவாக இந்த தலைமையக கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு படையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது - என்றார்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் நடைபெற்றுவரும் கண்ணிவெடி அகற்றுதல், பாலம் கட்டுதல், கட்டட கட்டுமாணங்கள் மற்றும் ஏனைய படைத்தரப்பினர் சம்பந்தப்பட்டுள்ள மனிதாபிமானப் பணிகளின் முன்னேற்றம்பற்றியும் இராணுவத் தளபதி இந்த விஜயத்தின்போது நேரில் பார்த்து அறிந்துகொண்டார்.

கட்டடத் தொகுதியின் திறப்பு விழாவினையொட்டி இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜயசூரிய வந்து சேர்ந்தபொழுது முல்லைத்தீவு பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஹசன்னசில்வாவினால் அமோகமாக வரவேற்கப்பட்டார். (ப)

# தேசிய பாடசாலைகளின் முகாமைத்துவ உதவியாளர் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைகள் ஒக்ரோபரில்

கொழும்பு, ஜூலை 26

மத்திய அரசாங்கத்தின் கீழ் தேசிய பாடசாலைகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் பதவி வகிப்பவர்களுக்கான முதலாவது, இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சைகள் ஒக்ரோபர் மாதத்தில் நடைபெறவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். முதலாவது பரீட்சை தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங் குக்கோவை, அபிவிருத்தி நிர்வாகம் ஆகிய பாடங்களையும், இரண்டாவது பரீட்சை அலுவலக முகாமைத்துவம் மற்றும் அலு வலக முறைகள் ஆகிய பாடங்களைக் கொண் டிருக்கும்.

விண்ணப்பமுடிவு திகதி ஓகஸ்ட் மாதம் எட்டாம் திகதி ஆகும்.

மேலதிக விவரங்களை இம்மாதம் 23 ஆம் திகதி 1664ஆம் இலக்க அரச வர்த்தமானிப் பத்திரிகையில் பெற்றுக் கொள்ள முடியும். (க)

# மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறிக்கான பதிவு


யாழ்ப்பாணம், ஜூலை 26

லாவா வைத்தியசாலையால் நடத்தப் படும் மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறிக்கான நேர்முகத் தேர்வு நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சி நெறிக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 28 ஆம் திகதி வரைக் குமே நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் பயில விரும்பு பவர்கள் மேற்படி திகதிக்கு முன்னர் KNOWLEDGE UNIVERSE இல. 75, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரி யில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)


# கண்ணீர் அஞ்சலி



## வல்லிபுரம் கணேசலிங்கம்

(எரிக்கணேஸ்)

21.07.2010 அன்று சிவபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயருறுவதுடன் அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ நதியா நகை மாளிகை அன் டிஜிற்றல் கலர் லாப்.


# சாவகச்சேரி பழனி ஆண்டவர் வேல் பவனிவிழா இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 26

சாவகச்சேரி டச்சுவீதி ஸ்ரீ பழனி ஆண்டவர் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தின் ஸ்ரீ பழனி வேல் பவனி விழா நிகழ்வு இன்று திங்கள் பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி நகரில் நடைபெறவுள்ளது.

சமூக கலாசூரி வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும், சிறப்பு விருந்தினர்களாக இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி ச.கணபதிப்பிள்ளை, இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கா.இீராசதுரை, சாவகச்சேரி நகர், கிராம அலுவலர் வி.சரவணநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

வேல் பவனியில் ஆனைக்கோட்டை ரூபன் குழுவினரின் சீனடி சிலம்படி, தீப்பந்தம் சுழற்றுதல், கிராமிய நடனங்கள், தவில் நாதஸ்வர இசை நிகழ்வுகள், கரகாட்டம், காவடியாட்டம் ஆகியன இடம்பெறவுள்ளன.

பழனி வேல் பவனியானது ஆலயத்திலிருந்து அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் டச்சு வீதி,இராமலிங்கம் வீதி, கண்டி வீதி, தபாற்கந்தோர் வீதி, செருத்தல்பிள்ளையார் ஒழுங்கையூடாக டச்சு வீதி, கண்டுவில் ஒழுங்கை, ஏ-9 கண்டி வீதி - காளி கோயில் ஒழுங்கை வழியாக - ஆலயத்தை வந்தடையும்.

இந்த நிகழ்வின்போது ஆலய தொண்டர்கள், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள், பொலிஸார் ஏ-9 வீதிகளில் வீதி ஒழுங்குப் பணியில் ஈடுபடுவர் எனவும் ஆலய வேல் விழாவின் தொண்டரான மா.விவே கானந்தன் தெரிவித்தார். (ஐ-131)

# யுத்தக் குற்றங்களை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மூன்று கோரிக்கைகளை முன் வைத்து இந்தப் பாதயாத்திரை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி ஜெனிவாவில் உள்ள ஐ.நா. அலுவலகத்தை இந்த பாத யாத்திரை சென்றடையும். அப்பொழுது மேற்கண்ட கோரிக்கைகள் அடங்கிய மனு கையளிக்கப்படும். மனு கையளிக்கப்படுவதற்கு முன்னர் ஜெனிவாவில் மாபெரும் எழுச்சிக் கவனஈர்ப்பு இடம்பெறும். இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளும்படி புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பாதயாத்திரைக்கு சிவந்தன் என்பவர் தலைமை வகிக்கிறார். வழி நெடுகிலும் சிவந்தனுடன் பாதயாத்திரையில் கலந்து கொள்ளும்படி அந்நாடுகளில் வாழும் தமிழ் மக்களுக்கும், தமிழ் உணர்வாளர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று அக வணக்கத்துடன் ஆரம்பித்த இந்த நிகழ்வில் பிரிட்டனின் இளையோர் அமைப்பு, நாடு கடந்த தமிழீழ அரசு, அக்ட் நவ், பிரிட்டிஷ் தமிழர் பேரவை ஆகியவற்றின் பிரதிநிதிகளும் , இலங்கையின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடுகடந்த அரசின் பிரதிநிதியுமான எஸ்.ஜெயானந்தமூர்த்தி மற்றும் பாதயாத்திரையை ஆரம்பித்துள்ள சிவந்தன் ஆகியோரும் [illegible].

பேரணியில் கலந்துகொண்டோர் ஆரம்பத்தில் தமது கோரிக்கைகளை முன்வைத்துப் பாடல்களைப் பாடிச்சென்றனர். பின்னர் தமது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாதவர்களாக இரவு நேரம் என்றும் பாராது இலங்கை அரசுக்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்பிச் சென்றனர்.

கறுப்பு ஜூலை என்பதாலும், தமிழ் மக்களின் உள்ளக்கிடக்கைகளை வித்தியாசமான முறையில் வெளிப்படுத்தவும் இரவு நேரம் இந்தப் போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்ட போதிலும், குழந்தைகளைத் தாங்கிய தாய்மார், சிறியவர்கள், பெரியோர் என்று 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

பாத யாத்திரையில் கலந்துகொண்டவர்கள் மெழுகுவர்த்திகளையும், ஒளி விளக்குகளையும், பதாகைகளையும், பிரிட்டன் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் கொடிகளையும் ஏந்திச் சென்றனர். தமது கோரிக்கைகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களையும் வழங்கிச் சென்றனர்.

சிவந்தன் பிரிட்டனின் கடற்கரை நகரான டோவரைச் சென்றடைந்து அங்கிருந்து பிரான்ஸின் கடற்கரையான கலையை அடைவார். பின்பு அங்கிருந்து பாரிஸ் நோக்கி நடந்து, ஜெனிவா நோக்கிச் செல்ல இருக்கின்றார். இவருடன் அந்தந்த நாடுகளைச் சேர்ந்த தமிழ் மக்களும் சேர்ந்து கொள்வர். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கமறியல் சிறைச்சாலைத் தாக்குதல்; உரிய விசாரணைகளை நடத்த வேண்டும்



## விஜயகலா எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜூலை 26

கொழும்பு விளக்கமறியல் சிறைச் சாலையில் தமிழ்க் கைதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் சனிக்கிழமை தமிழ் அரசியல் கைதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் 75 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இங்கு பெரும் இடநெருக்கடி காணப்படுகின்றது. இதுகுறித்து சிறைக் காவலர்களுடன் கைதிகள் பேச்சுவார்த்தை நடத்தியபோதே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இத்தாக்குத லில் கைதியொருவர் காயமடைந்து சிறைச் சாலை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலின்போது 1983ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரம் தொடர் பாகவும், நினைவூட்டி கைதிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்விடயம் குறித்து அரசாங்கம் உரிய விசாரணைகளை நடத்த வேண்டும். நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக் கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யுமாறு கோரிவருகின்றனர். பல வருடங்களாக சந்தேகம் எனும் பேரில் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகள் விசாரணை என்ற பெயரில் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர்.

விசாரணையுமின்றி விடுதலையுமின்றி வாழ்க்கை வெறுத்த நிலையில் வாழ்ந்துவரும் இந்த அரசியல் கைதிகளைப் பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களின் விடுதலையும் துரிதப் படுத்தப் படவேண்டும்.

இதேபோல் தமிழ் அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டியது அவசியமாகும். நாட்டிலுள்ள பல சிறைச்சாலைகளிலும், 765 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கொழும்பு, வெலிக்கடைச் சிறைச்சாலை பெண்கள் பிரிவில் 55 பெண்கள் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் விடுதலையைத் துரிதப்படுத்த சம்பந்தப்பட்ட அமைச்சும் அரசாங்கமும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் நடத்தப்பட்ட தாக்குதலானது கைதிகள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே இதுகுறித்து உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் - என்றுள்ளது. (ஐ)

## வெள்ளைவானில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளது.இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

வவுனியா வாடிவீட்டு உரிமையாளரான தோணிக்கல், சிவன் கோயிலடியைச் சேர்ந்த மாரிமுத்து கதிர்காமராசா (வயது-48) என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வழமைபோல தனது கடமைகளை முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அவரது வீட்டுக்குச் சமீபமாக வைத்து வெள்ளை வானில் வந்தோரால் வழிமறிக்கப்பட்டுக் கடத்தப்பட்டார்.

கண்களும், கைகளும் கட்டப்பட்ட நிலையில் கடத்திச் செல்லப்பட்டு, பின்னர் இவரது கைத்தொலைபேசி மூலம் கடத்தல்காரர்களால் இவரது குடும்பத்தாருடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. கப்பம் வழங்கவேண்டும் என்று அவர்களிடம் கோரப்பட்டது.

இதனையடுத்து ஆறுலட்சம் ரூபா கப்பம் செலுத்தப்பட்டது. பின்னர் குறித்த நபர் விடுவிக்கப்பட்டதாக அறியவந்தது.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-16)

## அகதிகள் எனக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிக்க - தடுத்து நிறுத்த இலங்கை அரசு தீவிர கண்காணிப்பை மேற்கொண்டுள்ளது.அனைத்து நாடுகளும் அவரவர் எல்லைக்குள் உள்ள கடற்பகுதியை மாத்திரம் கண்காணிப்பது போதாது. சர்வதேச கடற்பகுதிகளையும் கண்காணிக்க வேண்டும்.

இல்லாவிடால் தற்போதைய நவீன தொழில்நுட்ப உதவியுடன் தீவிரவாதிகள் எல்லை தாண்டிய பயங்கரவாத செயல்களிலும் ஈடுபடும் வாய்ப்பு உருவாகி விடும்.

இலங்கையில் இருந்து அகதிகள் என்று சொல்லிக்கொண்டு வருகின்றவர்களின் புகலிடக் கோரிக்கையை சர்வதேச நாடுகள் ஏற்கவே கூடாது.

சட்டத்துக்குப் புறம்பான கடத்தல், சட்ட விரோத வணிகம், தீவிரவாதம் ஆகியவற்றை ஊக்குவிப்பதாக அது அமைந்து விடும். இலங்கையில் இருந்து வருபவர்களின் புகலிடக் கோரிக்கைக்கு எந்த நாடும் செவிசாய்க்கவே கூடாது.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

## தனியார் பஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்துச் சபை முகம் கொடுக்கத்தயார் என போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கம சவால் விடுத்துள்ளார்.

இதேவேளை, தனியார் பஸ்சேவை பகிஷ்கரிப்பை எதிர்கொள்வதற்காக இலங்கைப் போக்குவரத்துச் சபை தயாராக உள்ளது எனவும் சுமார் 400 பஸ்களை சேவையில் ஈடுபடுத்தப்போவதாகவும் சபையின் தலைவர் எம்.டி.பந்துசேன தெரிவித்துள்ளார்.

## கொக்குவில் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்புத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

கொக்குவில் பிரதேசத்தின் ஏழு கிராம அலுவலர் பிரிவில் நேற்று டெங்கு ஒழிப் புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

கொக்குவில் பிரதேச இராணுவப் பொறுப்பதிகாரி கப்டன் பண்டார, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.அனோஜன் ஆகியோரின் தலைமையில் இந்த டெங்கு ஒழிப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதில், கோண்டாவில் இந்து மகா வித்தி யாலயப் பாடசாலைச் சமூகமும், பொதுமக் கள், கிராம அலுவலர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ஐ-14)

## கூட்டமைப்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களும், முக்கியஸ்தர்களும் பேச்சு நடத்தி ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய கட்சிகள் இவை என்பது குறிப் பிடத்தக்கது.

இந்தச் சந்திப்பு கடந்த 20ஆம் திகதி நடைபெறவிருந்த போதும் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு முக்கியஸ்தர்கள் இந்தியாவுக்குச் சென்றிருந்ததமையால் இச்சந்திப்பு நடைபெறவில்லை. (அ-சி)

## முன்னாள் புலிப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்ட புலிப் போராளிகள் வெலிகந்தயில் எதுவித விசாரணையும் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இங்கு எத்தனைபேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்? இவர்கள் மீது வழக்குத் தொடரப்படுமா? போன்ற விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இதையடுத்து மட்டக்களப்பு மாவட்ட எம்.பிக்களான பொன். செல்வராசா, ப.அரிய நேத்திரன், எஸ்.யோகேஸ்வரன் ஆகியோர் வெலிகந்த சென்று நிலைமையை நேரில் பார்வையிடுவதற்காக பாதுகாப்பு அமைச்சி டம் அனுமதி கோரியுள்ளனர். (அ-சி)

## இலங்கைத் தமிழர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர் இராஜேந்திரன் இராமகிருஷ்ணன் (வயது - 35) என அடையாளம் காணப்பட் டுள்ளது.

தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளாகி லண்டன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட பின்னர் மாரடைப்பு ஏற்பட்டதால் அவர் அங்கு மரணமானார் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்விபத்துச் சம்பவத்தில் உயிரிழந்த இராமகிருஷ்ணனின் மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் ஆகியோர் இலங்கையிலேயே வசித்து வருகின்றனர். (சி)


மரண அறிவித்தல்

*சின்னத்துரை செல்வரட்ணம் (விதானை)*

நக்கீரன் வீதி, அல்வாய் வடக்கைச் சேர்ந்த சின்னத்துரை செல்வரட்ணம் (விதானை) நேற்று (25.07.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பவுண்மலரின் அன்புக் கணவரும் சதீஸ்குமார் (கண்ணன்), ரஜனி (நந்தா), அசோக்குமார், லலித்குமார் (லலி), சுரேஸ்குமார் (சுரேன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மாலை நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத் துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.



விவசாய விஞ்ஞானம்

A/L 2010

பயிற்சிப் பரீட்சையும், கருத்தரங்கும்

யூலை 28, 29, 31
நேரம் மு.ப.9 மணி

திரு. வை.சசிக்குமார்

★ அனுமதிகளை 27ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளவும்.

DMI - Jaffna


## மந்திகை சந்தைக் கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பம்

வடமராட்சி, ஜூலை 26

வருடக்கணக்கில் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த மந்திகை பொதுச்சந்தைக் கட்டட வேலைகள் அடுத்தமாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் ச.சந்திரயோகன் தெரிவித்தார்.

மூன்று கட்டங்களாக மாடிக்கட்டடமாகக் கட்டப்படவுள்ள இப் பொதுச் சந்தையின் அத்திபார வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. இரண்டாம் கட்டமாக கீழ்த்தளக் கட்டட வேலைகளும், மூன் றாம் கட்டமாக மாடிக்கட்டட வேலைகளும் முறையே நடைபெற வுள்ளன.

இரண்டாம், மூன்றாம் கட்டட வேலைகளை நிறைவுசெய்ய சபை நிதியிலிருந்து 92 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மந்திகை பொதுச்சந்தைக்கான கட்டட வேலைகள் இரண்டு வருடத்துக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டு அத்திபாரத்துடன் கட்டடப்பணிகள் நின்றுவிட்டன. அதன்பின் னர் கட்டடப்பணிகள் முன்னெடுக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-236)

## தமிழ்க் கூட்டமைப்பினரை தமிழரின் ஏக பிரதிநிதிகளாகக் கருத முடியாது!

### மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் அல்லர் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் நேற்று அறிவித்துள்ளார்.

அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பில் ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் அரசு பேச்சு நடத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் சமகால அரசியல் நிலைவரம் குறித்து ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களில் ஒரு சாராரை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. எனவே அரசு ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் கட்டாயம் பேச்சுகளை நடத்த வேண்டும். அரசமைப்புத் திருத்தம் குறித்து தமிழ்க் கூட்டமைப்புடம் மாத்திரமே அரசு பேசி வருகின்றது.

ஏனைய தமிழ்க் கட்சிக்களுடனும் பேசுவதன் மூலமே ஒரு பொருத்தமான தீர்வை அடைய முடியும். இந்த விடயம் சம்பந்தமாக நாம் அரசுடன் தற்போது இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற தமிழ்க் கட்சிகளான இ.தொ.க., மலையக மக்கள் முன்னணி, தேசிய தொழிலாளர் காங்கிரஸ் போன்றவற்றுடன் பேசி வருகின்றோம்.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

## இந்தியக் குழு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தத்தில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு இந்திய அரசு நிதியுதவி வழங்கியுள்ளது. அத்துடன் 50ஆயிரம் வீடுகளை மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு நிர்மாணிக்கவும் நிதியுதவி வழங்க இந்திய அரசு உதவிவழங்க உள்ளது.

இந்த நிலையில் இந்த நிதி தமிழ் மக்களை முறையாகச் சென்றடைகின்றதா என்பதனைக் கண்டறிவதற்குச் சிறப்புத் தூதுவர் ஒருவரை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இந்திய மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். இதையடுத்து இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இலங்கைக்கு குழு ஒன்றை அனுப்பிவைக்க உறுதி அளித்தார்.

இந்த நிலையிலேயே அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாதுகாப் புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரைக் கொண்ட குழு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடுப்பகுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கின்றது. இந்தக் குழு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்வாறான தீர்வுத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பது குறித்தும் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தியமை மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்தும் இந்தியாவுக்கு விளக்கம் அளிக்க உள்ளது. (அ-சி)


மரண அறிவித்தல்

கந்தன் கணபதி

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், கைதடி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் கணபதி நேற்று (25.07.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சீதேவியின் அன்புக் கணவரும், சின்னம்மா, நாகேந்திரம் (முன்னாள் ஊழியர், நடேஸ்வராக் கல்லூரி), காலஞ்சென்ற சிவதாசன் மற்றும் குகதாசன், நாகம்மா (கைதடி நவீல்ட் பாடசாலை), மகேஸ்வரி (ஆசிரியை, விநாயகர் முன்பள்ளி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற குகநேஸ்வரன் மற்றும் அகிலேஸ்வரி, கௌரி, அன்னபூரணி, பரமசாமி, ரவீந்திரன் (ரெலிக்கொம்) ஆகியோரின் பாசமிகு மாமனும் யோகேஸ்வரி, சுரேஸ்குமார் (அமெரிக்கா), லயன் சுபாதரிசன் (யாழ்.செயலக புள்ளிவிபரவியல் கிளை), சுபாதரிசினி, சுதர்சன் (லண்டன்), அருள்குமார் (தொழில் திணைக்களம், வவுனியா), சிவரஜனி (வவுனியா), சிவதரிசினி, மயூரன், விமல்ராஜ் (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), தவராஜ் (இந்தியா) ஆகியோரின் அன்புப் பேரனும் ரகீபன் சிந்துஜா (அப்பலோ மருத்துவமனை, கொழும்பு), மாதங்கி (அமெரிக்கா), விநோசன், சதீசன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2010) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2 மணிக்கு கைதடி ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
கைதடி மத்தி. பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.